REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA
www.thinakaran.lk
/ Thinakaran.lk / ThinakaranLK

2022 மார்ச் 26 சனிக்கிழமை

# தினகரன்

THINAKARAN தினகரன்

வரு. 90 இல. 73 | Saturday 26, March, 2022 | 16பக்கங்கள் | 30/-

## தங்கத்தின் விலை 167,000 ரூபாவாக திடீரென அதிகரிப்பு



உலக சந்தையில் தங்கத்தின் விலை தொடர்ந்து அதிகரித்து வருவருகிறது.

அதன்படி தங்கத்தின் விலை நேற்று மேலும் அதிகரித்துள்ளதாக கொழும்பு செட்டியார் தெருவிலுள்ள நகை வியாபாரிகள் தெரிவித்துள்ளனர். 06

### 05 முக்கிய விடயங்களின் கீழ் த.தே.கூ. - ஜனாதிபதி சந்திப்பு

# நாட்டை கட்டியெழுப்புவதற்கு ஒன்றிணைந்து செயற்பட அழைப்பு

### த.தே.கூட்டமைப்பு தலைவர்களிடம் ஜனாதிபதி தெரிவிப்பு









"நாட்டைக் கட்டியெழுப்ப ஒன்றிணைந்து செயற்படுவோம்" என ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிடம் தெரிவித்தார்.

நாட்டு மக்கள் அனைவரினதும் தலைவராக, அனைத்து மக்கள் மீதும் தாம் ஒருசேர கவனத்தைச் செலுத்துவதாகவும் ஜனாதிபதி குறிப்பிட்டார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் நேற்று, (25) முற்பகல் ஜனாதிபதி அலுவலகத்தில் நடைபெற்ற கலந்துரையாடலின் போதே ஜனாதிபதி இவ்வாறு தெரிவித்தார்.

நீண்டகாலமாக தடுத்து வைக்கப்பட்டுள்ள சந்தேக நபர்களை விடுவித்தல், குற்றம் சாட்டப்பட்டு வழக்குத் தொடரப்படாத சந்தேக நபர்கள் தொடர்பில் எதிர்கால நடவடிக்கைகளை முன்னெடுத்தல், உண்மையைக் கண்டறியும் பொறிமுறையை ஆரம்பித்தல், பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தை மறுசீரமைத்தல், காணாமற்போனோர் தொடர்பான பிரச்சினைகளுக்கான தீர்வுகள் உள்ளிட்ட பல விடயங்கள் தொடர்பில் அரசாங்கம் செயற்பட்டு வருவதாக ஜனாதிபதி தெரிவித்தார்.

தொடர்ந்தும் ஒன்றிணைந்து செயற்படுவதன் மூலம், வடக்கு கிழக்கு உட்பட நாட்டின் அனைத்து மக்களின் நோக்கங்களையும் நிறைவேற்றி, நாட்டை அபிவிருத்தியை நோக்கி நகர்த்த முடியுமென ஜனாதிபதி சுட்டிக்காட்டினார்.

> **ஐக்கிய இலங்கைக்குள் அனைத்து இனங்களையும் சுபீட்சத்தை நோக்கி கொண்டு செல்வோம்**
> – இரா.சம்பந்தன்

ஐக்கிய இலங்கையில் அரசியல் தீர்வின் மூலம், நாட்டை சுபீட்சத்தை நோக்கி நகர்த்துவது தமது எதிர்பார்ப்பாகும் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் ஆர். சம்பந்தன் இதன் போது தெரிவித்தார். நாம் ஒரு நாடாக ஒன்றுபட வேண்டும். ஒரு நாடு, ஒரே மக்கள் என்று செயற்பட்டு, நாட்டின் தற்போதைய நிலைமையிலிருந்து, நாட்டை விடுவிப்பது அனைத்துத் தரப்பினரின் பொறுப்பாகுமென இரா. சம்பந்தன் தெரிவித்தார். இலங்கை, கிழக்கு சுவிட்சர்லாந்தாக மாறுவதை 06

## மக்கள் சேவைக்கு தம்மை முழுமையாக அர்ப்பணித்தவர்கள்

### செல்லச்சாமி, தங்கேஸ்வரி குறித்து பிரதமர் அனுதாப உரை



**லோரன்ஸ் செல்வநாயகம்**

மறைந்த சிரேஷ்ட அரசியல்வாதியான எம். எஸ் செல்லச்சாமி போக்குவரத்து இராஜாங்க அமைச்சராகவும் கைத்தொழில் இராஜாங்க அமைச்சராகவும் தபால்துறை பிரதியமைச்சராகவும் நாட்டு மக்களுக்கு சிறந்த சேவையாற்றியவரென பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ 06

## அமைச்சுக்கு தெரியாமல் ரயில் கட்டண அதிகரிப்பு

### தடுத்து நிறுத்தினார் திலும் அமுனுகம



ரயில்வே திணைக்களத்தினால் நேற்று முன்தினம் (24) வியாழக்கிழமை வெளியிடப்பட்ட கட்டண திருத்தம் இடைநிறுத்தப்பட்டுள்ளது.

புதிய கட்டண திருத்தம் தொடர்பில் திங்கட்கிழமை அறிவிக்கப்படும் என தெரிவித்த போக்குவரத்து அமைச்சர் திலும் அமுனுகம, தற்போதுள்ள ரயில் கட்டணங்களில் 06

### எதிரணி அடிப்படையற்ற விமர்சனம்

## அரச வங்கித்துறை பலமாகவே இருக்கிறது

### அமைச்சர் ரமேஷ் பதிரண தெரிவிப்பு

**லோரன்ஸ் செல்வநாயகம்**



அரச வங்கிக் கட்டமைப்பில் வீழ்ச்சி ஏற்படக்கூடிய எத்தகைய சூழ்நிலையும் நாட்டில் காணப்படவில்லை. அரச வங்கிகள் தொடர்பில் எதிர்க்கட்சியினர் மேற்கொண்டு வரும் விமர்சனங்கள் அடிப்படையற்றவை. குறுகிய அரசியல் நோக்கங்களுக்காக 06

## நாசாவில் பணிபுரிந்த யாழ். தமிழர் மரணம்



அமெரிக்காவின் நாசா விண்வெளி மையத்தில் நீண்ட காலம் கடமையாற்றிய யாழ்ப்பாணம் குப்பிளான் கிராமத்தை சேர்ந்த தமிழ் விஞ்ஞானி 06

### மள்வானை காணி வழக்கின் விசாரணைகள்:

## பசிலுக்கு எதிரான வழக்கு குறித்து நீதிமன்று அறிவிப்பு



அமைச்சர் பசில் ராஜபக்ஷ மற்றும் திருகுமார் நடேசனுக்கு எதிரான மள்வானை காணி வழக்கின் மேலதிக விசாரணைகளை நடத்தப்போவதில்லை என சட்டமா அதிபர் திணைக்களம் கம்பஹா மேல் நீதிமன்றத்திற்கு அறிவித்துள்ளது.

## தமிழகம் வரும் ஈழத்தமிழருக்கு ஆதரவளிப்பது எமது கடமை

### அ.ம.மு.க செயலாளர் தினகரன் தெரிவிப்பு



"தமிழகத்தையொட்டிய கடற்பகுதியிலுள்ள திட்டுகளில் நிராதரவாக இறக்கிவிடப்படும் இலங்கைத் தமிழர்களை கடலோரக் காவல் படையும், இந்திய கடற்படையும் பாதுகாப்பாக அழைத்து வந்து கரை சேர்க்க வேண்டும்" என்று அ.ம.மு.க பொதுச்செயலாளர் 06

## கொழும்பில் பாரிய தீ


### 21 வீடுகள் எரிந்து நாசம்

### கிரேண்பாஸ் பகுதியில் இரவுவேளை சம்பவம்



கொழும்பு 14, கஜிமாவத்த பகுதியில் நேற்று முன்தினம் இரவு ஏற்பட்ட பாரிய தீ விபத்தில் 21 வீடுகள் தீக்கிரையாகியுள்ளன. 06

## ரஷ்யாவின் பிரமாண்ட போர்க் கப்பலை அழித்தது உக்ரைன்



ரஷ்யாவின் கட்டுப்பாட்டில் கடந்த மாதம் 27ந் திகதி முதல் இருந்து வருகிற பெர்டியன்ஸ் நகர் அருகே ரஷ்யாவின் பிரமாண்டமான போர்க் கப்பலான ஓர்ஸ்க்கை, உக்ரைன் படைகள் நேற்று முன்தினம் அழித்துள்ளன. 06

## நாட்டுக்காக மத்திய கிழக்கு நாடுகளுடன் பேச நாம் தயார்

### ஹாபிஸ் நஸீர் அஹமட் MP



எமது நாட்டுக்காக மத்திய கிழக்கு நாடுகளிலிருந்து ஐந்து அல்லது ஆறு பில்லியன் அமெரிக்க டொலர்களை முதலீடாகப் பெறும் பேச்சுவார்த்தைகளில் ஈடுபடும் முயற்சியில் இறங்க நாம் தயாராக உள்ளோம் என மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் ஹாபிஸ் நஸீர் அஹமட் தெரிவித்தார். ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையில் 06

### நீதிமன்ற அவமதிப்பு 2 ஆவது வழக்கு

## ரஞ்சன் ராமநாயக்க குற்றத்தை ஏற்பு



நீதிமன்ற அவமதிப்பு தொடர்பான இரண்டாவது வழக்கில், தான் குற்றத்தை ஒப்புக் கொள்வதாக முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ரஞ்சன் ராமநாயக்க நேற்று (25) உயர் நீதிமன்றத்துக்கு அறிவித்தார்.

இது தொடர்பிலான 06

## எரிபொருள் நிலையங்களில் போதியளவு எரிபொருட்கள்

### தேவைக்கு அதிகமாகவே உள்ளது – காமினி லொக்குகே



எரிபொருள் நிரப்பு நிலையங்களுக்கு அதிகளவான பௌசர்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ள போதிலும் எரிபொருள் தேவைக்கு அதிகமாகவே அங்கு இருந்தமையால் அவை திருப்பி அனுப்பப்பட்டுள்ளதாக எரிசக்தி அமைச்சர் காமினி லொக்குகே தெரிவித்துள்ளார்.

கொழும்பு பிரதேசத்திலுள்ள எரிபொருள் நிரப்பு நிலையங்களுக்கு அனுப்பப்பட்ட 06

## கடவத்தை பகுதியில் இருவர் சுட்டுக்கொலை

### பொலிஸார் தீவிர விசாரணை

கொழும்பு, கண்டி வீதியில் கடவத்தை, 9 ஆம் கட்டை பகுதியில் நேற்று முன்தினம் இரவு அடையாளம் தெரியாத ஆயுததாரிகளால் இருவர் சுட்டுக் கொலை செய்யப்பட்டனர்.

மோட்டார் சைக்கிளில் பயணித்த இருவரை , மற்றொரு மோட்டார் சைக்கிளில் வந்த இருவர் சுட்டுக் கொன்றுவிட்டு 06

## ஆயுதத்தால் முடியாது போனதை டொலர்களால் செய்ய முயற்சி

### TNA குறித்து உதய கம்மன்பில காட்டம்



ஆயுதத்தால் செய்ய முடியாததை டொலரினால் செய்துகொள்ளும் எதிர்பார்ப்பிலேயே, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, சர்வகட்சி மாநாட்டில் பங்கேற்றதாக பிவித்துரு ஹெல உறுமய கட்சியின் தலைவர் உதய கம்மன்பில தெரிவித்துள்ளார்.

மல்வத்து மாநாயக்க தேரரை நேற்றுமுன்தினம் சந்தித்தபோது அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். 06

## சஜித் பிரேமதாசவுக்கு அரசியலமைப்பு பற்றி தெரியாது

### ஜனாதிபதி தேர்தல் குறித்த கருத்து தொடர்பில் சுமந்திரன் MP



அரசியமைப்பின் பிரகாரம் தற்போது ஜனாதிபதித் தேர்தலை நடத்த முடியாது. இந்த விடயம்கூட சஜித் பிரேமதாசவுக்கு தெரியவில்லை என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ சுமந்திரன் தெரிவித்துள்ளார்.

கொழும்பில் ஊடகம் ஒன்றின் கேள்விக்கு பதிலளிக்கும் போதே அவர் இந்த விடயத்தினைக் குறிப்பிட்டுள்ளார். இதன்போது மேலும் கருத்து வெளியிட்ட அவர், 06

## 225 பேருமே எமக்கு தேவையில்லாதவர்கள்

### மக்கள் கூறும் நிலையில் எம்.பிக்கள்- மைத்திரி



**லோரன்ஸ் செல்வநாயகம்**

பாராளுமன்றத்தில் உள்ள 225 பேரும் எமக்குத் தேவையில்லையென நாட்டு மக்கள் கூறும் நிலை உருவாகியுள்ளதாக முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற மறைந்த நான்கு பாராளுமன்ற உறுப்பினர்களின் அனுதாபப் பிரேரணையில் 06

### விக்கல் வீராச்சாமி



இலங்கையில சனம் சாப்பிட முடியாம வாழ்க்கை நடத்த கஷ்டப்படுகுது எண்டு தமிழக ஊடகங்களில் வாற செய்திய பாத்தா பயமா இருக்கு....

அங்க மட்டுமா, இங்கத்த தமிழ் ஊடகங்களிலும் அதே நிலைமைதான், இப்படி பிரசாரம் செய்யவெண்டே ஒரு கூட்டம் கிளம்பி இருக்கு...!!!

90 ஆண்டுகால பாரம்பரியத்துடன் தமிழ் பேசும் மக்களின் தேசிய குரல்

# சர்வதேச செய்திகள்

## பெண்களின் பாடசாலைகளை திறக்க தலிபானுக்கு அழுத்தம்



ஆப்கானிஸ்தானில் பெண்கள் பாடசாலைகளை மீண்டும் திறக்க அமெரிக்காவும் ஏனைய மேற்கத்திய நாடுகளும் அழைப்பு விடுத்துள்ளன.

பெண்கள் உயர்நிலைப் பாடசாலையை திறந்த சில மணிநேரத்தில் தலிபான் மூடியதற்கு அவை கண்டனம் தெரிவித்தன.

அது தொடர்பில், பிரிட்டன், கனடா, பிரான்ஸ், இத்தாலி, நோர்வே, அமெரிக்கா ஆகிய நாடுகளும் ஐரோப்பிய ஒன்றியமும் கூட்டறிக்கை வெளியிட்டன.

தலிபான் எடுத்துள்ள முடிவு அதன் நம்பகத்தன்மைக்கும் உலக நாடுகளுக்கிடையே மதிக்கத்தக்க உறுப்பினராக விளங்கும் அதன் இலக்கிற்கும் பாதிப்பை ஏற்படுத்தும் என்று அதில் குறிப்பிடப்பட்டது.

தலிபான், ஆப்கானிய மக்களுக்கும் சர்வதேச சமூகத்தினருக்கும் அளித்துள்ள பொது உத்தரவாதங்களுக்கு அதன் அண்மைய முடிவு முரணானது என்று அறிக்கை தெரிவித்தது.

பெண்கள் பாடசாலையை மூடுவதால், பெண் குழந்தைகளுக்கு அது தீங்கிழைப்பதோடு மற்ற பாதகமான விளைவுகளையும் ஏற்படுத்தக்கூடும் என்று கூறப்பட்டது.

## வட கொரியாவின் சக்திவாய்ந்த ஏவுகணைச் சோதனை வெற்றி



வட கொரியா, அதிகச் சக்திவாய்ந்த ஏவுகணை ஒன்றைப் பாய்ச்சியுள்ளதாகக் கவனிப்பாளர்கள் கூறியுள்ளனர். அந்த சோதனை வெற்றி அளித்ததாக வட கொரியா தெரிவித்துள்ளது.

அந்த ஏவுகணைச் சோதனையை வட கொரியத் தலைவர் கிம் ஜொங் உன் தனிப்பட்ட முறையில் மேற்பார்வையிட்டதாக அந்நாட்டின் அதிகாரபூர்வச் செய்தி நிறுவனம் குறிப்பிட்டது.

இதுவரை பாய்ச்சப்பட்ட மிகச் சக்திவாய்ந்த ஏவுகணை அது என்று தெரிவிக்கப்பட்டது.

அமெரிக்காவுடன் மோதுவதற்கும் அணுவாயுதப் போர் ஏற்படக்கூடிய சூழலுக்கும் தயாராகும் வகையில் அந்த ஏவுகணைச் சோதனை நடத்தப்பட்டதாகத் கிம் கூறினார்.

வட கொரியாவின் தூண்டுதல்களுக்கு உறுதியான பதிலடிகளைக் கொடுக்க அமெரிக்காவும் தென் கொரியாவும் இணங்கியுள்ளன.

பிரசல்ஸில் ஜி7 உச்சநிலைச் சந்திப்புக்கு இடையில் அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் இந்த விவகாரம் குறித்து ஜப்பானியப் பிரதமர் புமியோ கிஷிடாவுடன் கலந்துபேசினார்.

ஏவுகணைச் சோதனைக்குக் கண்டனம் தெரிவித்த இரு தலைவர்களும் அதற்கு வட கொரியாவைப் பொறுப்பேற்கச் செய்யவும் ஒப்புக்கொண்டனர்.

## போரை முடிக்க ரஷ்யாவுக்கு பொதுச் சபையில் அழுத்தம்



உக்ரைனில் ரஷ்யா மோசமான நிலையை ஏற்படுத்தியதற்காக ரஷ்யாவை கண்டிப்பது, உக்ரைனிய பொதுக்களை பாதுகாப்பது மற்றும் உதவிகள் செல்வதற்கு அழுத்தம் கொடுக்கும் ஐ.நா பொதுச்சபை தீர்மானத்திற்கு கிட்டத்தட்ட முக்கால் பங்கு வாக்குகள் கிடைத்துள்ளன.

ரஷ்யாவை தனிமைப்படுத்தும் வகையில் 193 அங்கத்துவ நாடுகள் கொண்ட பொதுச் சபையில் தீர்மானம் நிறைவேற்றப்படுவது இது இரண்டாவது முறையாகும். உக்ரைனின் இராணுவ உட்கட்டமைப்பை அழிப்பதற்கான சிறப்பு இராணுவ நடவடிக்கை என்று ரஷ்யா குறிப்பிடும் இந்தப் படை நடவடிக்கையை ஐ.நா செயலாளர் நாயகம் அன்டோனியோ குட்டரஸ் சாடியுள்ளார்.

உக்ரைன் மற்றும் அதன் கூட்டணி நாடுகள் கடந்த வியாழக்கிழமை கொண்டுவந்த இந்தத் தீர்மானத்திற்கு 140 வாக்குகள் ஆதரவாக கிடைத்தன. ரஷ்யா, சிரியா, வட கொரியா, எரிட்ரியா மற்றும் பெலாரஸ் இதற்கு எதிராக வாக்களித்ததோடு சீனா உட்பட 38 நாடுகள் வாக்களிப்பதை தவிர்த்துக்கொண்டன.

இதில் கடந்த மார்ச் 2 இடம்பெற்ற ரஷ்யாவுக்கு எதிரான தீர்மானத்தை விட பொதுச் சபையில் அதிக ஆதரவை பெற உக்ரைன் மற்றும் அதன் கூட்டணி முயற்சி மேற்கொண்டது. எனினும் ரஷ்யாவின் தாக்குதலை நிறுத்தவும் அதனை வாபஸ் பெறவும் வலியுறுத்தும் முந்தைய தீர்மானத்திற்கு 141 ஆதரவு வாக்குகள் கிடைத்ததோடு எதிராக ஐந்து வாக்குகளும் சீனா உட்பட 35 நாடுகள் வாக்களிப்பை தவிர்த்தும் இருந்தன. இந்தத் தீர்மானம் பெரு வெற்றி பெற்றிருப்பதாக குறிப்பிட்ட ஐ.நாவுக்கான அமெரிக்கத் தூதுவர் லின்டா தோமஸ் கிரீன்பீல்ட், '141 மற்றும் 140 க்கு இடையே பெரிய வித்தியாசம் இல்லை' என்றார்.

## ரஷ்யாவை தடுப்பதில் தாமதித்ததாக ஐரோப்பா மீது உக்ரைன் குற்றச்சாட்டு

### ரஷ்யா மீது புதிய தடைகள் பற்றி அறிவிப்பு



ரஷ்யாவை தடுப்பதற்கு தாமதித்ததாக மேற்கத்திய நாடுகளிடம் உக்ரைன் ஜனாதிபதி வொலோடிமிர் செலன்ஸ்கி சுட்டிக் காட்டியுள்ளார்.

பிரசல்சில் நடைபெற்ற ஐரோப்பிய கௌன்சில் மாநாட்டில் உரையாற்றிய அவர் இது பற்றிக் குறிப்பிட்டுள்ளார். தமது நாட்டில் ரஷ்யா செய்திருக்கும் அழிவுகள் மற்றும் சேதங்கள் பற்றி விளக்கிய அவர், ஐரோப்பா ஒன்றுபட்டு உக்ரைனுக்கு ஆதரவு அளிப்பதற்கு நன்றி தெரிவித்தார்.

இதனைத் தொடர்ந்து தனது பாணியில் உரையாற்றிய அவர், ரஷ்யாவை தடுப்பதில் அதிகம் தாமதித்து செயற்பட்டதாக ஐரோப்பிய தலைவர்களிடம் தெரிவித்தார்.

'நீங்கள் தடைகளை கொண்டுவந்தீர்கள். அதற்காக நாம் கடைமைப்பட்டுள்ளோம். அது கடுமையான நடவடிக்கை. ஆனால், அது சற்று தாமதமாக இருந்தது. இதனால் வாய்ப்பு ஒன்று இருந்தது' என்று கூறிய அவர், தடுக்கும் வகையிலான தடைகளாக இருந்தால், ரஷ்யா போருக்குச் சென்றிருக்காது என்று சுட்டிக்காட்டினார்.

இதில் நோர்ட் ஸ்ட்ரீம் 2 எரிவாயு குழாயை சுட்டிக்காட்டிய அவர், அதனை ஆரம்பத்திலேயே முடக்கி இருந்தால், 'ரஷ்யா எரிவாயு நெருக்கடியை உருவாக்கி இருக்காது' என்றார்.

இதன்போது ஐரோப்பிய ஒன்றியத்தில் இணையும் உக்ரைனின் கோரிக்கையை அங்கீகரிக்கும்படி அண்டை நாடுகளிடம் அவர் கோரினார். 'நான் இதனை உங்களிடம் கேட்கிறேன். தாமதிக்க வேண்டாம்' என்றார்.

அண்மைய வாரங்களில் செலென்ஸ்கி பல உலக நாடுகளின் பாராளுமன்றத்தில் உரையாற்றினார். இதில் தமக்கு போதுமாக உதவத் தவறிய மேற்கத்திய நாடுகளை விமர்சிப்பதற்கு அவர் தயங்கவில்லை.

பிரசல்சில் நடந்த மாநாடுகளில் ரஷ்யாவின் படையெடுப்பை காட்டுமிராண்டித் தனமானது என்று கண்டனம் வெளியிட்ட மேற்கத்திய தலைவர்கள், உக்ரைனுக்கு புதிய இராணுவ மற்றும் மனிதாபிமான உதவிகளை வழங்க உறுதி அளித்தனர். இதில் அமெரிக்கா மற்றும் பிரிட்டன், ரஷ்யா மீது புதிய தடைகளை விதிக்கவும் திட்டமிட்டுள்ளன.

எனினும் ஜப்பான் நேற்று ரஷ்யா மீதான தடையை மேலும் இறுக்கியதோடு அந்த நாட்டின் சாதகமான வர்த்தக அந்தஸ்த்தை அகற்றியது. மறுபுறம் ரஷ்யாவின் கூட்டாளியான பிரசல்ஸ் ஜனாதிபதி அலெக்சாண்டர் லுகசென்கோ மற்றும் அவரது குடும்ப உறுப்பினர்கள் அதேபோன்று 22 ரஷ்ய தனி நபர்கள் மீது அவுஸ்திரேலியா புதிய தடைகளை விதித்துள்ளது.

உக்ரைன் மீதான ரஷ்யாவின் படையெடுப்பினால் 3.6 மில்லியன் உக்ரைனியர்கள் அகதிகளாக நாட்டை விட்டு வெளியேறி இருப்பதோடு பாதிக்கும் அதிகமான உக்ரைனிய சிறுவர்கள் தமது வீடுகளை விட்டு வெளியேற்றப்பட்டிருப்பதாக ஐ.நா தெரிவித்துள்ளது.

இந்தப் போர் ஆரம்பித்து ஒரு மாதத்தை தாண்டியபோதும் ரஷ்யாவால் உக்ரைனின் எந்த பிரதான நகரங்களையும் கைப்பற்ற முடியாமல் போயுள்ளது. உக்ரைனை ஆக்கிரமிக்கும் திட்டம் இல்லை என்று குறிப்பிட்டிருக்கும் ரஷ்யா அதன் இராணுவத் திறனை அழிப்பதே இலக்கு என்று தெரிவித்தது.

ரஷ்யாவின் ஷெல் தாக்குதல்கள் இடைவிடாது இடம்பெற்று வருகின்றபோதும் தலைநகர் கியேவுக்கு அருகிலுள்ள அதன் கவச வாகனங்கள் கடந்த ஒரு வாரமாக நகராது உள்ளது.

ரஷ்ய படைகளால் பெரும் உயிர்ச்சேதம் ஏற்பட்டிருப்பதாகவும் அத்தியாவசிய பொருட்கள் தீர்ந்து வருவதாகவும் உக்ரைன் தெரிவித்துள்ளது.

## வளர்ந்துவரும் சர்வதேச சக்தியாக உள்ள இந்தியா



இந்தியா குறிப்பாக பொருளாதாரத் தளத்தில் வளர்ந்து வரும் சக்தியாக இருப்பதாகவும் நான்கு தரப்பு கூட்டணியின் (குவாட்) ஓர் அங்கமாக இந்தோ – பசிபிக் பிராந்தியத்தியத்தில் தலைமை ஒன்றாக இருப்பதாகவும் இந்தியாவுக்கான தென் கொரிய தூதுவர் சான் சே பொக் தெரிவித்துள்ளார். ஏ.என்.ஐ செய்தி நிறுவனத்துடன் பேசிய அவர், பல துறைகளிலும் இரு நாடுகளுக்கும் இடையிலான உறவுகள் பலமடைந்து வருவதாக தெரிவித்தார்.

"இந்தியா குறிப்பாக பொருளாதாரம், பாதுகாப்பு மற்றும் ஏனைய துறைகளில் வளர்ந்துவரும் சர்வதேச சக்தியாக உள்ளது. அது குவாட் அமைப்பில் அங்கமாக இருப்பதால் இந்தோ – பசிபிக் பிராந்தியத்தில் தலைமை ஏற்றுள்ளது" என்றும் அவர் கூறினார்.

இந்தியா மற்றும் தென்கொரிய இடையிலான இரு தரப்பு உறவு 1962 ஆம் ஆண்டு நிறுவப்பட்டதோடு அது 1973இல் தூதரக மட்டத்தில் உயர்த்தப்பட்டது.

## சொலமன் தீவுகள்–சீனா ஒப்பந்தம் குறித்து அவுஸ்திரேலியா கவலை



சொலமன் தீவுகளுடன் சீனா கைச்சாத்திடவுள்ள ஒப்பந்தம் அங்கு சீன இராணுவத்தை நிலைநிறுத்த வாய்ப்பை ஏற்படுத்தக் கூடும் என்று அவுஸ்திரேலியா கவலை வெளியிட்டுள்ளது.

அவுஸ்திரேலியாவில் இருந்து சுமார் 2000 கிலோமீற்றர் தொலைவில் இருக்கும் சொலமன் தீவுகள் மற்றும் சீனாவுக்கு இடையிலான பாதுகாப்பு உடன்படிக்கைக்கான திட்டங்களை காட்டும் ஆவணம் ஒன்று கசிந்துள்ளது.

இந்த வரைவு ஆவணம் உண்மையானது என்பதை ஏ.பி.சி மற்றும் ரோய்ட்டர்ஸ் செய்தி நிறுவனங்கள் உறுதி செய்துள்ளன.

பசிபின் பிராந்தியத்தில் தமது அண்டை நாடுகளுடன் சீனா உறவுகளை பலப்படுத்தி வருவது குறித்து அவுஸ்திரேலியா நீண்ட காலமாக கவலையை வெளியிட்டு வருகிறது.

சொலமன் தீவுகளில் உள்ள சீனர்கள் மற்றும் அதன் பிரதான திட்டங்களை பாதுகாப்பதற்கு சீன படைகளை அங்கு நிலைநிறுத்த அனுமதிப்பதாக கசிந்திருக்கும் அந்த ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## பாக். பிரதமருக்கு எதிராக தீர்மானம்



பாகிஸ்தான் பிரதமர் இம்ரான் கான் அரசுக்கு எதிரான நம்பிக்கை இல்லா தீர்மானம் அந்நாட்டு பாராளுமன்ற தேசிய அவையில் நேற்று வெள்ளிக்கிழமை அறிமுகப்படுத்தப்படது.

பாராளுமன்றத்தின் நேற்றைய நிகழ்ச்சி நிரலின்படி, எதிர்கட்சி உறுப்பினர்கள் பிரதமருக்கு எதிராக நம்பிக்கை இல்லா தீர்மானத்தை முன்மொழிந்தனர்.

இந்த தீர்மானத்தில் பெரும்பான்மையை நிரூபிக்க ஆளும் கட்சி தரப்பும் தீர்மானத்தை நிறைவேற்ற எதிர்கட்சிகளும் முயற்சித்து வருகின்றன. தேசிய அவையில் நம்பிக்கையில்லா தீர்மானத்தை நிறைவேற்ற 172 அல்லது அதற்கு மேற்பட்ட வாக்குகள் தேவைப்படும்.

பாகிஸ்தானில் நாட்டின் பொருளாதாரம் மற்றும் வெளியுறவு கொள்கையை இம்ரான் கான் தவறாக நிர்வகிப்பதாக எதிர்கட்சிகள் குற்றம்சாட்டி வருகின்றன. பாகிஸ்தானில் இதுவரை எந்தவொரு பிரதமரும் தமது பதவிக் காலத்தை முழுமையாக நிறைவு செய்யவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

## சோமாலியா தற்கொலை தாக்குதலில் 48 பேர் பலி

மத்திய சோமாலியாவில் பெண் பாராளுமன்ற உறுப்பினர் ஒருவர் கொல்லப்பட்ட தற்கொலை தாக்குதலில் உயிரிழந்தவர்கள் எண்ணிக்கை 48 ஆக அதிகரித்துள்ளது.

பெலத்வெயானே நகரில் கடந்த புதன்கிழமை இடம்பெற்ற இந்தத் தாக்கதலில் அரசை கடுமையாக விமர்சித்து வந்த அமீனா முஹமது என்ற எம்.பி கொல்லப்பட்டார். "இரு குண்டுகளில் வியாபாரிகள், மதகுருக்கள், அதிகாரிகள் மற்றும் பொதுமக்கள் உட்பட 48 பேர் கொல்லப்பட்டதோடு மேலும் 108 பேர் காயமடைந்தனர்" என்று தாக்குதல் இடம்பெற்ற ஹிர்ஷபெல்லே மாநிலத்தின் தலைவர் அலி குட்லாவே உசைன் பேஸ்புக்கில் வெளியிட்ட அறிவிப்பில் குறிப்பிட்டுள்ளார்.

"முதல் தற்கொலை குண்டுதாரி அமீனா எம்.பியை மற்றும் அவருடன் இருந்தவர்களை இலக்கு வைத்தார். காயமடைந்தவர்களை மருத்துவனைக்கு அழைத்துச் செல்லும்போது, அவர்களை தற்கொலை கார் குண்டு ஒன்று இலக்கு வைத்தது" என்றும் அவர் குறிப்பிட்டார்.



## எண்ணெய் விலை அதிகரிப்பு



ரஷ்யாவின் எண்ணெய், எரிவாயுவைப் புறக்கணிப்பது குறித்து ஐரோப்பிய ஒன்றியம் பரிசீலித்து வரும் வேளையில், எண்ணெய் விலைகள் கூடியுள்ளன.

கடந்த மாதம் உக்ரைன் மீது ரஷ்யா படையெடுத்ததைத் தொடர்ந்து, மொஸ்கோவின் எரிசக்தி வளங்களைச் சார்ந்திருக்கும் போக்கைக் குறைத்துக்கொள்ள ஐரோப்பிய ஒன்றியத் தலைவர்கள் உறுதியளித்தனர்.

ஆயினும் ரஷ்யாவின் எண்ணெய், எரிவாயு ஆகியவற்றின் மீது நேரடியாகத் தடை விதிப்பது குறித்து அவர்கள் இன்னும் இணக்கம் காணவில்லை. அமெரிக்கா ஏற்கனவே அந்த நடவடிக்கையை எடுத்துள்ளது.

ரஷ்யஎண்ணெய் மீது ஐரோப்பிய ஒன்றியம் தடை விதித்தால் மட்டுமே, எண்ணெய்ச் சந்தையில் பெரிய அளவில் தாக்கம் ஏற்படக்கூடுமென கவனிப்பாளர்கள் கூறுகின்றனர்.

மசகு எண்ணெய் பற்றாக்குறையால் அதன் விலைகள் தொடர்ந்து நிலையற்றதாகவே உள்ளன. கடந்த ஆண்டு பதிவான விலைகளைவிட, அவை 90 வீதத்திற்கு மேல் பதிவாகியுள்ளன.

தினகரன் விளம்பரம்
0112429367
விற்பனை பிரிவு
0112429444,
0112429378
ஆசிரியபீடம்
editor.tkn@lakehouse.lk

2022 மார்ச் 26 சனிக்கிழமை
தினகரன்
THINAKARAN
திනකරන්



**தொழுகை நேரம்**

25 முதல் 27 வரை

| | |
|---|---|
| சுபஹ் | 04.57 |
| லுஹர் | 12.18 |
| அஸர் | 03.28 |
| மஃரிப் | 06.21 |
| இஷா | 07.31 |

**இன்றைய சுபதினம்**

பிலவ வருடம் பங்குனி 12

ராகுகாலம் : பகல் : 09.00 - 10.30வரை
சுபநேரம் : காலை : 07.30 - 09.00வரை

யோகம்: சித்தயோகம்

திதி: நவமி

**இராசி பலன்கள்**

| | |
|---|---|
| மேஷம் | வெற்றி |
| ரிஷபம் | பாராட்டு |
| மிதுனம் | தனம் |
| கடகம் | போட்டி |
| சிம்மம் | கோபம் |
| கன்னி | முயற்சி |
| துலாம் | நன்மை |
| விருச்சிகம் | நிறைவு |
| தனுசு | பொறுமை |
| மகரம் | சுகம் |
| கும்பம் | மறதி |
| மீனம் | செலவு |

கலாநிதி இராமச்சந்திரகுருக்கள் (பாபு சர்மா)

# உலக வங்கியிடமிருந்து ஒரு பில்.டொலர் கடன்

## இலங்கை எதிர்பார்ப்பதாக தகவல்

உலக வங்கியிடம் இருந்து ஒரு பில்லியன் டொலர் கடன் உதவியை இலங்கை பெற்றுக்கொள்ளும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

அதற்கமைய இலங்கையின் கிராமப்புற அபிவிருத்தி, புதுப்பிக்கத்தக்க வலுசக்தி மற்றும் டிஜிட்டல்மயமாக்கல் திட்டங்களுக்கு உலக வங்கியிடம் இந்த கடன் உதவியை இலங்கை நாடுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அத்துடன் ஏற்கனவே பல திட்ட முன்மொழிவுகள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாகவும் மேலும் பல திட்டங்கள் தயாராகி வருவதாகவும் கூறப்படுகிறது. அதேநேரம், நிதி அமைச்சர் பசில் ராஜபக்ஷ அடுத்த மாதம் அமெரிக்காவில் உலக வங்கி மற்றும் சர்வதேச நாணய நிதியத்தின் பிரதிநிதிகளை சந்திக்கவுள்ளதாகவும் தகவல் வெளியாகியுள்ளது.



# தவக்கால சிந்தனை

## பாவசங்கீர்த்தனம்

=தாய்த் திரு அவையானது திருவருட்சாதனங்களை ஏற்படுத்தி அதன் மூலம் இறைமக்களுக்கு நலமளிக்கும் வாழ்வை வழங்கவே முன் நிற்கின்றது.

இந்நிலையில் தவக்காலத்தில் பாவசங்கீர்த்தனம் என்ற அருட்சாதனத்தை பெற்றுக்கொள்வது எமது தலையாய கடமையாகும். இறை இயேசுவின் அளவற்ற இரக்கத்திற்காக உங்கள் இதயத்தை கிழித்து கொள்வதாலும் எம் பாவங்களை அறிக்கையிட்டு; நிறைவானதொரு பாவமன்னிப்பின் மூலம், நான் ஒரு பாவி என எம்மை ஏற்றுக்கொள்வதன் வழியாக நாம் அனைவரும் புது வாழ்வு பெற முடியும்.

தவக்கால பக்தி முயற்சிகளுக்கு முன் ஆயத்த நிகழ்வாக பாவசங்கீர்த்தனம் பெற்றுக்கொள்வது அவசியமும் இன்றியமையாததுமாகும். "பணியுமாம் என்றும் பெருமை சிறுமை அணியுமாம் தன்னை வியந்து" என்ற வான் புகழ் கொண்ட வள்ளுவனின் குறளுக்கு இணங்க இன்றைய இறைவார்த்தை பகுதியானது இதே கருத்தை முன்மொழிந்து நிற்கின்றது.

"தம்மைத் தாமே உயர்த்துவோர் எவரும் தாழ்த்தப்பெறுவர், தம்மை தாமே தாழ்த்துவோர் எவரும் உயர்த்தப் பெறுவர்". எவரது பாவம் மன்னிக்கப்பட்டதோ அவரே இறையரசில் உயர்ந்தவர். ஏனெனில் மீட்படைய நாம் தூய்மையடைய வேண்டும் என்பதை மறந்து மேலும் அகமகிழ்வை களைந்து போட்டி, பொறாமை, வஞ்சகம் போன்ற பல தீய எண்ணங்களை களைந்திருந்தாலும் இன்று வரைக்கும் எம் வெளிவேடங்கள் களையப்படவில்லை. இது மறந்தும் மறவாமலும் எம் சமூகத்தின் தாக்கத்தால் தினந்தோறும் எம் வாழ்வில் அரங்கேறிக் கொண்டே இருக்கின்றது.

எனினும் கிறிஸ்தவ வாழ்வில் நாம் எப்பொழுதும் இறைவனுக்கு நன்றி கூறுபவர்களாகவும், எமது குற்றம் குறைகளை ஏற்று மனம் வருந்துதல் மூலம் எம் பாவங்களை அறிக்கையிட்டு; தூய்மையான உள்ளத்தைப் பெற்று, இறைவனுடைய இரக்கத்தைப் பெறவே விரும்புகின்றோம். நாம் நம்முடைய வாழ்வில் பல தடவைகளில் எமது அயலவர்க்கும், உறவுகளுக்கும் நன்மைக்கு பதிலாக தீமையே செய்து வருகின்றோம். இத்தகைய சூழ்நிலையில் மனம் திரும்பி மாற்றம் காண நற்செய்தியானது, இத்தவக்காலத்தில் தியாக வாழ்வுக்கு எம்மை அழைத்து நிற்கின்றது.

அருட் சகோ.கி. றுபேஷன்...

# 12 நாட்கள் தரித்து நின்ற கப்பலுக்கு 42 மில். டொலர்

## வலுசக்தி அமைச்சினால் செலுத்தப்பட்டது

கொழும்பு துறைமுகத்தில் கடந்த 12 நாட்களாக நங்கூரமிட்டிருந்த டீசல் மற்றும் விமான எரிபொருள் எடுத்து வந்த கப்பலுக்கு 42 மில்லியன் அமெரிக்க டொலர்கள் செலுத்தப்பட்டுள்ளதாக வலுசக்தி அமைச்சின் செயலாளர் கே.டி.ஆர் ஒல்கா தெரிவித்துள்ளார். இதன்படி, 20,000 மெட்ரிக் தொன் டீசல் மற்றும் 20,000 மெட்ரிக் தொன் விமான எரிபொருளை இறக்கும் பணிகள் ஆரம்பிக்கப்படவுள்ளன.

எனினும், கப்பலுக்கான தாமதக் கட்டணம் இதுவரை கணக்கிடப்படவில்லை. மேலும், இந்திய கடனுதவியுடன் 35,000 மெட்ரிக் தொன் பெட்ரோலை தாங்கிய மற்றுமொரு கப்பல் நாட்டை வந்தடைந்துள்ளதாக வலுசக்தி அமைச்சின் செயலாளர் மேலும் தெரிவித்துள்ளார்.

# மத்திய வங்கி ஆளுநர் கோப் குழுவில் கலந்துகொள்ளாதமைக்கு வருத்தம்

நாட்டின் தற்போதைய பொருளாதார நிலை தொடர்பில் ஆராய்வதற்காக அரசாங்க நிதி பற்றிய குழுவுக்கு அழைக்கப்பட்டிருந்த மத்திய வங்கி ஆளுநர், மத்திய வங்கி உயரதிகாரிகள் மற்றும் நாணயச் சபையின் உறுப்பினர்கள் குழுக் கூட்டத்தில் கலந்துகொள்ளாமை தொடர்பில் வருந்துவதாக அதன் தலைவர் பாராளுமன்ற உறுப்பினர் அனுர பிரியதர்ஷன யாப்பா தெரிவித்தார். அரசாங்க நிதி பற்றிய குழு பாராளுமன்றக் கட்டடத் தொகுதியில் நேற்று முன்தினம் (24) கூடிய போதே அவர் இவ் விடயத்தை குறிப்பிட்டார்.

அதற்கமைய, மத்திய வங்கி ஆளுநர் அஜித் நிவாட் கப்ரால் உள்ளிட்ட மத்திய வங்கி உயரதிகாரிகள் மற்றும் மத்திய வங்கியின் நாணயச் சபையின் ஏனைய அதிகாரிகளான திறைசேரி மற்றும் நிதி அமைச்சின் செயலாளர் எஸ். ஆர். ஆட்டிகல, ஜனாதிபதி சட்டத்தரணி சஞ்சீவ ஜயவர்தன, கலாநிதி ராணி ஜயமஹ மற்றும் சமந்த குமாரசிங்க ஆகியோர் இவ்வாறு அரசாங்க நிதி பற்றிய குழுவுக்கு அழைக்கப்பட்டிருந்தனர்.

மத்திய வங்கியின் நாணயச் சபையின் உறுப்பினர் திறைசேரி மற்றும் நிதி அமைச்சின் செயலாளர் எஸ்.ஆர். ஆட்டிகலவுக்கு உலக வங்கியுடன் கலந்துரையாடல் ஒன்று இருப்பதால் ஏனைய உறுப்பினர்களுக்கும் குழுவில் கலந்துகொள்ள முடியாது எனவும், அதற்காக பிறிதொரு தினத்தை வழங்குமாறும் அறிவித்து மத்திய வங்கியினால் அரசாங்க நிதி பற்றிய குழுவுக்கு கடிதமொன்று அனுப்பி வைக்கப்பட்டிருந்தது.

அரசாங்க நிதி பற்றிய குழுவின் இந்தக் கூட்டம் கடந்த திங்கட்கிழமை (21) இடம்பெறவிருந்ததுடன் மத்திய வங்கி அதிகாரிகளின் கோரிக்கைக்கு அமைய கூட்டம் நேற்று முன்தினத்துக்கு ஒத்திவைக்கப்பட்டிருந்தது.

மத்திய வங்கியின் இந்தச் 06

# ஜனாதிபதியுடனான சந்திப்பில் 4 விடயங்களில் இணக்கப்பாடு

## TNA தெரிவிப்பு

தமிழ் தேசிய கூட்டமைப்புக்கும் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்கும் நேற்று (25) இடம்பெற்ற சந்திப்பில் 4 விடயங்களில் இணக்கப்பாடு எட்டப்பட்டதாக தமிழ் தேசிய கூட்டமைப்பு தெரிவித்துள்ளது.

ஜனாதிபதி செயலகத்தில் நேற்று இடம்பெற்ற இந்த சந்திப்பில் தமிழ் தேசிய கூட்டமைப்பு சார்பில் அதன் தலைவர் பாராளுமன்ற உறுப்பினர் இரா.சம்பந்தன் தலைமையில் எம்.ஏ.சுமந்திரன், எஸ்.சிறிதரன், தர்மலிங்கம் சித்தார்த்தன், சார்ள்ஸ் நிர்மலநாதன், இராசமாணிக்கம் சாணக்கியன் மற்றும் தவராசா கலையரசன் ஆகியோர் பங்கேற்றிருந்தனர்.

TNA
Tamil National Alliance
தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு

அடுத்த சுற்று பேச்சுவார்த்தைக்கு முன்னர் உடனடியாக நிறைவேற்ற கூடிய 4 விடயங்கள் தொடர்பில் இணக்கப்பாடு எட்டப்பட்டுள்ளதாக தமிழ் தேசிய கூட்டமைப்பின் பேச்சாளர் பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்துள்ளார்.

இதற்கமைய பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்களை விடுவிப்பது மற்றும் காணி பிரச்சினை உள்ளிட்ட 4 விடயங்கள் தொடர்பில் இதன்போது இணக்கப்பாடு எட்டப்பட்டதாக அவர் குறிப்பிட்டார்.

தமிழரசு கட்சியின் தலைவர் மாவை சேனாதிராஜாவும் இந்த சந்திப்பில் பங்கேற்றிருந்தார்.எனினும் தமிழ் தேசிய கூட்டமைப்பின் பங்காளி கட்சியான டெலோ என்ற தமிழீழ விடுதலை இயக்கம் குறித்த சந்திப்பை புறக்கணித்திருந்தது.

அரசாங்கத்தின் சார்பில் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ, வெளிவிவகார அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ், நீதியமைச்சர் அலிசப்ரி மற்றும் அமைச்சர் சமல் ராஜபக்ஷ ஆகியோர் கலந்து கொண்டிருந்தனர்.

# கொட்டாஞ்சேனையில் நாடக அரங்கியல் பயிற்சி பட்டறை

'சர்வதேச நாடக அரங்கியல் தினத்தை' முன்னிட்டு கண்ணகி கலாலயம் கலைஞர்கள் சங்கமும் ஐக்கிய தேசிய சுயத்தொழில் வியாபாரிகள் கலையரண் கலைஞர்களும் இணைந்து ஏற்பாடு செய்துள்ள "நாடக அரங்கியல் பயிற்சி பட்டறை" கொழும்பு கொட்டாஞ்சேனை காலிமுத்து நகரசபை மண்டபத்தில் நாளை ஞாயிற்றுக்கிழமை (27) இடம் பெறவுள்ளது.

காலை 8.30 முதல் மாலை 5.30 வரை இந்நிகழ்வு முற்றிலும் இலவசமாக நடைபெறவுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

இந்நிகழ்வில் பங்குபற்ற விரும்புவோர் முற்பதிவு செய்து கொள்ள inbox ஊடாகவோ, 0767111752, 0715180852, 0775282838 என்ற இலக்கங்களுடன் தொடர்புகொண்டு மேலதிக விபரங்களை பெற்றுக்கொள்ள முடியும் என ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர்.

# தலாபிடியா அஹதிய்யாவின் 70 வது ஆண்டு பூர்த்தி விழா

காலி, தலாபிடியா அஹதியாவின் 70வது வருட பூர்த்தியும் வருடாந்த பரிசளிப்பு வைபவமும் நாளை 27 ம்திகதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு முஸ்லிம் மகளிர் கல்லூரி (தேசிய பாடசாலை) யில் நடைபெறுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

தென்னிலங்கையின் காலி மாநகரில் தலாபிடியா எனும் கிராமத்தில் 1952 ம் டிசம்பர் மாதம் 2 ம் திகதி இரண்டு மாணர்களுடன் முதன் முதலில் ஆரம்பிக்கப்பட்ட தலாபிடியா அஹதியாவின் இவ் பரிசளிப்பு வைபவத்துக்கு பிரதம அதிதியாக காலி மாவட்ட செயளக 06

## டொலர் நெருக்கடிநிலையை பயன்படுத்தி

# அரசாங்கத்தை வீழ்த்துவதற்கு எதிர்க்கட்சி கடும் பிரயத்தனம்

## இராஜாங்க அமைச்சர் கஞ்சன விஜேசேக்கர

லோரன்ஸ் செல்வநாயகம்



வெளிநாட்டு கையிருப்பு வீழ்ச்சிக்கு எதிர்க்கட்சியே காரணமென இராஜாங்க அமைச்சர் கஞ்சன விஜேசேக்கர பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

2015 ஆம் ஆண்டு 8.2 வீதமாக இருந்த கையிருப்பு 2019இல் 7.6 வீதமாக குறைவடைந்ததற்கு நல்லாட்சி அரசாங்கமே காரணம் என்றும் அவர் தெரிவித்தார்.

அதேவேளை தற்போதைய நெருக்கடிகளுக்கு தீர்வு காண்பதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுத்து வருகின்ற போதும் அரசாங்கத்தையும் நாட்டையும் வீழ்ச்சியுறச் செய்வதற்காக எதிர்க்கட்சியினர் மேற்கொள்ளும் எந்த நடவடிக்கைக்கும் ஒருபோதும் இடமளிக்கப் போவதில்லை என அவர் சபையில் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற பெறுமதி சேர் வரி தொடர்பான திருத்த சட்டமூலம் தொடர்பான விவாதத்தில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அமைச்சர் சபையில் தொடர்ந்தும் உரையாற்றுகையில்:

நாடு நெருக்கடியான நிலையில் உள்ள போது 06



பிரிட்டன் எலிசபெத் மகாராணியின் பிறந்தநாள் கொண்டாட்டம் சென்னையிலுள்ள பிரிட்டன் துணை தூதரகத்தில் பிரிட்டன் துணை உயர்ஸ்தானிகர் ஆலிவர் பால்ஹட்செட் மற்றும் திருமதி பால்ஹாட்செட் ஆகியோருடன் கொண்டாடப்பட்டது. இந்த நிகழ்வில் சென்னையிலுள்ள இலங்கை துணை உயர் ஸ்தானிகர் டாக்டர். டி. வெங்கடேஷ்வரனும் கலந்துகொண்டார்.

# நொவிஸ் கரம் சம்பியன்சிப் போட்டி



கொழும்பு கரம் அக்கடமி ஏற்பாட்டில் நொவிஸ் கரம் சம்பியன்சிப் போட்டி கொழும்பு கரம் அக்கடமி வளாகத்தில் நாளை 27 ம் திகதி காலை 10 மணிக்கு இடம்பெறும்.வெற்றி பெறுபவருக்கு கிண்ணத்துடன் ரூ. 75 ஆயிரம் பணப்பரிசும் இரண்டாமிடத்தை பெறுபவருக்கு ரூ. 30 ஆயிரம் பணப்பரிசுடன் கிண்ணமும் வழங்கப்படும். 06

## வெளிநாடுகளுடனான ஒப்பந்தங்கள்

# அரசாங்கம் பாராளுமன்றத்திற்கு வெளிப்படுத்துவது அவசியம்

## எதிர்க்கட்சி எம்.பி கபீர் ஹாசிம்

லோரன்ஸ் செல்வநாயகம்,
ஷம்ஸ் பாஹிம்



சுதந்திரமடைந்த காலம் முதல் நாடு பாரிய பொருளாதார பிரச்சினைகளுக்கு முகம்கொடுத்திருக்கின்றது. ஆனாலும் நாட்டின் இன்றைய மிக மோசமான சூழ்நிலைக்கு அரசாங்கத்தின் பிழையான தீர்மானங்களே காரணம் என்பதை அரசாங்கம் ஏற்றுக்கொள்ள வேண்டும் என எதிர்க்கட்சி எம்.பி கபீர் ஹாசிம் பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற சேர் பெறுமதி வரி (திருத்தச்) சட்டமூலம் மீதான விவாதத்தில் உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

சபையில் தொடர்ந்தும் 06

# மலையகத்தின் மாமனிதர் எம்.எஸ். செல்லசாமி; அவரே கொழும்பில் எனக்கு முன்னோடி

## தமுகூ தலைவர் மனோ கணேசன் எம்பி



மறைந்த எம்.எஸ். செல்லசாமி ஒரு மலையக மாமனிதர். கொழும்பில் எனக்கு முன்னோடி. ஒரு "லீடர்" எப்படி இருக்க வேண்டும் என்பதை என்னை போன்றவர்களுக்கு அவரின் அடுத்த தலைமுறைக்கு அவர் எடுத்து காட்டினார். அதையே நானும் இன்று செய்கிறேன் என தமிழ் முற்போக்கு கூட்டணி தலைவர் மனோ கணேசன் கூறியுள்ளார்.

மறைந்த எம்.எஸ். செல்லசாமி தொடர்பான அனுதாப பிரேரணை மீது உரை நிகழ்த்திய மனோ கணேசன் மேலும் கூறியதாவது,

எம்.எஸ். செல்லசாமியின் வாழ்கை, பல பாடங்களை எமக்கு கற்று கொடுக்கிறது. கட்சிகளில் ஏற்படும் உட்கட்சி பூசல்கள் சில வேளைகளில் எப்படி சமூகத்தையே பாதிக்கும் என்பதும், சமூகத்துக்கு பயன்பட கூடிய தகைமையானவர்கள் எப்படி ஒதுக்கப்படுகிறார்கள் என்பதுக்கும் எம். எஸ். செல்லசாமியின் வாழ்கை பல பாடங்களை எமக்கு கற்று கொடுக்கிறது.

பல இனங்கள் வாழும் நாட்டில் ஒரு இனம், தனது இனத்தை பிரதிநிதித்துவம் செய்ய வாக்குரிமையை சரியாக 06

**நாணய மாற்று**

| நாணயம் | வாங்கும் விலை | விற்பனை விலை |
|---|---|---|
| அவுஸ்திரேலியா டொலர் | 183.25 | 192.37 |
| கனடியன் டொலர் | 195.26 | 204.12 |
| யூரோ | 278.29 | 288.81 |
| ஜப்பான் யென் | 2.1570 | 2.2543 |
| சிங்கப்பூர் டொலர் | 185.58 | 192.47 |
| ஸ்டேலிங் பவுன்ஸ் | 263.51 | 271.91 |
| சுவிஸ் பிராங்க் | 270.59 | 281.79 |
| அமெரிக்க டொலர் | 249.96 | 259.99 |

| மத்திய கிழக்கு | குறித்த விலை | | குறித்த விலை |
|---|---|---|---|
| பஹரின் டினார் | 608.26 | கட்டார் ரியால் | 62.81 |
| குவைத் டினார் | 755.13 | சவூதி ரியால் | 61.12 |
| ஓமான் ரியால் | 595.66 | ஐ.அ. இராச்சியம் டிர்ஹாம் | 62.43 |

தினகரன்
THINAKARAN
35, டி. ஆர். விஜயவர்தன மாவத்தை, கொழும்பு - 10
தபால் பெட்டி இலக்கம்: 834
தொலைபேசி இலக்கம்: 2429429, 2429272, 2429279
பெக்ஸ் : 2429270, 2429329, விளம்பர முகாமையாளர் : 2429321

பிலவ வருடம் பங்குனி மாதம் 12ம் நாள் சனிக்கிழமை
ஹிஜ்ரி வருடம் 1443 ஷஃபான் பிறை 22

### குறள் தரும் சிந்தனை



மண்ணோ டியைந்த மரத்தனையர் கண்ணோ
டியைந்துகண் ணோடா தவர்

ஒருவர்க்குக் கண் இருந்தும்கூட அந்தக் கண்ணுக்குரிய அன்பும் இரக்கமும் இல்லாவிட்டால் அவர் மரத்துக்கு ஒப்பானவரே ஆவார்.

## புலம்பெயர் தமிழர் முதலீடுகள் மீது கரிசனை செலுத்துவதன் அவசியம்

உலக நாடுகளின் பொருளாதாரம் இன்னும் வீழ்ச்சி நிலையில்தான் உள்ளது. கொவிட் பெருந்தொற்று ஏற்படுத்திய தாக்கத்திலிருந்து எந்தவொரு நாடுமே இன்னும் மீண்டெழவில்லை. இந்தப் பாதிப்புக்கு அனைத்து நாடுகளுமே முகம் கொடுத்துள்ளன. இலங்கையும் இதற்கு விதிவிலக்கு அல்ல. கொவிட் தொற்று தற்போது பெருமளவு தணிந்துள்ள போதிலும், பொருளாதாரப் பாதிப்பில் இருந்து மீள்வதுதான் சிரமமான காரியமாக உள்ளது.

பொருளாதார வீழ்ச்சியில் இருந்து மீள்வதென்பது இலகுவான காரியமல்ல. அதற்கு சரியான திட்டமிடல்கள் அவசியம். அத்திட்டங்களை குறுகிய காலத்துக்குள் நிறைவேற்றி முடிப்பது சாத்தியமல்ல. அதில் வெற்றி காண்பதற்கு நீண்ட காலம் தேவை. பொருளாதார மீட்சியானது அரசாங்கத்தினால் மாத்திரமே சாத்தியமானதென்று எண்ணுவது தவறு. அரசுடன் தனியார்துறையும் சமாந்தரமாக முயற்சித்தால் மாத்திரமே பொருளாதார மீட்சியில் வெற்றி இலக்கை அடைய முடியும்.

ஆனால் கொவிட் தொற்றினால் நாடு வருடக்கணக்கில் அவ்வப்போது முடங்கிக் கிடந்ததன் காரணமாக தனியார்துறையினரின் செயற்பாடுகளும் வீழ்ச்சியடைந்து கிடக்கின்றன. நாட்டின் தனியார்துறை தற்போதுதான் படிப்படியாக முன்னேற்றம் கண்டு வருகின்றது. தனியார்துறை வேகமாக வளர்வதென்பது இலகுவான விடயமல்ல. அதற்கும் சில காலம் தேவை. இந்த நிலையில் நாம் வெளிநாட்டு முதலீடுகள் தொடர்பாக கவனம் செலுத்துவது அவசியமாகின்றது. அதன் முதற்படியாக வெளிநாடுகளில் உள்ள பாரிய நிறுவனங்கள் மற்றும் செல்வந்தர்கள் இலங்கையில் முதலீடு செய்வதற்கான வாய்ப்புவசதிகளை ஏற்படுத்திக் கொடுப்பது அவசியமாகின்றது.

இவ்விடத்தில் புலம்பெயர் தமிழர்களின் முதலீடு தொடர்பாக சிந்திக்க வேண்டியது அவசியமாகின்றது. புலம்பெயர் தமிழர்கள் இலங்கையில் முதலீடு செய்ய முன்வர வேண்டுமென்ற யோசனையானது எமது அரசியல்வாதிகளால் காலத்துக்குக் காலம் முன்வைக்கப்பட்டு வருகின்றது. இந்த யோசனையானது தமிழ் அரசியல் தரப்பினால் மாத்திரமன்றி, பெரும்பான்மை அரசியல்வாதிகளாலும் அவ்வப்போது முன்வைக்கப்பட்டு வருகின்றது.

புலம்பெயர் தமிழர்கள் மத்தியிலுள்ள வர்த்தகர்கள் வடக்கு, கிழக்கில் முதலீடு செய்வதற்கான வசதிவாய்ப்புகளை ஏற்படுத்துமாறு தமிழ் அரசியல்வாதிகள் கோரி வருகின்றனர். அக்கோரிக்கைக்கு கடந்த கால அரசாங்கங்கள் சம்மதம் தெரிவித்தும் உள்ளன. ஆனால் அக்கோரிக்கையும், அதற்கான சம்மதமும் அதன் பின்னர் கவனிக்கப்படாமலேயே போய் விடுகின்றன. கடந்தகால அரசுகள் அதற்கான நடவடிக்கைகளை இதயசுத்தியுடன் மேற்கொண்டிருந்தால், புலம்பெயர் தமிழர்களின் முதலீடுகளும் இதுகாலவரை ஆரம்பிக்கப்பட்டிருக்கும் சாத்தியமுண்டு. கடந்தகால அரசாங்கங்கள் இவ்விடயத்தில் கரிசனை செலுத்தவில்லை என்பதே உண்மையாகும்.

புலம்பெயர் தமிழர்கள் இலங்கையில் தொழில் முதலீடு செய்ய வேண்டுமென்ற கருத்துகள் தற்போது மீண்டும் முளைவிடத் தொடங்கியுள்ளன. வடமாகாண ஆளுநர் ஜீவன் தியாகராஜா இது தொடர்பாக ஓரிரு தினங்களுக்கு முன்னர் கருத்தொன்றை வெளியிட்டுள்ளார். இலங்கையில் முதலீடு செய்வதற்கு புலம்பெயர் தமிழர்கள் முன்வரும் பட்சத்தில், அதற்கான சாதகமான முயற்சிகளில் ஈடுபட முடியுமென வடமாகாண ஆளுநர் கூறியிருக்கின்றார். இக்கருத்து வரவேற்கத் தக்கதாகும்.

புலம்பெயர் தமிழர்களில் பிரிவினைவாத சிந்தனை கொண்ட மிகச்சொற்பமான எண்ணிக்கையினரே இலங்கை மீது இன்னமும் வன்மம் கொண்டிருக்கின்றனர். புலம்பெயர் தமிழர்களில் பெரும்பாலானோர் தமது தாய்நாடான இலங்கை மீது அபிமானத்தையே கொண்டுள்ளனர். தமது தாயகபூமியில் அமைதியும், இனநல்லிணக்கமும் மீண்டும் கட்டியெழுப்பப்பட வேண்டுமென்ற ஏக்கத்திலேயே அவர்கள் உள்ளனர். ஆனாலும் மிகச்சிறு எண்ணிக்கையினரோ இன்னமும் குழப்பகரமான சிந்தனைகளிலேயே வாழ்கின்றனர்.


பதின்மூன்று வருடங்களுக்கு முன்னர் தோற்கடிக்கப்பட்ட புலிகள் இயக்கத்தின் பெயரைச் சொல்லி இலங்கையில் இனநல்லிணக்கத்தை சீர்குலைக்கும் செயற்பாடுகளிலேயே அத்தகையோர் ஈடுபட்டு வருகின்றனர். இலங்கையில் தமிழ், சிங்கள இனங்களுக்கிடையில் ஐக்கியம் வலுவடைவதற்கு இவர்களே இன்னும் தடையாக இருந்து வருகின்றனர். இவ்வாறான குழப்பகரமான நிகழ்ச்சித் திட்டத்தின்படி செயற்பட்டு வருகின்ற சிறுபிரிவினரை மாத்திரம் அடிப்படையாக வைத்துக் கொண்டு ஒட்டுமொத்த புலம்பெயர் தமிழர்களையும் மதிப்பிடுவதற்கு எவரும் முற்படுவது தவறாகும்.

இலங்கையில் தொழில் முதலீடுகளை மேற்கொள்வதற்கு மேற்குநாடுகளில் வாழ்கின்ற புலம்பெயர் தமிழர்கள் பலர் ஆர்வம் கொண்டிருப்பதாக தகவல்கள் வெளிவருகின்றன. அங்கு வாழ்கின்ற புலம்பெயர் தமிழர்கள் எமது தேசத்து மக்கள் என்பதை நாம் மறந்த விடலாகாது. தாய்நாடு மீதான பற்றும், பாசமும், ஏக்கமும் அவர்களுக்கு உண்டென்பதும் உண்மை. அவர்கள் இலங்கையில் முதலீடுகளை பெருமளவில் ஆரம்பிப்பார்களானால் எமது நாட்டில் பலருக்கு தொழில்வாய்ப்பும் கிடைப்பதற்கு வாய்ப்புண்டு. அதுமாத்திரமன்றி எமது நாட்டின் பொருளாதாரமும் அபிவிருத்தியடைவதற்கு வாய்ப்பு ஏற்படும்.

ஆகவே புலம்பெயர் தமிழர்களின் முதலீடு தொடர்பாக நாம் இனிமேலாவது அதிக கவனம் செலுத்துவது அவசியமாகும். நாட்டின் பொருளாதார முன்னேற்றம் கருதியும், எமது தேசத்தின் நலன் கருதியும் இவ்விடயம் தொடர்பாக சம்பந்தப்பட்டோர் கவனம் செலுத்துவது முக்கியம்.

editor.tkn@lakehouse.lk

# உலகின் முதல் தமிழ்ப் பேராசிரியராக திகழ்ந்த முத்தமிழ் வித்தகர் விபுலாநந்த அடிகளார்



## 130ஆவது பிறந்ததினம் நாளை

முத்தமிழ் வித்தகரும், உலகின் முதல் தமிழ்ப் பேராசிரியருமான சுவாமி விபுலாநந்தர் (மார்ச் 27, 1892_ ஜூலை 19, 1947) கிழக்கின் காரைதீவில் பிறந்தார். சுவாமியின் தாயார் பெயர் கண்ணம்மை. தந்தையார் சாமித்தம்பி. அவருக்கு இயற்பெயராக தம்பிப்பிள்ளை என்ற நாமத்தை சூட்டினர். எனினும் பின்னர் மயில்வாகனன் என்று நாமம் இட்டனர்.

ஆரம்பக் கல்வியை கல்முனை மெதடிஸ்த ஆங்கிலப் பாடசாலையிலும் மட்டக்களப்பு புனித மைக்கல் கல்லூரியிலும் கற்றார். கேம்பிரிட்ஜ் சீனியர் சோதனையில் சித்தியடைந்த பின்னர் அவர் புனித மைக்கல் கல்லூரியில் ஆசிரியராகச் சிலகாலம் பணி புரிந்து, அதன் பின்னர் கொழும்பில் உள்ள ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியில் சேர்ந்தார். அங்கு விரிவுரையாளராயிருந்த தென்கோவை கந்தையா பிள்ளையிடம் பண்டையத் தமிழ் இலக்கியத்தைக் கற்றார்.

ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையின் 1912ஆம் ஆண்டு பயிற்றப்பட்ட ஆசிரியர் என்ற சான்றிதழுடன் மீண்டும் மட்டக்களப்பு புனித மைக்கல் கல்லூரியில் ஆசிரியராக இரண்டு ஆண்டுகள் பணிபுரிந்தார். 1915ஆம் ஆண்டு கொழும்பு அரசினர் தொழில்நுட்பக்கல்லூரியில் சேர்ந்து விஞ்ஞானம் பயின்று 1916இல் அறிவியலில் டிப்ளோமா பட்டத்தையும் பெற்றார். அத்துடன் மதுரைத் தமிழ்ச் சங்கம் நடத்திய தேர்வில் தோன்றி பண்டிதர் பட்டத்தையும் பெற்றார். இலங்கையிலிருந்து இப்பட்டத்தை முதன்முதல் பெற்றவர் சுவாமி விபுலாநந்தரே.

கொழும்பு அரசினர் தொழிநுட்பக் கல்லூரியில் இரசாயன உதவி விரிவுரையாளராக பணியாற்றினார். மயில்வாகனனாரின் விரிவுரைகள் மாணவர் மத்தியில் பெரும் சிறப்பைத் தேடிக் கொடுத்தன. அதனால் 1917ஆம் ஆண்டு யாழ்ப்பாணம் சம்பத்தரிசியார் கல்லூரிக்கு விஞ்ஞான ஆசிரியராக விரும்பி அழைத்தனர். அதனை பெருவிருப்புடன் ஏற்றுக் கொண்டார். அத்துடன் 1920 ஆம் ஆண்டு லண்டன் பல்கலைக்கழகம் நடத்திய பீ.எல்.சி தேர்வில் தோற்றி சித்தியடைந்தார்.

அதன் பின்னர் மானிப்பாய் இந்துக் கல்லூரியின் அதிபர் பதவியை ஏற்றுக்கொண்டார். திருகோணமலை கோணேஸ்வரா இந்துக் கல்லூரியில் 1925 ஆம் ஆண்டிலிருந்து முகாமையாளராகக் கடமையாற்றிய சுவாமி விபுலாநந்தர், 1928 இல் அதிபர் பதவியையும் ஏற்றுக் கொண்டார். தமிழ் மொழியின் வளர்ச்சிக்காக 'யாழ்ப்பாணம் ஆரிய திராவிட பாஷா அபிவிருத்திச் சங்கம்' என்ற கழகத்தை அமைத்து தமிழை வளர்க்கலானார். இந்தச் சங்கத்தின் மூலம் பிரவேசப் பண்டிதர் பாலபண்டிதர் பண்டிதர் என மூன்று தேர்வுகளை ஏற்படுத்தினார். மயில்வாகனனாரின் இந்த முயற்சி எத்தனையோ பண்டிதமணிகளை நாட்டிற்கு அளித்துள்ளது.

ஆசிரியப் பதவியைத் துறந்து 1922 ஆம் ஆண்டில் இராமகிருஷ்ண மிஷனில் இணைந்து சென்னைக்குப் புறப்பட்டார் மயில்வாகனன். சென்னையில் மயிலாப்பூர் மடத்தில் சுவாமி சிவானந்தரினால் பிரபோத சைத்தன்ய பிரிவில் பிரமச்சரிய தீட்சையும் சந்நியாச தீட்சையும் வழங்கப்பட்டன.

இரண்டு வருடங்கள் அங்கு பயின்ற அவர்இ இராமகிருஷ்ண மிஷன் நடத்திய 'ஶ்ரீராமகிருஷ்ண விஜயம்' என்ற தமிழ்ச் சஞ்சிகைக்கும் 'வேதாந்தகேசரி' என்ற ஆங்கில சஞ்சிகைக்கும் ஆசிரியராகவிருந்து பல அரிய கட்டுரைகளை எழுதினார். மதுரைத் தமிழ்ச்சங்கம் நடத்திய பண்டித பரீட்சையின் பரீட்சார்த்தகராக நியமிக்கப்பட்டார்.

தமிழ்ச்சங்க வெளியீடான 'செந்தமிழ்' எனும் சஞ்சிகையில் இலக்கியக் கட்டுரைகளைத் தொடர்ந்து எழுதி வந்தார். ஷேக்ஸ்பியரின் நாடகங்களை அடிப்படையாகக் கொண்டு அவர் பல திறனாய்வுக் கட்டுரைகளை வெளியிட்டிருக்கிறார். இக்கட்டுரைகள் 'மதங்க சூளாமணி' என்ற தொகுப்பில் இடம்பெற்றுள்ளன.

1924ஆம் ஆண்டு சித்திரை மாதம் பௌர்ணமி தினத்தில் சுவாமி சிவானந்தரால் சுவாமி விபுலாநந்தர் என்ற துறவறப்பெயர் வழங்கப்பட்டது.அதுவரை பண்டிதர் மயில்வாகன் என்றழைக்கப்பட்ட அவர் சுவாமி விபுலாநந்தரானார். அதன் பின்னர் அவர் இலங்கை திரும்பி இராமகிருஷ்ண மிஷன் மேற்கொள்ளும் கல்விப் பணிகளை ஒருங்கமைத்தார்.

26.11.1925 அன்று சுவாமி விபுலானந்தர் அவர்களினால் அடிக்கல் நடப்பட்டது. 15.04.1929 அன்று சமய அனுட்டானப்படி சுவாமி விபுலானந்தர் பாடசாலையை ஆரம்பித்தார்.

1931 ஆம் ஆண்டு பல்கலைக்கழகத்தின் முதல் தமிழ்ப் பேராசிரியர் பணியை ஏற்று பல்கலைக்கழக வரலாற்றில் என்றென்றும் நினைத்து போற்றக்கூடிய தம் தமிழ்த் தொண்டைப் பதிவு செய்தார். 1934 ஆம் ஆண்டில் அண்ணாமலைப் பல்கலைக் கழகத் தமிழ்த்துறைத் தலைவர் பதவியில் இருந்தி விலகி இலங்கை திரும்பிய அடிகளார், இங்கு இராமகிருஷ்ண மிஷன் மேற்கொண்டு வந்த கல்வி நடவடிக்கைகளில் ஈடுபட்டார். இராமகிருஷ்ண மிஷன் இமயமலைப் பகுதியில் உள்ள அல்மோரா என்ற இடத்தில் மாயாவதி ஆசிரமத்தில் இருந்து வெளியிடும் 'பிரபுத்த பாரதம்' என்ற சஞ்சிகையின் ஆசிரியராக 1934 ஆம் ஆண்டில் விபுலாநந்த அடிகள் நியமிக்கப்பட்டார். அப்போதுதான் இசைத் தமிழ் பற்றிய முழுமையான ஆய்வு செய்யப் பெற்று அரிய நூலாகிய 'யாழ் நூல்' உருவாக்கம் பெற்றது. 1943 ஆம் ஆண்டில் இலங்கையில் பல்கலைக்கழகம் இயங்கத் தொடங்கியபோது தமிழ்த் துறையின் முதலாவது பேராசிரியராக பலரின் வேண்டுகோளிற்கிணங்க பணிபுரிய இணங்கினார்.

யாழ் நூல் அரங்கேற்றத்துக்கு பின்னர் பாதிக்கப்பட்ட நிலையில் நாடு திரும்பினார். கொழும்பில் மருத்துவ விடுதி ஒன்றில் தங்கி சிகிச்சை பெறலானார். 1947 ஆம் ஆண்டு ஆடித்திங்கள் 19ஆம் நாள் சனிக்கிழமை இரவு (19.07.1947)சுவாமி விபுலாநந்தர் அமரத்துவம் அடைந்தார்..

அவரது உடல் அவர் உருவாக்கிய மட்டக்களப்பு சிவானந்த வித்தியாலயத்தின் முன்னாலுள்ள மரத்தின் கீழ் அமைக்கப்பட்ட கல்லறையில் அடக்கம் செய்யப்பட்டது. இலங்கை மக்களுக்கு இவர் ஆற்றிய சேவையினைப் பாராட்டி இலங்கை அரசு தேசிய வீரர் வரிசையில் ஒருவராக இவரைச் சேர்த்துள்ளது.

வி.ரி.சகாதேவராஜா...
(காரைதீவு குறூப் நிருபர்)

# நளினியின் விடுதலை மனுவை விசாரணைக்கு பட்டியலிடுமாறு உயர்நீதிமன்றம் உத்தரவு



ஆளுநர் ஒப்புதலுக்குக் காத்திருக்காமல் அமைச்சரவை முடிவின் அடிப்படையில் தன்னை விடுதலை செய்யக் கோரி ராஜீவ் கொலை வழக்கு ஆயுள்கைதி நளினி தாக்கல் செய்த மனுவை எண்ணிட்டு விசாரணைக்கு பட்டியலிடும்படி பதிவுத்துறைக்கு சென்னை உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

ராஜீவ் கொலை வழக்கு தொடர்பாக நளினி, முருகன், சாந்தன், பேரறிவாளன், ராபர்ட் பயஸ், ரவிச்சந்திரன், ஜெயக்குமார் ஆகிய ஏழு பேர் ஆயுள் தண்டனை கைதிகளாக உள்ளனர்.

இவர்கள் 7 பேரையும் விடுதலை செய்வது தொடர்பாக கடந்த அ.தி.மு.க ஆட்சியின் அமைச்சரவையில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. இந்த தீர்மானம் ஆளுநருக்கு அனுப்பப்பட்டது. இந்தத் தீர்மானத்தின் மீது ஆளுநர் முடிவெடுக்கவில்லை. இந்நிலையில் ஆளுநரின் ஒப்புதலுக்காக காத்திருக்காமல் தன்னை முன்கூட்டியே விடுதலை செய்ய வேண்டும் எனக் கோரி நளினி சார்பில் சென்னை உயர் நீதிமன்றத்தில் மனுத்தாக்கல் செய்யப்பட்டு இருந்தது. இதேபோல ஆயுள் தண்டனை அனுபவிக்கும் ரவிச்சந்திரனும் முன்கூட்டியே விடுதலை செய்யக் கோரி வழக்கு தொடர்ந்திருந்தார்.

இந்த வழக்குகள் தலைமை நீதிபதி முனீஷ்வர் நாத் பாண்டாரி, நீதிபதி பரத சக்ரவர்த்தி அடங்கிய அமர்வில் விசாரணைக்கு வந்தது. அப்போது, நளினி தரப்பில் ஆஜரான வழக்கறிஞர் ராதாகிருஷ்ணன், இந்திய அரசியல் சாசனம் 161வது பிரிவின் கீழ் தீர்மானம் நிறைவேற்றி ஆளுநருக்கு அனுப்ப அமைச்சரவைக்கு அதிகாரம் உள்ளது.

மேலும் அமைச்சரவை பரிந்துரை ஆளுநரை கட்டுப்படுத்தும் எனவும், அந்த பரிந்துரை மீது 42 மாதங்களாக எந்த முடிவும் எடுக்காமல் இருப்பதால் தனது தனிப்பட்ட சுதந்திரம் பாதிக்கப்பட்டுள்ளதாக கூறி தான் நளினி இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளதாக வாதிட்டார்.

இந்த வாதங்களை கேட்ட நீதிபதிகள், இதுவரை எண்ணிடப்படாமல் இருந்த இந்த மனுவுக்கு எண்ணிட்டு, விசாரணைக்கு பட்டியலிட பதிவுத்துறைக்கு உத்தரவிட்டனர்.

மேலும் முன்கூட்டிய விடுதலை கோரி இதே வழக்கில் ஆயுள் கைதியாக உள்ள ரவிச்சந்திரன் தரப்பில், 3 ஆயிரத்துக்கும் மேற்பட்ட ஆயுள் கைதிகள் விடுதலை செய்துள்ளதை போல 30 ஆண்டுகளுக்கும் மேலாக ஆயுள் தண்டனை அனுபவிக்கும் தன்னை விடுதலை செய்ய உத்தரவிட வேண்டுமென வாதிடப்பட்டது. ஆயுள் கைதிகளை விடுதலை செய்வது தொடர்பான அரசாணையை தாக்கல் செய்ய உத்தரவிட்ட நீதிபதிகள், ரவிச்சந்திரன் தொடர்ந்த வழக்கை அடுத்த வாரத்திற்கு தள்ளிவைத்தனர்.

# Expo 2020 துபாய் நிகழ்வில் இலங்கை மாணிக்கக்கல்

துபாயில் நடைபெறும் EXPO 2020 நிகழ்வில் நிறுவப்பட்டுள்ள ஶ்ரீ லங்கன் பெவிலியனால் மாபெரும் 100 மில்லியன் அமெரிக்க டொலர்கள் பெறுமதி வாய்ந்த மாணிக்கக்கற்கள் காட்சிப்படுத்தப்பட்டிருந்ததுடன், அதைப் பார்வையிடுவதற்கு பெருமளவான விருந்தினர்கள் இப்பகுதிக்கு விஜயம் செய்திருந்தனர்.

'Day of Sapphires' எனத் தலைப்பிடப்பட்டிருந்த இந்த நிகழ்வில் இலங்கையின் மாணிக்கக்கற்கள் மற்றும் ஆபரணங்கள் தயாரிப்பு முறைகள் பற்றிய விளக்கங்களைப் பெற்றுக் கொடுப்பதற்காக லண்டன் மற்றும் ஜெனிவாவில் Sotheby's மற்றும் Christie's இல் அனுபவங்களைக் கொண்டுள்ள புகழ்பெற்ற ஆபரணங்கள் நிபுணரான ஹெலென் மோல்ஸ்வேர்த் பங்கேற்றிருந்தார். அவர் விருந்தினர்களுக்கு விளக்கமளிக்கையில், இலங்கையின் மாணிக்கக்கற்கள், வர்த்தகம், அகழ்வு முறைகள், வெட்டல், தீட்டல் மற்றும் ஒட்டுமொத்த ஆபரணங்கள் தயாரிப்பு செயன்முறை பற்றி குறிப்பிட்டிருந்தார்.

மாணிக்கக்கல் மற்றும் ஆபரணங்கள் சம்மேளனத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த இந்த நிகழ்வினூடாக, சர்வதேச விற்பனைகளை மேம்படுத்துவதற்கான வாய்ப்பு ஏற்படுத்தப்பட்டிருந்தது. 'Ceylon Sapphire' (நீல மாணிக்கம்), மாணிக்கக்கற்கள் மற்றும் ஆபரணங்கள் பிரிவில் இலங்கை கொண்டுள்ள உயர் தரம் வாய்ந்த மாணிக்கக்கற்கள் (மென்சிவப்பு, மஞ்சள், தங்கம் மற்றும் நட்சத்திர மாணிக்கக்கற்கள்) போன்றவற்றைப் பெறுவதற்கான முக்கியமான மூலமாக அது அமைந்திருக்கிறது.

Sapphire Sri Lanka திட்டத்தின் தவிசாளரும், ஊக்குவிப்புகள் மற்றும் வர்த்தக சந்தைகள் உபதலைவருமான அல்தாவ் இக்பால் கருத்துத் தெரிவிக்கையில், "கடந்த காலங்களில் வர்த்தக கைமாறலுக்கு உட்பட்ட மிகவும் ப ழைமையான பண்டங்களில் நாட்டின் பெறுமதி வாய்ந்த மாணிக்கக்கற்கள் மற்றும் அலங்கரிக்கப்பட்ட ஆபரணங்களும் அடங்கி யுள்ளன. நீல மாணிக்கக்கற்களுக்காக மிகவும் புகழ்பெற்றுள்ளதுடன், இந்த மதிப்புமிக்க கற்கள் உலகின் புகழ்பெற்ற சில ஆபரணங்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதுடன், உலகின் அருங்காட்சியங்களிலும் பேணப்படுகின்றன.



இலங்கையின் நீலமாணிக்கக் கற்களுக்கு சர்வதேச மட்டத்தில் கிடைக்க வேண்டிய முன்னுரிமை அங்கிகாரத்தை பெற்றுக் கொடுக்கும் பயணத்தை நாம் ஆரம்பித்துள்ளோம். அதனூடாக எமது மாணிக்கக் கற்களுக்கு நன்மதிப்பை தோற்றுவித்து, அதனூடாக நாட்டின் பொருளாதாரத்துக்கு அவசியமாக அமைந்துள்ள அந்நியச் செலாவணியை திரட்டிக் கொள்வதற்கு எதிர்பார்க்கின்றோம்" என்றார்.

உலகின் சிறந்த ஐந்து மாணிக்கக்கற்கள் வளத்தைக் கொண்டுள்ள நாடுகளில் இலங்கை ஒன்றாகும்.

இலங்கையின் நீல மாணிக்கக்கல் வர்த்தக நாமத்தை முன்னே கொண்டு செல்வதற்கு மாணிக்கக்கல் மற்றும் ஆபரணங்கள் சம்மேளனம் தன்னை அர்ப்பணித்துள்ளது. இந்தத் திட்டத்தின் அங்கமாக, Expo 2020 துபாய் போன்ற வெற்றிகரமாக அமைந்திருக்கும் சர்வதேச நிகழ்வுகளில் தொடர்ந்தும் பங்கேற்பதற்கு சம்மேளனம் திட்டமிட்டுள்ளது. மேலும், முன்னோர்கள் பேணி வந்த கீர்த்தி நாமத்தை தக்க வைத்து, ஆபரணங்கள் அலங்காரத்தில் தமது திறமைகளை வெளிப்படுத்தும் இளம் வடிவமைப்பாளர்கள் தொடர்ந்தும் கண்காணிக்கப்பட்டு, அவர்களை நாட்டினுள் பேணுவதற்கு அவசியமான ஊக்குவிப்பு நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்படும்.

## 100 மில்லியன் அமெரிக்க டொலர் பெறுமதியான மாணிக்கக்கற்கள் காட்சிப்படுத்தல்





# 433 வருட காலம் பழைமை வாய்ந்த காலி கோட்டையின் ஆயுதக்கிடங்கு பிரதமரின் அறிவுறுத்தலில் புனரமைப்பு

**காலி கோட்டையில் நீண்ட காலமாக மூடப்பட்டிருந்த பழைய ஆயுதக் களஞ்சியம் மற்றும் வெடிமருந்து கிடங்குகள் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவின் பணிப்புரையின் பேரில், நகர அபிவிருத்தி அதிகார சபையினால் புனரமைக்கப்பட்டு பொதுமக்கள் பாவனைக்காக திறந்து வைக்கப்பட்டுள்ளதாக நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.**

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் 'சுபீட்சத்தின் நோக்கு' கொள்கையின் பிரகடனத்திற்கு அமைய மேற்கொள்ளப்பட்டு வரும் காலி கோட்டை புனரமைப்புத் திட்டத்தின் பூர்த்தி செய்யப்பட்ட செயற்திட்டங்களை பார்வையிடுமாறு பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சர் என்ற வகையில் பொதுமக்களுக்கு அழைப்பு விடுத்திருந்தார்.

இந்த வெடிமருந்துகள் மற்றும் வெடிமருந்து கிடங்குகள் காலி கோட்டையில் உள்ள பழைய கலங்கரை விளக்கத்தின் அடிவாரத்தில் அமைந்துள்ளன. மேலும் பல இடங்களில் போர் திட்டமிடல் தந்திரோபாயங்களின்படி பதுங்குகுழிகளில் கட்டப்பட்டன.

இந்த ஆயுதக் களஞ்சியப் பதுங்குகுழிகளில் மிகவும் ப ழைமையானது 433 ஆண்டுகள் பழமையான டச்சுக்காரர்களால் கட்டப்பட்ட பதுங்ககுழி ஆ கும். இரண்டாவது ப ழைமையான பதுங்குகுழி 362 ஆண்டுகள் ப ழைமையான போர்த்துக்கேய பதுங்குகுழி ஆகும். 226 ஆண்டுகள் பழைமையான ஆங்கிலேயர்களால் கட்டப்பட்ட பதுங்குகுழி மூன்றாவது பழமையான பதுங்குகுழி ஆகும்.

மூன்று பதுங்குகுழிகளும் படையெடுக்கும் படைகளால் கிளிப்பென்பெர்க் பதுங்குகுழி, ஈலோஸ் பதுங்குகுழி மற்றும் நட்சத்திர பதுங்குகுழி என அழைக்கப்பட்டன.

பொதுமக்களுக்குத் திறந்து வைக்கப்பட்டிருந்த பதுங்குகுழிகளில் போர்த்துகேயம், டச்சு மற்றும் ஆங்கிலேயப் படைகளின் ஆயுதங்கள் மற்றும் வெடிமருந்துகளின் பிரதிகள் காட்சிப்படுத்தப்பட்டன.

துப்பாக்கிகள், வெடிமருந்துகள், பீரங்கிகள் மற்றும் வெடிமருந்துகள், வெடிமருந்துகளை சேமிப்பதற்கான மரப்பீப்பாய்கள், வாள்கள், தென்னை நார், கயிறுகள், கத்திகள், சிறிய வெடிமருந்துகள், ஆயுதங்களைக் கொண்டு செல்லப் பயன்படும் கைவண்டிகள், பீரங்கி வண்டிகள் மற்றும் படையெடுப்புப் படைகளின் பெயர்கள் இந்த பதுங்குகுழிகளில் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளன. மற்றும் அடிமைகளின் உண்மையான வடிவத்தை ஒத்த மாதிரிகளை அறிமுகப்படுத்துகிறது.

போர்த்துக்கேய இராணுவத்தால் கட்டப்பட்ட பதுங்குகுழிகளில் ஒன்றின் சிறப்புக் குறிப்பில் பின்வருமாறு குறிக்கப்பட்டுள்ளது:

முதல் இடத்தில் நட்சத்திர பதுங்குகுழியின் கீழ் உள்ள வெடிமருந்து கிடங்கு போர்த்துக்கேய இராணுவத்தால் கட்டப்பட்டது என குறிப்பிடப்பட்டுள்ளது. அந்தக் குறிப்பில் மேலும் உள்ள விவரங்கள் பின்வருமாறு:

'நட்சத்திர பதுங்குழியில் அமைந்துள்ள இந்த நிலத்தடி வெடிமருந்துக் கிடங்கு, காலி கோட்டையில் உள்ள மிகப் பெரிய மற்றும் மிக முக்கியமான வெடிமருந்துக் கிடங்காகும். இது 16 ஆம் நூற்றாண்டில் போர்த்துக்கேயர்களால் கட்டப்பட்டதாக நம்பப்படுகிறது. டச்சுக்காரர்களால் மேம்படுத்தப்பட்டு காலி கோட்டையின் பல்வேறு இடங்களில் பீரங்கிகளுக்கான வெடிமருந்துகள் மற்றும் வெடிமருந்துகளை சேமித்து வைக்க பயன்படுத்தப்பட்டது.

20 ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில் துறைமுகக் கரையோரப் பாறைகளை அகழ்ந்தெடுக்க ஆங்கிலேயர்களால் பயன்படுத்தப்பட்ட டைனமைட்டும் இங்கு சேமிக்கப்பட்டது. வெடிமருந்து கிடங்கிற்கு வெளிச்சம் மற்றும் காற்றோட்டம் வழங்க, கோட்டைச் சுவரின் குறுக்கே கடலுக்குச் செல்லும் சதுர ஜன்னல் மற்றும் வடக்குப் பகுதியில் ஒரு ஆழமான மத்திய முற்றமும், விரிகுடா கூரையில் இரண்டு திறப்புகளும் கட்டப்பட்டன.

டச்சுக்காரர்களால் கட்டப்பட்ட ஆயுதக் களஞ்சியம் அல்லது ஆயுதக் பதுங்குகுழி பற்றியும் அவர்கள் சிறப்பாகக் குறிப்பிட்டுள்ளனர். அந்தக் குறிப்பில் உள்ள தகவல்கள் பின்வருமாறு:

'போர்த்துக்கேயர்களிடமிருந்து காலி கோட்டையைக் கைப்பற்றிய பின்னர் டச்சுக்காரர்களால் கட்டப்பட்ட முதல் போர்க் கோட்டை இதுவாகும். எலோஸ் கிரேக்க புராணங்களின் காற்றுகடவுளின் பெயரை வைத்துள்ளனர். எனவே கிரேக்க தொன்மங்களின் பெயரை போர்க்களங்களுக்கு பெயரிடுவது டச்சு பாரம்பரியமாகி விட்டது.

காலி கோட்டையைச் சுற்றியுள்ள மேற்கு கடல் பகுதியைப் பாதுகாப்பதற்காக டச்சு ஆட்சியின் போது பல பீரங்கித் துண்டுகள் இங்கு நிறுவப்பட்டன. பின்னர், ஆங்கிலேயர்கள் 6.3 அங்குல உயரம் கொண்ட பீரங்கியை இரண்டு செறிவான வட்ட தண்டவாளங்களில் நிறுவினர், இது டச்சு பீரங்கி ஏற்றங்களை மூழ்கடித்தது. கடலில் 4.3 கிமீ தூரம் செல்லும் எதிரிக் கப்பலைத் தாக்கும் திறன் கொண்டது இந்தப் பீரங்கி.



மேற்கூறிய பீரங்கிகளுக்கான வெடிமருந்துகளையும் மற்ற வெடிமருந்துகளையும் சேமித்து வைப்பதற்காக கிடங்கில் இரண்டு சிறிய பதுங்குகுழிகள் கட்டப்பட்டன. ஆங்கிலேயர் காலத்தில் கட்டப்பட்ட மற்ற பதுங்குகுழிகளைப் போல பதுங்குகுழி இல்லையென்றாலும், எதிரிகளின் தாக்குதலால் சேதமடையாமல் இருக்க, அவை தடிமனான ஒட்டுப்பலகையால் மூடப்பட்டிருக்கும்.

ஆங்கிலேயப் படையினரால் கட்டப்பட்ட கிளிபென்பெர்க் பதுங்குகுழி அல்லது ஆயுதக் களஞ்சியம் பற்றிய எந்தப் பதிவையும் ஆங்கிலேயப் படையினர் வைத்திருக்கவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது.

இந்தப் பிரதிகள் அனைத்தும் டர்க்கைஸ், துத்தநாகம் மற்றும் டோலமைட் போன்ற மூலப்பொருட்கள் உட்பட இயற்கைப் பொருட்களால் செய்யப்பட்ட நிறமிகளால் சாயமிடப்படுகின்றன. இங்குள்ள சிறப்பு என்னவெனில், அசல் பொருட்களைப் போலவே படங்கள் அமைக்கப்பட்டுள்ளன. இதற்குத் தேவையான புகைப்படங்கள், வரைபடங்கள் மற்றும் வடிவமைப்புகளின் ஒரு பகுதி இங்கிலாந்திலிருந்து பெறப்பட்டது. மீதமுள்ளவை இலங்கையில் பாதுகாக்கப்படுகின்றன. வெடிமருந்துக் கிடங்கின் திறப்பு விழா, வரலாறு, தொல்லியல், பள்ளி மாணவர்கள், ஆராய்ச்சி மற்றும் ஆய்வு மாணவர்களுக்கான நடைமுறை நூலகமாக ஏற்படுத்தப்பட்டுள்ளது.

தொல்பொருள் திணைக்களத்தின் மேற்பார்வையின் கீழ் மற்றும் காலி மரபுரிமை அமைப்பின் ஒத்துழைப்புடன், இந்த வெடிமருந்து கிடங்குகள் மற்றும் ஆயத களஞ்சியம் நகர அபிவிருத்தி அதிகாரசபையால் அதன் பாரம்பரியத்தையும் தொன்மையையும் பாதுகாக்கும் வகையில் பாதுகாக்கப்பட்டன.

நூற்றுக்கணக்கான ஆண்டு கால வரலாற்றின் ஆக்கபூர்வமான மறுஉருவாக்கம் மற்றும் பொது மக்கள் அதைப் பார்க்கும் வாய்ப்பிற்காக மக்கள் மகிழ்ச்சி அடைகின்றனர்.

இந்த வெடிமருந்து கிடங்குகள் மற்றும் ஆயுதக் களஞ்சியம் ஆகியவற்றை பார்வையிட்ட பாடசாலை ஆசிரியர்கள், மாணவர்கள் அவற்றைப் பற்றி அறிந்து கொள்வது மிகவும் அவசியம் என்றும், மாணவர்களுக்கு இது புதிய அனுபவமாக இருப்பதாகவும் தெரிவித்தனர்.

தென்மாகாண ஆளுநர் பேராசியர் விலி கமகே ஆயுதக் களஞ்சியசாலைகளைப் பார்வையிட்டார். காலி நகரசபை தலைவர் பிரியந்த ஜி. சஹபந்து, நகர அபிவிருத்தி அதிகார சபையின் காலி மாவட்டப் பணிப்பாளர் அனுர மெதவல, நகர அபிவிருத்தி அதிகார சபையின் காலி மாவட்ட பிரதிப் பணிப்பாளர் (மூலோபாய நகர அபிவிருத்தித் திட்டம்) கெலும் சிறிவர்தன, நகர அபிவிருத்தி அதிகார சபையின் காலி மாவட்ட அலுவலகக் கட்டிடக் கலைஞர் திரௌபதி தஹநாயக்க, காலியின் தலைவர் ஹெரிடேஜ் பவுண்டேஷன், காலி ஹெரிடேஜ் பவுண்டேஷன் அமைப்பின் திட்ட உத்தியோகத்தர் தரங்க லியனாராச்சி மற்றும் தொல்பொருள் திணைக்களத்தின் வலய அதிகாரி சாரங்க வருஷவிதான ஆகியோரும் இந்நிகழ்வில் கலந்து கொண்டனர்.

## பெருந்தொகையான மக்கள் பார்வையிடுவதற்காக வருகை

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ மற்றும் வீடமைப்பு அமைச்சர் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ ஆகியோரின் வழிகாட்டுதலுடன் நகர அபிவிருத்தி மற்றும் நகர அபிவிருத்தி, திண்மக்கழிவு நீர் அகற்றல் மற்றும் பொது சுகாதார இராஜாங்க அமைச்சர் கலாநிதி நாலக்க கொடஹேவா, நகர அபிவிருத்தி அமைச்சின் தலைவர் மற்றும் நகர அபிவிருத்தி அதிகாரசபையின் தலைவர் ஜெனரல் உதய நாணயக்கார, பணிப்பாளர் நாயகம் பிரசாத் ரணவீர ஆகியோரின் மேற்பார்வையின் கீழ் காலி நகரில் அமைந்துள்ள பழைய ஆயுதக் களஞ்சிய புனரமைப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டன.

**டப்ளியூ.கே.பிரசாத் மஞ்சு...**
*(நகர அபவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சரின் ஊடக செயலாளர்)*









# சிறுகதை முன்னோடி சி.வைத்திலிங்கத்தின் 'கங்காகீதம்' செ.சிறீக்கந்தராசாவின் ஆங்கில மொழிபெயர்ப்பில்

**சி. வைத்திலிங்கம் போன்ற நவீன இலக்கிய நுண்ணுணர்வும் புலமையும் மிக்க ஒருவர் ஈழத்துச் சிறுகதை முன்னோடியாய்த் திகழ்ந்திருக்கிறார் என்பது நமக்கெல்லாம் பெருமை சேர்ப்பதாகும்.**

தமிழ், ஆங்கிலம், சமஸ்கிருதம் ஆகிய மும்மொழிகளில் புலமைமிக்க ஒருவர் சிறுகதை உலகை செழுமைப்படுத்தித் தந்திருக்கிறார். யாழ்ப்பாணம் பரமேஸ்வராக் கல்லூரியில் அவர் இண்டர் வகுப்பில் சமஸ்கிருதம் படித்திருக்கிறார். எழுதுவினைஞராகப் பணியேற்க கொழும்பு சென்ற பின்னர் மீண்டும் தொடர்ந்து சமஸ்கிருத இலக்கியங்களை வாசித்து அம்மொழியின் நயங்களை ரசிக்கத் தொடங்கினார். 'காளிதாசனின் சாகுந்தலமும், குமார சம்பவமும் மேகசந்தேசமும் என்னைக் கவர்ந்ததுபோல் வேறோருநூலும் இன்றுவரை கவர்ந்ததில்லை. அவைகளிலே ஊறிவரும் காவியச் சுவையே, தெவிட்டாத இன்பம் அது' என்கிறார் சி.வைத்திலிங்கம்.

பெரியபுராணம், சிலப்பதிகாரம், வில்லிபாரதம், ஆண்டாள் பாடல்கள் ஆகிய தமிழ் இலக்கியப்பரப்பில் ஆழ்ந்து தோய்ந்தவர் சி.வைத்திலிங்கம் அவர்கள்.

தாகூர், கல்ஸ்வோதி, துர்கனீவ் ஆகியோரின் சிறுகதைகளை சி.வைத்திலிங்கம் அவர்கள் ஆங்கிலத்திலிருந்து தமிழில் மொழிபெயர்த்து ஈழகேசரியில் வெளியிட்டிருக்கிறார். துர்கனீவ் எழுதிய நாவல் ஒன்றினை 'மாலை வேளையில்' என்ற தலைப்பில் ஈழகேசரியில் தொடராக மொழிபெயர்த்து எழுதினார்.

'என்னைப் பொறுத்தவரையில் கு.ப.ராஜகோபாலனின் சிறுகதைகளும் ஒற்றையங்க நாடகங்களும் என்னை மிகவும் கவர்ந்தன. புதுமைப்பித்தனையும், மௌனி, பிச்சமூர்த்தி, த.நா.குமாரஸ்வாமி, க.நா.சுப்ரமணியம், சி.சு.செல்லப்பா, சிதம்பர சுப்பிரமணியம் முதலியோரின் எழுத்துக்களையும் நான் ஆர்வத்துடன் படித்தபோதிலும், எனக்கும் கு.ப. ராஜகோபாலனுக்குமிடையில் ஏதோ ஓர் ஆத்மீக உணர்வு இருப்பதாகவே உணரலானேன். அவ்வளவு தூரம் அவருடைய கதைகளில் ஈடுபாடு இருந்தது. நான் சிறுகதை எழுதுவதற்கு ஆதர்ஷபுருஷனாக அவரே எனக்கு உத்வேகம் கொடுத்தார் என்று சொன்னாலும் மிகையாகாது' என்று 'எழுத்துலகில் நான்' (கலைச்செல்வி, ஆண்டுமலர்,1959) என்ற கட்டுரையில் எழுதுகிறார் சி.வைத்திலிங்கம்.

'கங்காகீதம்' என்ற சி.வைத்திலிங்கம் அவர்களின் சிறுகதைத் தொகுப்பில் பல கதைகளில் கு.ப.ரா.வின் தாக்கத்தை நாம் உணர முடியும்.

கலைமகளுக்கு ஒரு கதை எழுத வேண்டும் என்ற விருப்பத்தில் ஒரு கதையை எழுதி, அதற்குத் தகுந்த பெயர் கொடுக்கமுடியாமல், வருவது வரட்டும் என்று தனது கதையை அனுப்பி, பொருத்தமான தலைப்புடன் வெளியிடுமாறு சி.வை.கேட்டு கதையைக் கலைமகளுக்கு அனுப்பி வைத்திருக்கிறார். 'ஏன் சிரித்தார்?' என்ற தலைப்பிடப்பட்டு அக்கதை கலைமகளில் பிரசுரம் பெற்றது.

'அந்தக் கதையைப் பலர் மெச்சியதாக நான் இந்தியா போன சமயத்தில் கி.வா.ஜகந்நாதன் அவர்களே தெரிவித்தார். ஹிந்துப் பத்திரிகையிலும் He has portrayed with delicacy and power the psychological conflict between fidelity and temptation என்று விமர்சனம் செய்திருந்தார்கள்.

சி.வைத்திலிங்கம் ஏறக்குறைய 25 சிறுகதைகள் வரையில் எழுதியிருக்கிறார் என்று க.குணராசா 'ஈழத்துச் சிறுகதை வரலாறு' என்ற நூலில் எழுதுகிறார். அவற்றுள் பன்னிரண்டு சிறுகதைகள் ஈழகேசரியில் வெளியாகியுள்ளன. மேலும் பத்துக் கதைகள் கலைமகளில் வெளியாகின. அவர் எழுதிய பெரும்பாலான சிறுகதைகளை 1939_ 1942 காலப்பகுதியில், நான்கு ஆண்டுகாலப்பகுதிலேயே எழுதி முடித்திருக்கிறார். அவரின் அனைத்துக்கதைகளும், விமர்சனங்கள், பத்தி எழுத்துகள், வானொலிப் பேச்சுகள் யாவும் தொகுக்கப்படவேண்டிய காலம் இன்று கனிந்துள்ளது. இந்நிலையில் சி.வைத்திலிங்கம் அவர்களின் 'கங்காகீதம்' சிறுகதைத் தொகுப்பினை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்து, ஈழத்துச் சிறுகதை முன்னோடியின் படைப்புகளை உலக அரங்கில் எடுத்து வைக்கும் அரிய இலக்கியப்பணியினை ஆற்றலோடு நிறைவு செய்திருக்கிறார் அறிஞர் செ.சிறீக்கந்தராசா. தமிழிலும் ஆங்கிலத்திலும் இயல்பாக எழுதும் ஆற்றல் கைவரப்பெற்றவர் சிறீக்கந்தராசா.

ஆங்கிலத்திலும் தமிழிலுமாக முப்பது நூல்கள் வரை பல்வேறு இலக்கியத்துறை சார்ந்து அவர் ஆக்கியுள்ள நூல்கள் அவரது இலக்கிய ஆற்றலுக்குச் சான்று பகர்வன. London School of Economics இல் சட்டத்துறையில் முதுகலைமாணிப் பட்டத்தை நிறைவு செய்தவர் சிறீக்கந்தராசா.

சிலப்பதிகாரம், மணிமேகலை ஆகிய இரு பெருங் காவியங்களை ஆங்கிலத்தில் உரைநடையில் Alastair McGlashan அவர்களுடன் இணைந்து சிறீக்கந்தராசா ஆக்கிய நூல் அற்புதமான படைப்பாகப் பாராட்டப்பட்டது.

யாழ்ப்பாண வாழ்வியலில் தோய்ந்த நல்லனுபவமும், மொழி பெயர்ப்பாற்றலும், தமிழ் இலக்கிய, இலக்கணப் புலமையும், ஆங்கிலத்திலும் எழுத்து வளமும் வாய்க்கப்பெற்ற சிறீக்கந்தராசா அவர்களின் மொழியாக்கத்தில் சி.வைத்திலிங்கம் அவர்களின் எழுத்து சிறக்கிறது.

**மு.நித்தியானந்தன்...**
*(லண்டன்)*

# கல்வியங்காடு ஞானபாஸ்கரோதய சங்கத்துக்கு விளையாட்டரங்கம் அமைக்க 2 கோடி ரூபா

**'முத்தையா இராஜேஸ்வரி ஞாபகார்த்த உள்ளக விளையாட்டு அரங்கு' என்ற பெயரில் தனது தாயாரின் நினைவாக யாழ்ப்பாணம் கல்வியங்காடு ஞானபாஸ்கரோதய சங்கத்திற்கு உள்ளக விளையாட்டு அரங்கம் அமைக்க இரண்டு கோடி ரூபா வழங்கிய மொன்றியல் வர்த்தகப் பிரமுகர் ஏ.எம்.ஆர் முத்தையா இராஜகோபால் தனது துணைவியார் சகிதம் அதனை திறந்து வைத்தார். அந்நிகழ்வு கல்வியங்காட்டில் சிறப்பாக நடைபெற்றது.**

யாழ்ப்பாணம் அரசாங்க அதிபர் க. மகேசன் சார்பாக பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட மருதலிங்கம் பிரதீபன் தலைமையில் இடம்பெற்ற இந்த திறப்பு விழாவில் கோப்பாய் பிரதேச செயலாளர் திருமதி எம்.சுபாசினி , வலி வடக்கு பிரதேச சபைத் தலைவர் நிரோஸ் தியாகராஜா, கிராம அலுவலர் எஸ். தயாபரன், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சுரேஷ் பிரேமச்சந்திரன், யாழ்ப்பாணம் நகர பிதா விசுவலிங்கம் மணிவண்ணன், முன்னாள் வடக்கு மாகாண விவசாய அமைச்சரும் தேசிய பசுமை இயக்கத்தின் தலைவருமான பொன்னுத்துரை ஐங்கரநேசன், கனடா உதயன் பத்திரிகையின் பிரதம ஆசிரியர் ஆர். என். லோகேந்திரலிங்கம், கோப்பாய் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி வெரகெதர உட்பட பல பிரமுகர்கள் கலந்து கொண்டனர். இந்த திறப்புவிழாவில் மொன்றியல் ஏ.எம்.ஆர் வர்த்தக நிறுவன நிலையத்தின் அதிபரும், உள்ளக விளையாட்டு நிலையம் அமைக்க இரண்டு கோடி ரூபா வழங்கியவருமான முத்தையா இராஜகோபால் தனது துணைவியார் திருமதி பராசக்தி சகிதம் நாடாவை வெட்டி உள்ளக விளையாட்டு நிலையத்தை திறந்து வைத்தார்.






மேற்படி விளையாட்டு அரங்க திறப்பு விழாவில் கல்வியங்காடு வாழ் பொதுமக்கள் உட்பட AMR முத்தையா இராஜகோபால் குடும்பத்தினர், உறவினர்கள், பிரமுகர் என பலர் வெளிநாடுகளில் இருந்தும் கலந்து கொண்டனர்.

யாழ் மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் மருதலிங்கம் பிரதீபன் உரையாற்றும் போது இவ்வாறான முக்கியமான வேலைத் திட்டங்களுக்கு பெரும்பாலும் அரசாங்கத்தின் உதவியையே எதிர்பார்க்கும் காலகட்டத்தில், தான் பிறந்த ஊருக்கு கோடிக்கணக்கான ரூபாசெலவில் இந்த உள்ளக விளையாட்டு நிலையத்தை அமைக்க நிதி வழங்கிய முத்தையா இராஜகோபால், அவரது துணைவியார் திருமதி பராசக்தி ஆகியோர் போற்றுதற்கு உதவியவர்கள் என்றார்.

கனடா உதயன் பத்திரிகையின் பிரதம ஆசிரியரும், கனடாவில் இயங்கும் ரொரன்ரோ மனித நேயக்குரல் அமைப்பின் தலைவருமான ஆர். என். லோகேந்திரலிங்கம் தனது உரையில் "கனடாவின் மொன்றியல் நகரில் வர்த்தகத் துறையில் வேற்று இனத்தைச் சார்ந்த வர்த்தகர்களிலும் பார்க்க செல்வாக்குப் பெற்றவராகத் திகழும் முத்தையா இராஜகோபால், அங்கு சமூகப் பணிகளுக்கு மாத்திரம் அல்ல கலை இலக்கிய முயற்சிகளுக்கும் தொடர்ச்சியாக ஆதரவு நல்கி வருகின்ற ஒரு வர்த்தகப் பெருமகன். அவர் இன்று தான் பிறந்த ஊரை மறந்து விடாமல் இங்குள்ள இளம் விளையாட்டு வீரர்களை ஊக்குவிக்க வேண்டும் என்ற ஒரே நோக்குடன் உள்ளக விளையாட்டு அரங்கொன்றை அமைத்துத் தந்துள்ளார். இந்த நற்பணியானது புலம்பெயர்ந்து வாழும் ஏனைய எமது மக்களின் கண்களையும் திறக்க உதவிடும் என்று நான் நம்புகின்றேன்" என்றார்.

ஏற்புரை வழங்கிய முத்தையா இராஜகோபால், இந்தத் திட்டத்திற்கு உதவி செய்ய வேண்டும் என்று கல்வியங்காடு ஞானபாஸ்கரோதய சங்கத்தினர் தன்னிடம் கோரிக்கை முன்வைத்த போது, தான் அவர்களிடம் எவ்வளவு காலத்தில் உள்ள விளையாட்டு நிலையத்தின் கட்டடத்தை கட்டி முடிப்பீர்கள் என்று கேட்டதாகவும் தனது விருப்பத்திற்கு ஏற்ப நிர்வாகிகள் குறுகிய காலத்தில் இந்த கட்டத்தை கட்டி முடித்தார்கள் என்றும் தெரிவித்தார்.

இந்த திறப்பு விழாவை யாழ்ப்பாணம் கல்வியங்காடு ஞானபாஸ்கரோதய சங்கத்தினர் ஏற்பாடு செய்திருந்தனர். ஞானபாஸ்கரோதய சங்கத்தின் பொருளாளர் தனுசன் நன்றியுரை வழங்கினார்.

## மலையகத்தின் மாமனிதர்... 03ஆம் பக்கத் தொடர்

பயன்படுத்த வேண்டும் என்பதில் தப்பு இல்லை, பயன்படுத்தாதது தான் தப்பு என அவர் 1977ம் ஆண்டு நடைபெற்ற மத்திய கொழும்பு தேர்தலில் வெற்றி பெறாமையால் எடுத்து காட்டினார். அது அவரது தோல்வியல்ல. தமிழ் மக்களின் தோல்வி.

ஆனால், அவர் மனம் தளரவில்லை. மீண்டும் பன்னிரண்டு வருடங்கள் காத்திருந்து 1989ம் ஆண்டு புதிய விகிதாசார தேர்தல் முறையின் கீழ் போட்டியிட்டு அவர் கொழும்பு மாவட்ட எம்பியாக வெற்றிபெற்றார். நாம் செல்லாசாமியை பின்பற்றி மனம் தளராமல் முன்னேறினோம். அவர் கொழும்பில் மாவட்ட அபிவிருத்தி சபை உறுப்பினராக. மேல்மாகாணசபை உறுபப்பினராக, மாகாணசபை அமைச்சராக, மத்திய அரசில் ராஜாங்க கைத்தொழில் அமைச்சராக, அஞ்சல்துறை துணை அமைச்சராக பணியாற்றியுள்ளார். எமக்கு வழிகாட்டி சென்ற உங்களுக்கு நான் இங்கே இருந்தபடி “சல்யூட்” செய்கிறேன். “சல்யூட் ஐயா..!”

## தலாபிடியா... 03ஆம் பக்கத் தொடர்...

உதவிச்செயலாளர் எம்.எம்.எம். ஷப்ராஸ், கௌரவ அதிதியாக அகில இலங்கை அஹதியாவின் தலைவர் எம்.ஆர்.எம்.ஸறூக், விசேடபேச்சாளராக அகில இலங்கை அஹதியாவின் பொருளாளர் அக்ரம் ஜுனைத் ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.

## தங்கத்தின் விலை...

24 கரட் தங்கப் பவுண் ஒன்றின் விலை 167,000 ரூபாவாகவும் 22 கரட் தங்கப் பவுண் ஒன்றின் விலை 154,500 ரூபாவாகவும் நேற்று விற்பனை செய்யப்பட்டதாக அவர்கள் தெரிவித்தனர்.

## கொழும்பில் பாரிய தீ ...

கஜிமாவத்தை பகுதியில் உள்ள வீடொன்றில் நேற்றுமுன்தினம் நள்ளிரவு 12 மணியளவில் தீ விபத்து ஏற்பட்டதாகவும் பின்னர் அருகில் உள்ள வீடுகளுக்கும் தீ வேகமாக பரவியதாகவும் அப்பகுதிவாழ்மக்கள் தெரிவித்தனர்.

தகவல் வழங்கப்பட்டதையடுத்து தீயணைப்பு படையினரால் தீ முற்றாக அணைக்கப்பட்டதுடன்,இதற்காக ஏழு தீயணைப்பு வாகனங்கள் ஈடுபடுத்தப்பட்டதாக கொழும்பு மாநகர சபையின் தீயணைப்புப் பிரிவு தெரிவித்துள்ளது.

சேத விபரங்கள் மற்றும் தீ விபத்திற்கான காரணம் தொடர்பில் விசாரணைகள் முன்னெடுக்கப்படுகின்றன.

## கடவத்தை பகுதியில்...

தப்பிச் சென்றதாக விசாரணைகளில் தெரியவந்துள்ளது. சம்பவத்தில் 30 மற்றும் 31 வயதுடைய இருவரே உயிரிழந்தாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

## தமிழகம் வரும் ஈழத்தமிழருக்கு...

டிடிவி தினகரன் வலியுறுத்தியுள்ளார்.

இது குறித்து நேற்று அவர் தனது டுவிட்டர் பக்கத்தில் வெளியிட்டுள்ள பதிவில், “இலங்கையில் ஏற்பட்டுள்ள கடும் பொருளாதார நெருக்கடியால் நமது தொப்புள் கொடி உறவான தமிழர்கள் பாதிக்கப்பட்டு ஏதிலிகளாக தமிழகம் வரத் தொடங்கியிருப்பது கவலையளிக்கிறது. அப்படி வருகிறவர்களை எந்த வித இன்னலுக்கும் ஆளாக்காமல் ஆதரவளிக்க வேண்டிய கடமை தாய்த் தமிழகத்தின் அரசுக்கு இருக்கிறது.

தமிழகத்தையொட்டிய கடற்பகுதியிலுள்ள திட்டுகளில் நிராதரவாக இறக்கிவிடப்படும் இலங்கைத் தமிழர்களை கடலோரக் காவல் படையும், இந்திய கடற்படையும் பாதுகாப்பாக அழைத்து வந்து கரை சேர்க்க வேண்டும். இப்பணிகளை உள்ளார்ந்த அக்கறையோடு மத்திய, மாநில அரசுகள் செய்திட வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்” என்று தினகரன் கூறியுள்ளார்.

## நாட்டை கட்டியெழுப்புவதற்கு...

காண விரும்புவதாக சம்பந்தன் தெரிவித்தார்.

நீண்டகாலமாக கைது செய்யப்பட்டு, தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்கள் தொடர்பில் எடுக்கப்படும் எதிர்கால நடவடிக்கைகள், நீண்டகாலமாக பயிர்ச் செய்யப்பட்ட காணிகளை விடுவித்தல், காணாமற்போனோர் தொடர்பான விசாரணைகளை முன்னெடுத்தல், புதிய அரசியலமைப்பு தமிழ் மற்றும் சிங்கள மொழிகளில் மொழி பெயர்க்கப்பட்டதன் பின்னர் அதில் சேர்க்கப்பட வேண்டிய திருத்தங்கள் தொடர்பில் கலந்துரையாடுதல், வடக்கு – கிழக்கு அபிவிருத்தி நிதியத்தை ஸ்தாபித்தல் போன்ற விடயங்கள் தொடர்பில் இங்கு கவனம் செலுத்தப்பட்டது.

பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ, அமைச்சர்களான பேராசிரியர் ஜி.எல் பீரிஸ், சமல் ராஜபக்ஷ, அலி சப்ரி, ஜனாதிபதியின் செயலாளர் காமினி செனரத், ஜனாதிபதியின் தலைமை ஆலோசகர் லலித் வீரதுங்க, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை பிரதிநிதித்துவப்படுத்தி பாராளுமன்ற உறுப்பினர்களான எம்.ஏ. சுமந்திரன், சாள்ஸ் நிர்மலநாதன், சிவஞானம் ஸ்ரீதரன், சாணக்கியன் ராசமாணிக்கம், தவராஜா கலையரசன், செல்வம் அடைக்கலநாதன், எஸ். நோகராதலிங்கம், கோவிந்தன் கருணாகரன் ஆகியோரும் இக்கலந்துரையாடலில் பங்கேற்றனர்.

## 225 பேருமே எமக்கு...

உரையாற்றும் போதே முன்னாள் ஜனாதிபதி இவ்வாறு தெரிவித்தார்.

மறைந்த நான்கு பாராளுமன்ற உறுப்பினர்களும் இன்றுள்ள அரசியல்வாதிகளுக்கு முன்மாதிரியானவர்கள் என்றும் அவர்கள் இதுபோன்ற காலத்தில் பாராளுமன்றத்தில் இருக்க வேண்டியவர்கள் என்றும் அவர் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று, முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்களான எம். எஸ். செல்லச்சாமி, க.தங்கேஸ்வரி,பெற்றி வீரக்கோன், ஜஸ்டின் கலப்பத்தி ஆகியோருக்கான அனுதாபப் பிரேரணை நடைபெற்றது.

இங்கு தொடர்ந்தும் உரையாற்றிய முன்னாள் ஜனாதிபதி;

சட்டத்தரணியான பெற்றி வீரக்கோன் சிறந்த அரசியல்வாதி மட்டுமன்றி சிறந்த மக்கள் சேவையாளருமாவார். சட்டத்துறை, தொழிற்சங்க துறை, அரசியல் மற்றும் சமூகத் துறைகளில் அகலக்கால் பதித்து மக்களுக்கு சிறந்த சேவை செய்தவர்.

அதேபோன்று மறைந்த க. தங்கேஸ்வரி எனது அடுத்த மாவட்டத்தில் பாராளுமன்ற உறுப்பினராக பதவி வகித்து பிரதேச மக்களின் அபிமானத்தைப் பெற்றவர். முன் மாதிரியாக செயல்பட்ட அவர் இக்காலத்தில் பாராளுமன்றத்தில் இருக்க வேண்டியவர்.

அதேபோன்று தொழிற்சங்கத் துறையில் அளப்பரிய சேவை செய்தவர் எம். எஸ்.செல்லச்சாமி, சிறுபான்மை மக்களுக்காக குரல் கொடுத்தவர். பாராளுமன்றத்திலும் வெளியிலும் முன்மாதிரியாக செயற்பட்டார். அவர் போன்றவர்கள் இன்று பாராளுமன்றத்தில் இருக்க வேண்டும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.(ஸ)

## நாட்டுக்காக மத்திய கிழக்கு...

நடைபெற்ற சர்வகட்சி மகாநாட்டிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். தொடர்ந்து கருத்துத் தெரிவித்த அவர், அரசாங்கம் மக்களுக்கு வெளிப்படுத்தியதனை விடவும் நாடு எதிர்நோக்கும் பொருளாதார நெருக்கடி மோசமானது.

தற்சமயம் நாடு எதிர்நோக்கும் நெருக்கடியை விரைவாகத் தீர்க்கும் நோக்கில் ஒரு இடைக்காலத் தீர்வாக நன்கு ஆலோசித்து எடுக்கப்பட்ட தீர்வை உங்கள் முன் சமர்ப்பிக்கிறோம்.

அரசு ஒரு பில்லியன் டொலர்களை கடுமையான நிபந்தனைகளின் கீழ் அண்டைய நட்பு நாடுகளிடமிருந்து பெற முனைவதுடன் இலகுவாக ஐந்து அல்லது ஆறு பில்லியன் டொலர்களை திரட்டக்கூடிய வழிவகைகளில் நம்பிக்கை வைக்கத் தவறியுள்ளது. இத்தொகையை இலகுவாகப் பெறக்கூடிய எண்ணெய் வளம் பொருந்திய மத்திய கிழக்கு நாடுகளின் உதவியை அரசு உரிய முறையில் நாடவில்லை என்பது கவலைக்கிடமானதாகும்.

தேசத்தின் நன்மையைக் கருத்தில் கொண்டு மத்திய கிழக்கு நாடுகளிலிருந்து இலக்குத் தொகையான ஐந்து அல்லது ஆறு பில்லியன் அமெரிக்க டொலர்களை முதலீடாகப் பெறும் பேச்சுவார்த்தைகளில் ஈடுபடும் முயற்சியில் இறங்க நாம் தயாராக உள்ளோம். வருடாந்தம் 7 பில்லியன் அளவு நிகர வருமானம் இந்த நாடுகளில் தொழில் புரியும் ஊழியர்களின் ஊடாக நமக்கு கிடைக்கின்றது.

இன்றைய ஆட்சியாளர்கள் உதவிக்கரம் நீட்டுகின்ற நாடுகளின் நிபந்தனைகளின் பாதகம் குறித்துக் கவனம் செலுத்த முடியாத நிலைக்கு ஓரம் கட்டப்பட்டுள்ளனர். எமது கோரிக்கை இலங்கையர்கள் அனைவரும் சரி சமமானவர்களாக மதிக்கப்படவேண்டும் என்பதாகும். எமது நாடு பல்லின, பன்மத, பல் கலாசார, பன்மொழி நாடாக தொடர வேண்டும்.

அரசியலமைப்புச் சட்டத்தில் பௌத்த மதத்துக்கு அளிக்கப்பட்டுள்ள முதன்மை நிலையைக் கேள்விக்கு உட்படுத்த எவரும் முன்வரவில்லை. எனினும், மக்களைப் பிளவு படுத்தக் கூடிய வெறுப்புணர்வுப்பேச்சுக்கள், இன ரீதியான செயற்பாடுகள் அனைத்தும் கைவிடப்பட வேண்டும் என்றார்.

## நொவிஸ் கரம்... 03ஆம் பக்கத் தொடர்

அரையிறுதிப் போட்டிக்கு தெரிவாகும் வீரருக்கு ரூ. 20 ஆயிரமும் காலிறுதிக்கு தெரிவாகும் வீரருக்கு ரூ.10 ஆயிரமும் சிறந்த கனிஷ்ட வீரருக்கு ரூ.10 ஆயிரம் பணப்பரிசுடன் கிண்ணமும் சிறந்த பெண் வீராங்கனைக்கு ரூ.10 ஆயிரம் பணப்பரிசு கிண்ணமும் சிறந்த சிரேஷ்ட வீரருக்கு ரூ.10 ஆயிரம் பணப் பரிசுடன் கிண்ணமும் வழங்கப்படும் என ஏற்பாட்டுக்குழுவினர் தெரிவித்துள்ளனர். மேலதிக விபரங்களுக்கு 139/172/1 பழைய கெஸ்பாவ வீதி தெல்கந்த நுகேகொடை, 0701222242 எனும் இலக்கத்துடன் தொடர்பு கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

## அரசாங்கத்தை... 03ஆம் பக்கத் தொடர்...

அரசாங்கத்திற்கு ஒத்துழைப்பு வழங்க வேண்டிய எதிர்க்கட்சியினரே அரசாங்கத்துக்கு எதிராகவும் நாட்டுக்கு எதிராகவும் பிரசாரங்களை மேற்கொண்டு வருவதுடன் மக்களை திசை திருப்பும் நடவடிக்கைகளையும் மேற்கொண்டு வருகின்றனர்.மக்கள் ஒரு போதும் அதற்கு ஏமாறக் கூடாது.

அரச வங்கிகளுக்கு மத்திய வங்கி அழுத்தம் கொடுப்பதாக எதிர்க்கட்சியினர் மேற்கொண்டு வரும் பிரசாரத்தின் காரணமாக மத்திய வங்கி அது தொடர்பில் தெளிவுபடுத்தல் அறிக்கையொன்றை வெளியிடவும் நேரிட்டுள்ளது என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.(ஸ)

## மத்திய வங்கி ஆளுநர் கோப்... 03ஆம் பக்கத் தொடர்...

செயற்பாடு பாராளுமன்றத்தை அவமதிப்பதாகும் என்பது அரசாங்க நிதி பற்றிய குழு உறுப்பினர்களின் கருத்தாக இருந்தது.

இது தொடர்பில் கண்டறிவதற்கு சபாநாயகருக்கு முறைப்பாடு செய்வது பொருத்தமானது என குழுவின் தலைவர் குறிப்பிட்டார்.

அரசாங்க நிதி பற்றிய குழுவின் இந்தக் கூட்டத்தை மீண்டும் ஏப்ரல் 01 ஆம் திகதி கூடுவதற்கு இதன் போது தீர்மானிக்கப்பட்டது.

## அரசாங்கம் பாராளுமன்றத்திற்கு... 03ஆம் பக்கத் தொடர் ...

உரையாற்றிய அவர், நாடு தற்போது எதிர்கொண்டுள்ள பொருளாதார நெருக்கடி தம்மால் ஏற்படுத்தப்பட்டதல்ல என ஜனாதிபதி நாட்டு மக்களுக்கு உரையாற்றுகையில் தெரிவித்திருந்தார்.

ஆனால் இந்த பிரச்சினைக்கு ஜனாதிபதியின் பிழையான தீர்மானங்களே காரணம் என நாம் ஆதாரங்களுடன் பலதடவைகள் சபையில் தெரிவித்துள்ளோம். அதனால் அரசாங்கம் தனது பிழையான தீர்மானமே இந்த பிரச்சினைக்கு காரணம் என்பதை ஏற்றுக்கொள்ளவேண்டும்.

அத்துடன் பொருளாதார துறையில் மாத்திரமல்லாது நாட்டின் தேசிய பாதுகாப்பை காட்டிக்கொடுக்கும் நிலைக்கு நாடு தள்ளிவிடப்பட்டுள்ளது.

தற்போது அரசாங்கம் சில வெளிநாடுகளுடன் பல்வேறு ஒப்பந்தங்களை மேற்கொண்டு வருகின்றது. அது தொடர்பில் பாராளுமன்றத்துக்கு தெரிவிப்பதுமில்லை, வெளிப்படைத் தன்மையுடன் செயற்படுவதுமில்லை. அதனால் நாட்டின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தலான நிலைமை ஏற்படலாம். நாடு பொருளாதார நெருக்கடியை எதிர்கொள்ளும்போது எமது நட்பு நாடுகளுடன் கலந்துரையாடி நாடடின் பாதுகாப்பு மற்றும் இறையாண்மையை பாதுகாத்துக்கொண்டு எமக்கான உதவிகளை பெற்றுக்கொண்டிருக்க முடியும் அப்போது அதனை செய்யாமல், நாடு பாரிய பிரச்சினைக்கு தள்ளப்பட்ட பின்னர் உதவி கோரும் நிலைக்கு தள்ளப்பட்டுள்ளது.

இத்தகைய சந்தர்ப்பத்தில் அந்த நாடுகள் விதிக்கும் நிபந்தனைகளுக்கு நாம் கட்டுப்படவேண்டிய நிலையே ஏற்படுகின்றது. தற்போது அந்த நிலையே ஏற்பட்டிருக்கின்றது. அமைச்சர் பசில் ராஜபக்ஷ இந்தியாவுக்கு சென்று கடன் பெற்றுக்கொள்ள செய்துகொண்ட நிபந்தனைகள் என்ன என்பது யாருக்கும் தெரியாது. அதனால் தேசிய பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்கு இந்த ஒப்பந்தங்களை சபைக்கு வெளிப்படுத்துவது அவசியம் என்றும் அவர் தெரிவித்தார்.

## ரஞ்சன் ராமநாயக்க ...

வழக்கு, உயர் நீதிமன்ற நீதியரசர் புவனேக அளுவிஹார தலைமையிலான எல்.ரி.பி. தெஹிதெனிய மற்றும் காமினி அமரசேகர ஆகியோரடங்கிய நீதியரசர்கள் குழாம் முன்னிலையில் விசாரணைக்கு வந்தது. இதன்போதே ரஞ்சன் ராமநாயக்க தன் மீதான குற்றச்சாட்டை ஒப்புக் கொள்வதாக நீதிமன்றத்துக்கு அறிவித்தார்.

இவ் வழக்கு தொடர்பில் சிறைச்சாலை அதிகாரிகளால் ரஞ்சன் ராமநாயக்க உயர் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டிருந்தார். இந்த 02 ஆவது நீதிமன்ற அவமதிப்பு குற்றச்சாட்டு தொடர்பில் தான் நிரபராதியென ஏற்கனவே குற்றச்சாட்டு கையளிக்கப்பட்ட போது ரஞ்சன் ராமநாயக்க அறிவித்திருந்தார்.

எனினும் இந்த வழக்கு விசாரணைக்கு வந்த போது, ரஞ்சன் ராமநாயக்கவுக்காக நீதிமன்றத்தில் ஆஜராகிய ஜனாதிபதி சட்டத்தரணி அனுர மெத்தேகொட, இவ்வழக்கில் முன்வைக்கப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்கு தனது சேவை பெறுநர் ஏற்கனவே நிரபராதியென தன் நிலைப்பாட்டை அறிவித்திருந்ததால், அதனை மாற்றி குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் தான் குற்றவாளியென்ற நிலைப்பாட்டை முன் வைக்க அனுமதியளிக்குமாறு கோரினார்.

இதனையடுத்து, நீதியரசர்கள் குழாம், குற்றம் சாட்டப்பட்டுள்ள ரஞ்சன் ராமநாயக்கவை திறந்த நீதிமன்றத்தில் அழைத்து அவரது சட்டத்தரணி முன்வைத்த விடயம் தொடர்பில் வினவியது.

அதற்கு பதிலளித்த ரஞ்சன் ராமநாயக்க, இதற்கு முன்னர் தான் நிரபராதியென தன் நிலைப்பாட்டை நீதிமன்றத்தில் அறிவித்திருந்தபோதும் அதனை வாபஸ் பெற்று முன்வைக்கப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்களுக்கு தான் குற்றவாளியென ஒப்புக்கொள்வதாக சிங்கள மொழியில் தெரிவித்தார். இதனையடுத்து இவ்வழக்கில் எழுத்து மூல சமர்ப்பணங்கள் இருப்பின் மே 04 ஆம் திகதிக்கு முன்னர் சமர்ப்பிக்க உத்தரவிட்ட நீதியரசர்கள் வழக்கின் தீர்ப்பை திகதி குறிப்பிடாது ஒத்திவைத்தனர்.

## அமைச்சுக்கு தெரியாமல்...

எவ்வித அதிகரிப்பும் இடம்பெறவில்லை என்றும் குறிப்பிட்டுள்ளார்.

தூரப் பிரதேசங்களுக்கான ரயில் கட்டணம் அதிகரிக்கப்பட்டுள்ளதாக ரயில்வே திணைக்களம் நேற்று முன்தினம் அறிவித்திருந்தது. எனினும் இது போக்குவரத்து அமைச்சுக்கு அறிவிக்காமல் எடுக்கப்பட்டுள்ள தீர்மானம் எனத் தெரிவித்து வெளியிட்டுள்ள விசேட அறிவிப்பிலேயே அமைச்சர் திலும் அமுனுகம இவ்வாறு தெரிவித்துள்ளார்.

புதன்கிழமை (23) அதிகரிக்கப்பட்ட புகையிரத முன்பதிவு ஆசனக் கட்டணம் உடனடியாக அமுலுக்கு வரும் வகையில் இடைநிறுத்தப்படுவதாக போக்குவரத்து அமைச்சர் திலும் அமுனுகம தெரிவித்துள்ளார்.

மலையகம் மற்றும் வடமாகாணத்திற்கான நகரங்களுக்கிடையிலான மற்றும் விசேட புகையிரத சேவைகளின் கட்டணங்கள் அதிகரிக்கப்பட்டிருந்தன.

இந்த கட்டண அதிகரிப்பு இரகசியமாக மேற்கொள்ளப்பட்டதாக குற்றம் சாட்டிய புகையித நிலைய அதிபர்கள் சங்கம், வேலை நிறுத்தத்தில் ஈடுபடவுள்ளதாக எச்சரித்தது, கட்டண அதிகரிப்பிற்கு பல்வேறு தரப்பினரும் கண்டனம் தெரிவித்தனர். இதைடுத்து, குறித்த கட்டண அதிகரிப்பு இடைநிறுத்தப்பட்டுள்ளது.

## எரிபொருள் நிலையங்களில் ...

எரிபொருள் பௌசர்கள் பல திருப்பி அனுப்பப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார். எரிபொருள் நிரப்பு நிலையங்களில் தேவைக்கு அதிகமாக எரிபொருள் விநியோகிக்கப்படுவதைக் காணும் சிலர் எரிபொருள் நிரப்பு நிலையங்களுக்கு அருகில் நீண்ட வரிசையில் காத்துக் கிடப்பதாகவும் அவர் கூறினார்.

எரிபொருள் மேலதிகமாக இருந்தால் ஏன் எரிபொருள் நிரப்பு நிலையங்களில் நீண்ட வரிசையில் நிற்க வேண்டும் என ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

## நாசாவில் பணிபுரிந்த...

கலாநிதி. வைத்திலிங்கம் துரைசாமி 17ஆம் திகதி தனது 90 ஆவது வயதில் அமெரிக்காவில் காலமானார்.

1968 ஆம் ஆண்டு நாசா விண்வெளி ஆராய்ச்சி மையத்தில் அப்பலோ11 ஐ அனுப்புகின்ற குழுவிலும் அவர் அங்கம் வகித்திருந்தார். வைத்திலிங்கம் துரைசாமி பிறந்து வளர்ந்த வீடு தற்போது குப்பிளான் சிவபூமி ஞான ஆச்சிரமமாக விளங்குகின்றது.

## சஜித் பிரேமதாசவிற்கு...

“சர்வக்கட்சி மாநாட்டின்போது புலம்பெயர் தமிழர்களின் முதலீடு தொடர்பில் பல தரப்பினரும் கருத்துகளை முன்வைத்தனர். நாமும் அது தொடர்பில் கதைத்தோம். இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காணப்படுமானால் புலம்பெயர் தமிழர்கள் நிச்சயம் உதவுவார்கள் சுட்டிக்காட்டினேன். புலம்பெயர் தமிழர்களின் ஒத்துழைப்பை பெற்றுக்கொடுப்பதற்கான பாலமாக இருப்பதற்கு நாம் தயார்.

இலங்கையின் பொருளாதாரத்தை விடவும் புலம்பெயர் தமிழர்களின் பண பலம் உள்ளது. எனவே, அரசமைப்பின் 13 ஆவது திருத்தச்சட்டத்தை முழுமையாக அமுல்படுத்தி அதற்கு அப்பாலான அரசியல் தீர்வொன்று வழங்கப்படுமானால் நிச்சயம் உதவி கிட்டும்.

ஆனால் அர்த்தமுள்ள அதிகாரப்பகிர்வே அவசியம். மாறாக ஆளுநர் வசம் அதிகாரங்கள் இருக்கக்கூடாது. மக்களால் தெரிவுசெய்யப்படும் பிரதிநிதிகள் வசமே அதிகாரம் இருக்க வேண்டும் எனத் தெரிவித்துள்ளார்.

## ஆயுதத்தால் முடியாது போனதை...

இதன்போது கருத்து தெரிவித்துள்ள தேசிய சுதந்திர முன்னணியின் தலைவர் விமல் வீரவன்ச, இலங்கைக்கு விஜயம் மேற்கொண்ட அமெரிக்க அரசியல் விவகாரங்களுக்கான உதவிச் செயலாளர் விக்டோரியா நூலண்ட், மாகாண சபைத் தேர்தலை நடத்துமாறு கூறியதை சுட்டிக்காட்டியுள்ளார். அத்துடன், புலம்பெயர் தமிழர்களுடன் பேச்சுவார்த்தை நடத்துமாறும் அவர் கூறியுள்ளார். அதாவது, யுத்தத்தினால் செய்ய முடியாததை, இதனூடாக செய்யப் பார்க்கின்றனர் என விமல் வீரவன்ச குறிப்பிட்டுள்ளார்.

இதன்போது கருத்து தெரிவித்த பிவித்துரு ஹெல உறுமய கட்சித் தலைவர் உதய கம்மன்பில, அரசாங்கம் பொருளாதார ரீதியில் வீழ்ந்துள்ள சந்தர்ப்பத்தில், துப்பாக்கியால் செய்ய முடியாததை, டொலர் மூலம் செய்யும் எதிர்பார்ப்பிலே, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு சர்வகட்சி மாநாட்டில் பங்கேற்றதாக கூறியுள்ளார்.

## ரஷ்யாவின் பிரமாண்ட ...

இதையொட்டிய படங்கள் ‘பேஸ்புக்’ சமூக வலைத்தளத்தில் வெளியாகின. இந்த நகரம் மரியுபோல் நகரில் இருந்து 70 கி.மீ. தொலைவில் உள்ளது. உக்ரைன் படைகளால் அழிக்கப்பட்டுள்ள போர்க்கப்பல் 20 டாங்குகள், 45 கவச வாகனங்கள், 400 துருப்புகளை சுமந்து செல்லும் திறன் கொண்டதாகும்.

இந்த கப்பல் அழிக்கப்பட்டதை உக்ரைன் துணை ராணுவ அமைச்சர் ஹன்னாமல்யார் உறுதிப்படுத்தினார். ரஷ்ய படைகள் பிடித்து வைத்துள்ள கெர்சன் நகரில், புகழ் பெற்ற நாடக இயக்குனர் ஒலெக்சாண்டர் டகாஷெங்கோவை 9 ராணுவ வாகனங்களுடன் வந்து ரஷ்ய படைகள் பிடித்துச்சென்றதாக தகவல்கள் கூறுகின்றன. அண்டை வீட்டினர் யாரேனும் வெளியே வந்தால் கொல்லப்படுவார்கள் எனவும் ரஷ்ய படையினர் மிரட்டி உள்ளனர்.

உக்ரைனில், தடை செய்யப்பட்டுள்ள பொஸ்பரஸ் குண்டுகளை ரஷ்ய படைகள் நேற்றுமுன்தினம் காலை பயன்படுத்தியதாக அதிபர் விளாடிமிர் ஜெலன்ஸ்கி தெரிவித்தார். அதே நேரத்தில் அவர் இது குறித்த கூடுதல் தகவல்களை வெளியிடவில்லை.

உக்ரைன் மீது ரஷ்யா போர் தொடங்கி ஒரு மாதம் ஆகியுள்ளது. ராணுவ கட்டமைப்புகளை குறிவைத்து தாக்குதல் என அறிவித்துவிட்டு, அடுக்குமாடி குடியிருப்புகள், பள்ளிகள், ஆஸ்பத்திரிகள், பிரசவ ஆஸ்பத்திரிகள் என தாக்குதல் எல்லையை ரஷ்யா விரிவுபடுத்தியது. இதனால் ஆயிரக்கணக்கான அப்பாவி மக்கள் கொல்லப்பட்டனர்.

இதுநாள் வரை நடந்த போரில் ஆஸ்பத்திரிகள் உள்ளிட்ட 64 சுகாதார கட்டமைப்புகள் தாக்கப்பட்டு, 15 பேர் கொல்லப்பட்டுள்ளதாக உலக சுகாதார அமைப்பு தெரிவித்தது. இதற்கிடையே ஒரு மாத கால போரில் உக்ரைனில் ரஷ்ய படையினர் 15 ஆயிரம் பேர் வரையில் கொல்லப்பட்டுள்ளதாக நேட்டோ மதிப்பிட்டுள்ளது.

## அரச வங்கித்துறை...

நாட்டை வீழ்ச்சியுற செய்யும் வகையில் முன்னெடுக்கப்படும் இத்தகைய விமர்சனங்கள் தொடர்பில் கவலையடைவதாக அமைச்சர் ரமேஷ் பத்திரண நேற்று தெரிவித்தார். பொதுஜன பெரமுன கட்சியின் ஊடக சந்திப்பு நேற்று கட்சியின் தலைமையகத்தில் நடைபெற்ற போதே அமைச்சர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அது தொடர்பில் அமைச்சர் மேலும் தெரிவிக்கையில்:

அரச வங்கிக் கட்டமைப்பில் வீழ்ச்சி ஏற்படக்கூடிய எத்தகைய சூழ்நிலையும் நாட்டில் காணப்படவில்லை. அரசாங்கத்தின் சார்பில் பொறுப்புடன் இதனைக் கூறமுடியும். அதேவேளை நாட்டின் வங்கித்துறை எத்தகைய சிக்கலுமின்றி பலமாகவும் பாதுகாப்புடனும் காணப்படுகிறதென்பதை நாம் நாட்டு மக்களுக்குப் பொறுப்புடன் தெரிவித்துக் கொள்ள விரும்புகின்றோம்.

நாடு தற்போது எதிர்கொண்டுள்ள நிதி நெருக்கடி மற்றும் வெளிநாட்டு கையிருப்பு நெருக்கடி நீண்டகாலமாக தொடரும் பிரச்சினையாகும். கடந்த இரண்டு வருடங்களாக நாட்டில் நிலவிய கொரோனா வைரஸ் சூழ்நிலை பாதிப்போடு அந்த நெருக்கடி இந்த வருடத்தில் தலைதூக்கியுள்ளது. இந்த சந்தர்ப்பத்தை வைத்துக்கொண்டு அரசியல் இலாபம் தேடுவதற்காக சில கட்சிகளும் சில தரப்பினரும் செயற்பாடுகளை முன்னெடுத்து வருகின்றனர்.

இத்தகைய சூழ்நிலையில் எதிர்கொண்டுள்ள நெருக்கடிகளுக்கு தீர்வு காணும் வகையில் நாட்டின் அனைத்து கட்சிகளும் ஆலோசனைகளை அரசாங்கத்துக்கு முன் வைக்குமாறு நாம் கௌரவமாக கேட்டுக் கொள்கின்றோம். நாம் அனைவரும் நெருக்கடியிலிருந்து நாட்டை மீட்டெடுக்க ஒன்றிணைந்து செயற்படுவோம்.

சர்வகட்சி மாநாட்டின் போது சில காட்சிகளில் ஆலோசனைகள் அரசாங்கத்துக்கு கையளிக்கப்பட்டுள்ளன. அந்த யோசனைகளை அரசாங்கம் ஆராய்ந்து அது தொடர்பில் நடவடிக்கைகளை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்றார்.

## மக்கள் சேவைக்கு...

நேற்று பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

அதேபோன்று மட்டக்களப்பு மாவட்ட முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் தங்கேஸ்வரி கதிராமன் மட்டக்களப்பு மாவட்டத்திலிருந்து பாராளுமன்றத்துக்கு தெரிவான முதலாவது பெண் பிரதிநிதி என்ற பெருமைக்குரியவர் என்றும் பிரதமர் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்களான பெற்றி வீரக்கோன், எம்.எஸ் செல்லச்சாமி, ஜஸ்டின் கலப்பத்தி மற்றும் க.தங்கேஸ்வரி ஆகியோருக்கான அனுதாபப் பிரேரணை நடைபெற்றது. இந்த பிரேரணையில் உரையாற்றும் போதே பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ இவ்வாறு தெரிவித்தார். சபையில் தொடர்ந்தும் உரையாற்றிய அவர்,

இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் வேட்பாளராக எம்.எஸ். செல்லச்சாமி 1989 ஆம் ஆண்டு கொழும்பு மாவட்டத்தில் தேர்தலில் போட்டியிட்டு முதல் தடவையாக பாராளுமன்றத்துக்குத் தெரிவு செய்யப்பட்டார்.

1963 ஆம் ஆண்டிலிருந்து இலங்கை தொழிலாளர் காங்கிரஸுடன் இணைந்த தொழிற்சங்கள் பலவற்றில் பல்வேறு பதவிகளை வகித்து வந்துள்ளார். அதன் போது மலையக மக்களுக்கு அளப்பரிய சேவைகளை செய்தவர் அவர்.

அவர் கொழும்பில் செனட் உறுப்பினராகவும் கொழும்பு மாவட்ட அபிவிருத்தி குழுவின் நிறைவேற்று உறுப்பினராகவும் சேவையாற்றிய சிரேஷ்ட அரசியல்வாதியாவார்.

அதேபோன்று 2004ஆம் ஆண்டு பொதுத் தேர்தலில் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் பிரதிநிதியாக மட்டக்களப்பு மாவட்டத்தில் இருந்து தெரிவானவர் தங்கேஸ்வரி கதிராமன்.

மட்டக்களப்பு மாவட்டத்திலிருந்து பாராளுமன்றத்துக்கு தெரிவான முதலாவது பெண் பாராளுமன்ற உறுப்பினர் என்ற பெருமை அவருக்குரியது. களனி பல்கலைக்கழகத்தின் பட்டதாரியான அவர் கலாசார உத்தியோகத்தராகவும் எழுத்தாளராகவும் சேவை செய்துள்ளார்.

மட்டக்களப்பு மாவட்ட மக்களுக்கு அளப்பரிய சேவை செய்த அவர் சமய கலாசாரத் துறைகளில் சிறந்த சேவை யாற்றியவர்.

மட்டக்களப்பு மாவட்ட மாணவர்களின் கல்வி வளர்ச்சியில் கவனம் செலுத்திய அவர், 2011 ஆம் ஆண்டு மண்முனை பிரதேசத்தில் புதிய கல்வி வலயம் உருவாவதற்கு காரணமாக அமைந்தவர் என்றும் பிரதமர் தெரிவித்தார்.

# சிறுபான்மை மக்களுக்காக அளப்பரிய சேவை செய்தவர் எம்.எஸ்.செல்லசாமி

## அனுதாப பிரேரணையில் மனோ கணேசன் எம் பி.

**லோரன்ஸ் செல்வநாயகம்**

மலையக மக்களுக்கு அர்ப்பணிப்புள்ள சேவை செய்த மாமனிதர் எம் எஸ். செல்லச்சாமி எனது அரசியல் வாழ்வில் அவர் எனக்கு முன்னோடியும் கூட.

சிறுபான்மை மக்கள் தமது பிரதிநிதிகளை தெரிவு செய்வது தொடர்பில் மக்களுக்கு தெளிவு படுத்தியவர்.

1977ம் ஆண்டு அவர் மத்திய கொழும்பில் போட்டியிட்டார். எனினும் வெற்றி பெறவில்லை. கொழும்பு மத்தியில் வழமையாக ஒரு தமிழர், ஒரு முஸ்லிம், ஒரு சிங்களவர் என மூவர் தேர்தல் மூலம் வரவேண்டும். எனினும் மக்கள் ஆதரவு வழங்காததால் ஒரு சிறுபான்மை பிரதிநிதியை இழக்க நேரிட்டது.

2019ஆம் ஆண்டு தேர்தலில் வெற்றி பெற்ற செல்லச்சாமி அவர்கள் பல இராஜாங்க அமைச்சர் பதவிகளை வகித்துள்ளார்.

கொழும்பிலும் மலையகத்திலும் வாழும் சிறுபான்மை மக்களுக்கு அவர் செய்த சேவை அளப்பரியது.

**மருதபாண்டி ராமேஸ்வரன்:**
(இ.தொ.கா பாராளுமன்ற உறுப்பினர்)

இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் தலவாக்கலை மாவட்டத் தலைவராக தமது ஆரம்பக் காலத்தை தொடங்கிய தொழிற் சங்கத் தலைவர் எம்.எஸ்.செல்லச்சாமி மலையக மக்களுக்கு அளப்பரிய சேவை செய்தவர்.

மறைந்த தலைவர் சௌமியமூர்த்தி தொண்டமானுடன் இணைந்து மலையக மக்களுக்கான போராட்டங்களில் இணைந்து செயற்பட்டவர்.

பல்வேறு சந்தர்ப்பங்களிலும் மலையக மக்களின் உரிமைகளுக்காக குரல் கொடுத்தவர்.

2007இல் அவர் தேசியப்பட்டியல் எம்.பியாக தெரிவு செய்யப்பட்டு தபால் தொலைத் தொடர்புகள் பிரதி அமைச்சராக செயற்பட்டார். அக் காலத்தில் மலையகத்தில் 520 தபால் கார்களை நியமிப்பதில் முன்னின்று உழைத்தவர்.

**எம். ஏ. சுமந்திரன்**
(தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எம்.பி)

மட்டக்களப்பு மாவட்டத்தின் முதலாவது பெண் பாராளுமன்ற உறுப்பினராக பாராளுமன்றத்திற்கு பிரவேசித்தவர் தங்கேஸ்வரி. மொழி ரீதியிலும் கலாசார ரீதியிலும் சிறந்த விவேகம் கொண்டவராக அவர் திகழ்ந்தார்.

**தர்மலிங்கம் சித்தார்த்தன்:**
(தமிழ் தேசியக் கூட்டமைப்பு எம்.பி)

மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் தங்கேஸ்வரியின் மறைவு மட்டக்களப்பு மாவட்ட மக்களுக்கும் தமிழரசுக் கட்சிக்கும் பாரிய இழப்பாகும்.

அவரது மக்கள் சேவை நினைவுகூரத்தக்கது. அவருக்கான கௌரவம் தொடர்ச்சியாக வழங்கப்படவேண்டும்.

**ரிஷாட் பதியுதீன்:**
(பாராளுமன்ற உறுப்பினர்)

மறைந்த எம்.எஸ் செல்லச்சாமி ஒரு களங்கமற்ற சிறந்த அரசியல்வாதியாவார். புத்தளம் அரபுக் கல்லூரியில் முத்திரை வெளியீடு ஒன்று தொடர்பில் அவருடன் அவர் தபால் துறை பிரதி அமைச்சராக இருந்த காலத்தில் கலந்துரையாடினேன்.

எமது வேண்டுகோளை ஏற்று மஹ்மூத் ஆலிம் அவர்களுக்கான நினைவு முத்திரை வெளியிடும் பணியை அவர் புத்தளத்திற்கு நேரில் வருகை தந்து சிறப்பாக நிறைவேற்றி வைத்தார்.(ஸ)

# இம்ரான் ஆட்சிக்கு எதிராக எதிர்க்கட்சி நடைபவனி போராட்டம்

பாகிஸ்தானின் எதிர்க்கட்சியான பாகிஸ்தான் முஸ்லிம் லீக் நவாஸ் அணி ஆளும் கட்சியை எதிர்த்து நீண்ட நடைபவனி ஆர்ப்பாட்டத்தை ஆரம்பிக்கிறது. லாகூரில் ஆரம்பமாகும் இந் நடைபவனி மரியம் நவாஸ் மற்றும் ஹம்ஸா ஷெபாஸ் தலைமையில் நடைபெறும் என்றும் இஸ்லாமாபாத் நகரை நாளை சென்றடையும் என்றும் இக் கட்சியின் பஞ்சாப் தலைவர் ராணா சனாவுல்லாஹ் தெரிவித்துள்ளார்.



இஸ்லாமாபாத்தை அடையும் எதிர்க்கட்சியினர் அங்கேயே அமர்ந்திருப்பார்கள் என்றும் அரசாங்கத்துக்கு எதிராக பாராளுமன்றத்தில் கொண்டவரப்படவுள்ள நம்பிக்கையில்லாத் தீர்மானத்தின் மீதான வாக்கெடுப்பு நடைபெறவுள்ள மார்ச் 28ம் திகதிவரை போராட்டக்காரர்கள் அங்கேயே அமர்ந்திருப்பார்கள் என்றும் ராணா மேலும் தெரிவித்துள்ளார்.

இதேசமயம் நம்பிக்கையில்லாத் தீர்மானத்தில் வெற்றி பெறுவதற்காக அரசு தரப்பு பாராளுமன்ற உறுப்பினர்களை பணம் கொடுத்து விலைக்கு வாங்கி வருவதாக உள்நாட்டலுவல்கள் மற்றும் தகவல் தொடர்பாடல் அமைச்சர்களின் குற்றச்சாட்டுகளுக்கு பதிலளித்துள்ள ராணா சனாவுல்லாஹ், அதற்கான ஆதாரங்களை தெரிவிக்கும்படியும் தொலைக்காட்சி விவாதமொன்றுக்கு வரும்படியும் கூறியுள்ளார். ஆளும்கட்சியின் அதிருப்தி உறுப்பினர்கள் பணம்கேட்டு எந்தவொரு கோரிக்கையையும் விடுக்கவில்லை என்று கூறியுள்ள இவர் இம்ரான் ஆட்சி மீது மக்கள் வெறுப்படைந்துள்ளனர் என்றார்.

'தயத்நகர சியத்நகன'

## வேலை திட்டத்தின் கீழ் திறப்பனை நகரம் அபிவிருத்தி

**திறப்பனை தினகரன் நிருபர்**


திறப்பனை நகரத்தின் அபிவிருத்தி வேலை திட்டங்கள் இராஜாங்க அமைச்சர் துமிந்த திஸாநாயக்கவின் கண்காணிப்புக்கு உட்படுத்தப்பட்டுள்ளன."தயத்நகர சியத்நகன" என்ற வேலை திட்டத்தின் கீழ் திறப்பனை நகரம் அபிவிருத்திக்கு உட்படுத்தப்பட்டுள்ளன. இங்கு வாகன தரிப்பிடம், துருசெவன ஒய்வுப்பூங்கா,நகர வீதி மற்றும் கழிவு நீர் வடிகான் நிர்மாணம் போன்ற பல்வேறு அபிவிருத்தி வேலைகள் இது வரையில் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன.இவ் வேலை திட்டத்திற்காக 100 மில்லியன் ரூபா பணம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன.

"சியத்நகர வேலை திட்டத்தின் கீழ் நாட்டின் 114 நகரங்களில் அபிவிருத்தியை மேற் கொள்ள திட்டமிடப்பட்டிருந்தன.

நகர அபிவிருத்தி அமைச்சு இந் நடவடிக்கைகளை தற்சமயம் மேற் கொண்டுள்ளது.










## வைர விழா காணும்

# அநு./ ஹொரவபொத்தானை நிக்கவெவ முஸ்லிம் வித்தியாலயம்


புதிய கட்டடத்தின் அழகிய தோற்றம்

## ஒரு வரலாற்று பார்வை

## இன்று புதிய கட்டட திறப்பு விழா


புதிய கட்டட நிர்மாண பணிக்கு அஷ் நூறுல்லாஹ்வினால் அடிக்கல்


அதிபர் ஏ.பீ. மஹ்ரூப்

வட மத்திய மாகாணத்தின் அநுராதபுரம், ஹொரவபொத்தானை தேர்தல் தொகுதியிலுள்ள ஹொரவபொத்தானை பிரதேச செயலாளர் பிரிவின் நிருவாகத்திற்குட்பட்ட நிக்கவெவ கிராம சேவகர் பிரிவில் இரு அழகிய மலைகளுக்கிடையில் இயற்கை நீரூற்றுக்கள் வழிந்தோட பசுமையான இயற்கை வளங்களினாலும் வயல் வெளிகளாலும் சூழப்பட்டுள்ள அழகிய கிராமமே நிக்கவெவ கிராமமாகும்.

17 ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் "துனிகா உல்பத்த " எனும் கிராமத்தில் இருந்து இடம்பெயர்ந்து உருவானதே இந்த கிராமமாகும். ஆரம்பகாலத்தில் அயல் கிராமமான "றஸ்னகவெவ" சிங்கள மொழிப் பாடசாலையில் ஒரு பிரிவாக இக்கிராம மாணவர்கள் கல்வி பயின்று வந்துள்ளனர். அதனை கருத்தில் கொண்ட ஹொரவபொத்தானை கிராம சபைத் தலைவரும் நிக்கவெவ கிராம முன்னேற்றத்தின் முன்னோடித் தலைவருமான கே.எம். புஹாரி மற்றும் காஸிம் கணக்குப்பிள்ளை, முஹம்மது கனி, மஹ்மூது லெப்பை, ஆதம்பாவா, மு.சலீம், வெள்ளைக்குட்டி அப்துல்லா மற்றும் ஊர் பிரமுகர்களின் முயற்சியின் மூலம் 1961.06.01 ஆம் திகதி 60 (அறுபது) மாணவர்களுடன் ஓர் ஓலைக்குடிசையொன்றில் முதன் முதலாக இப்பாடசாலை ஆரம்பிக்கப்பட்டது.

முதல் அதிபராக எம்.எல்.எம். பஸீர் அவர்களுடன் ஆசிரியராக ஏ.சீ.எம். மஃறூப் செயற்பட்டார். அதிபர் எம்.எச்.எம். ஸகரிய்யா அவர்களின் காலத்தில் 1967.11.25 ஆம் திகதி 40×20 அளவுடைய நிரந்தர கட்டிடமொன்று முதலாவதாக நிர்மாணிக்கப்பட்டுள்ளது.


ஆசிரியர் குழாம்


புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தி பெற்ற மாணவர்கள் (2021)

தரம் 01 தொடக்கம் 08 வரையான வகுப்புக்களை கொண்ட பாடசாலையாக ஆரம்பிக்கப்பட்ட இப்பாடசாலை, 1973 ஆம் ஆண்டு தரம் 09 க்கு தரம் உயர்த்தப்பட்டது. தொடர்ந்து மாணவர்களின் அதிகரிப்பால் ஏற்பட்ட இடப்பற்றாக்குறையினை நிவர்த்தி செய்யுமுகமாக அதிபர் பி.டீ. தாஜுதீன் அவர்கள் உள்ளிட்ட ஆசிரியர் குழாம் மற்றும் பாடசாலை அபிவிருத்திச் சங்க உறுப்பினர்களின் முயற்சியினால் 1991.11.04 ஆம் திகதி 60×20 கட்டிடமொன்று நிர்மாணிக்கப்பட்டு அப்போது நிலவிய இடப்பற்றாக்குறை நிவர்த்திக்கப்பட்டு கல்விச் செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டன.

வட மத்திய மாகாணத்தில் பல ஆண்டுகாலமாக நிலவி வந்த ஆசிரியர் பற்றாக்குறையினை நிவர்த்தி செய்யுமுகமாக 1990ஆம் ஆண்டு புதிதாக ஆசிரியர் நியமனம் வழங்கப்பட்டபோது நிக்கவெவ முஸ்லிம் வித்தியாலயத்திற்கு 12 ஆசிரியர்கள் நியமிக்கப்பட்டதை அடுத்து ஏற்பட்ட துரித கல்வி மாற்றத்தினால் 1991 ஆம் ஆண்டு நடைபெற்ற தரம் 05 புலமைப் பரிசில் பரீட்சையில் தமிழ் மொழி மூலம் வலயத்தில் முதன்முறையாக சித்தியடைந்து வலயத்திற்கும் பாடசாலைக்கும் பெருமை பெற்றுத்தந்தமை குறிப்பிடத்தக்கதாகும்.

அதனைத் தொடர்ந்து இன்று வரை மாணவர்கள் சித்தியடைந்து வருவது அதிகரித்தவண்ணமே உள்ளன. வைரவிழா காணும் எமது பாடசாலை கடந்த மூன்று வருடங்களாக 2019 ஆம் ஆண்டு ஆறு மாணவர்களும் 2020ஆம் ஆண்டு எட்டு மாணவர்களும் 2021 ஆண்டு ஐந்து மாணவர்களும் வெட்டுப் புள்ளிகளுக்கு மேல் புள்ளிகளை பெற்றுள்ளதுடன் சித்தி வீதம் 96% மாணவர்கள் சிறப்பான பெறுபேறுகளை பெற்று சாதனை படைத்துள்ளனர். இதனை கருத்திற் கொண்ட தற்போதைய அதிபர் ஆதம்பாவா மஃறூப் அவர்களும் ஆசிரியர் குழாமும் ,பாடசாலை அபிவிருத்திச் சங்கம் , பள்ளிவாசல் நிர்வாகம், சட்டத்தரணி சலீம் கடாபி தலைமையில் அந்நஜாஹ் எகடமி இளைஞர் கழகம் ஆகியவற்றின் விடா முயற்சியினாலும் கெப்பித்திகொள்ளாவ வலய கல்விப் பணிமனையின் உயர் கல்வி அதிகாரிகளது உதவியுடன் க.பொ.த (சா/த) வரை நிக்கவெவ முஸ்லிம் வித்தியாலயம் 2020ம் ஆண்டு தரமுயர்த்தப்பட்ட பெற்று வளர்ச்சி கண்டு வருகின்றமை பெருமைக்குரிய விடயமாகும். இதன் மூலம் எமது வலயத்தில் கனிஷ்ட பாடசாலைகளில் முன்னிலை பாடசாலையாக திகழ்கின்றமை விசேட அம்சமாகும்.

தேசிய மற்றும் மாவட்ட மட்ட தமிழ் மொழி தினம், ஆங்கில, சமூக விஞ்ஞான, தேசிய மீலாத் தின போட்டிகளில் கலந்து கொண்டு இன்று வரைக்கும் பல சாதனைகளை ஈட்டி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

மாணவர்களின் சிறப்பான கற்றல் செயற்பாடுகள் காரணமாக 2012ஆம் ஆண்டு பாடசாலைக்கு கணனி அறை கிடைக்கப்பெற்றது. இதன் மூலம் மாணவர்களது தொழில்நுட்ப ரீதியான அறிவினை விருத்தி செய்து கொள்வதற்கு பெரும் வாய்ப்பு கிட்டியுள்ளது. இப்பாடசாலையில் தரம் 09 வரை கற்ற பின்னர் அடுத்த வகுப்புக்கான கல்வி நடவடிக்கையினை தொடர இக்கிராமத்திலுள்ள மாணவச் செல்வங்கள் ஹொரவபொத்தானை நகர பாடசாலை மற்றும் வெளி மாவட்டங்களிலுள்ள பாடசாலைகளுக்கு செல்லவேண்டிய ஒரு நிலை ஏற்பட்டது. இதனால் வசதி குறைந்த மாணவ மாணவிகள் பெரும் அசௌகரியங்களை எதிர்நோக்க வேண்டி ஏற்பட்டது. அதற்கு மத்தியிலும் மேலதிக கல்வியினை தொடர்வதற்காக வேண்டி சென்றதனால் இப்பாடசாலையிலேயே தரம் 11 வரைக்கும் கல்வி கற்கக்கூடிய சந்தர்ப்பம் கிட்டியுள்ளதுடன் வசதி படைத்த குடும்பங்களைச் சேர்ந்த பிள்ளைகளுக்கும் அதே போன்று வசதி குறைந்த குடும்பங்களைச் சேர்ந்த பிள்ளைகளுக்கும் சொந்த ஊரிலேயே கல்வி கற்கக் கூடிய வாய்ப்பு கிட்டியுள்ளதுடன் எதிர்வரும் காலங்களில் க.பொ.த உ/த வகுப்புக்களையும் தொடங்குவது குறித்து பாடசாலை நிர்வாகம் கவனம் செலுத்தி வருகிறது.


கணனி அறையில் மாணவர்கள்

தற்போது 19 ஆசிரியர்களையும் 302 க்கும் அதிகமான மாணவர்களையும் ஒரு விளையாட்டு பயிற்றுவிப்பாளரையும் இரு கல்விசாரா ஊழியர்களையும் கொண்டு நடாத்தப்படும் இப்பாடசாலையில், எதிர் காலத்திற்கு தேவையான கல்விச் சமூகமொன்றினை உருவாக்கும் நோக்குடன் கற்றல் செயற்பாடுகள் மற்றும் ஒழுக்க விழுமியங்கள் களச்செயற்பாடுகள் போன்ற விடயங்களில் வீறுநடை போட்டுக் கொண்டிருக்கின்றது.

நாளுக்கு நாள் மாணவர் தொகை அதிகரிப்பு காரணமாக மீண்டும் இட நெருக்கடி நிலை ஏற்பட்டுள்ளது. அதனை நிவர்த்திக்கும் முகமாக தற்போதைய அதிபர் உள்ளிட்ட ஆசிரியர் குழாம் பாடசாலை அபிவிருத்திச் சங்கம் மற்றும் பழைய மாணவர்கள் என் போர் அதிபர் தலைமையில் பல்வேறு வழிகளில் முயற்சிகளை மேற்கொண்டதன் பலனாக அவற்றை நிவர்த்திக்குமுகமாக குவைத் நாட்டின் பரோபகாரி மர்ஹூமா பௌஸியா அந் நபீஸ் அவர்களின் ஞாபகார்த்தமாக இஸ்லாமிக்கெயார் சொசைட்டி நிறுவனத்தின் நிதி ஒதுக்கீட்டில் அல் ஹிமா இஸ்லாமிய சேவைகள் நிறுவனத்தின் இலங்கைக்கான பணிப்பாளர் அஷ்ஷெய்க் நூருள்ளாஹ் ( நளீமி) அவர்களின் தலைமையில் காணி அமைச்சர் எஸ்.எம். சந்திரசேன, ஸம்ஸம் நிறுவன பணிப்பாளர் அஷ்ஷெய்க் யூசுப் முப்தி ஆகியோர் கலந்து சிறப்பிக்க 2020.09.24 ஆம் திகதியன்று இரண்டு மாடி கட்டிடத்திற்காக அடிக்கல் நடப்பட்டு நிர்மாணப்பணிகள் ஆரம்பித்து வைக்கப்பட்டன. நாட்டின் அசாதாரண சூழ்நிலையிலும் பணிப்பாளரின் தியாக உணர்வினால் முதற்கட்டமாக நான்கு வகுப்பறைகளைக் கொண்ட முதல் மாடிக் கட்டிடம் பூர்த்தி செய்யப்பட்டு 2022.03.26 ஆம் திகதி இன்று சனிக்கிழமை அதிபர் ஏ.பீ. மஃறூப் அவர்களின் தலைமையில் திறப்பு விழா நடைபெறுகிறது.

இந்நிகழ்வில் குவைத் நாட்டின் இலங்கைக்கான தூதுவர் கலப் எம். எம். புஜைர் , இராஜாங்க அமைச்சர் பேராசிரியர் சன்ன ஜயசுமன, பாராளுமன்ற உறுப்பினர் இசாக் றஹ்மான் , அல் ஹிமா பணிப்பாளர் அஷ்ஷெய்க் எம். ஏ.ஏ. நூருள்ளாஹ் (நளீமி) ஆகியோரால் திறந்துவைக்கப்படவுள்ளது.

பாடசாலையின் வளர்ச்சிக்கு அரும்பணியாற்றிய அனைவருக்கும் பாடசாலை நிருவாகம் தமது மனப்பூர்வமான நன்றியினை தெரிவித்துக் கொள்வதோடு இப்பாடசாலையில் எஞ்சியுள்ள வளப்பற்றாக்குறைகள் நிவர்த்திக்கப்பட்டு இப்பாடசாலை மென்மேலும் கல்வியில் சிறப்பாக மிளிர இறைவனைப் பிராத்திப்போம்.


ஏ.பிர்தௌஸ்
அநுராதபுரம் தினகரன் நிருபர்





நிலைபேறான அபிவிருத்திக்கு பால்நிலை சமத்துவம் பேணுவோம் என்னும் தொனிப் பொருளில் பெண் முயற்சியாளர்களின் கௌரவிப்பு விழா பிரதேச செயலக மகளிர் தினவிழாவும் வவுனியா மாவட்ட செயலக மாநாட்டு மண்டபத்தில் நேற்று (25.03) பிரதேச செயலாளர் நா.கமலதாசன் தலைமையில் இடம்பெற்றது. வவுனியா விசேட நிருபர்

# யாழ். போதனா வைத்தியசாலை வளாகத்தில் சைக்கிள் திருட்டு

**யாழ்.விசேட நிருபர்**

யாழ்.நகர் பகுதியில் துவிச்சக்கர வண்டியை திருடிய குற்றச்சாட்டில் இளைஞன் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கோப்பாய் பகுதியைச் சேர்ந்த 27 வயதான இளைஞன் ஒருவரே நேற்றைய தினம் வியாழக்கிழமை மாலை யாழ்ப்பாண பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளார்.

யாழ். போதனா வைத்தியசாலைக்கு முன்பாக சந்தேகத்துக்கிடமான முறையில் துவிச்சக்கர வண்டியொன்றினை இளைஞன் எடுத்து சென்ற போதே, அப்பகுதியில் கடமையிலிருந்த யாழ்.பொலிஸார் இளைஞனை மறித்து விசாரணைகளை முன்னெடுத்தனர். இதனையடுத்தே துவிச்சக்கர வண்டியினை இளைஞன் திருடி செல்வதனை அறிந்து பொலிஸார் அவரை கைது செய்துள்ளனர்.

கைது செய்யப்பட்ட இளைஞன் பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டு மேலதிக விசாரணைக்கு உட்படுத்தப்பட்டு வருகின்றார்.

அதேவேளை யாழ்.போதனா வைத்திய சாலையில் சிகிச்சை பெற்று வரும் நோயாளிகளை பார்வையிட துவிச்சக்கர வண்டியில் வருவோர் , வைத்தியசாலை சூழலில் தமது துவிச்சக்கர வண்டிகளை நிறுத்தி விட்டு செல்லும் போது அவை களவாடப்படுவது தொடர்ந்து நடைபெற்று வருகின்றது.

# உணவகங்களுக்கு கடை அனுமதிப்பத்திரம் ஊடாக கேஸ் சிலிண்டர் விநியோகம்



**பரந்தன் குறுாப் நிருபர்**

கிளிநொச்சி மாவட்டத்தில் சமையல் எரிவாயுக்கள் குடும்ப பங்குகீட்டு அட்டை மூலமாகவும், உணவகங்களுக்கு கடை அனுமதிப் பத்திரம் ஊடாகவும் வழங்கப்பட்டு வருவதாக மக்கள் தெரிவித்துள்ளனர்.

இருப்பினும் அதிகாலை 3.00 மணிக்கு வருகை தந்தமையால் சமையல் எரிவாயுவினை பெறமுடிந்தது எனவும் தெரிவித்தனர்.

# சிறுவர் பூங்கா காணியில் சமுர்த்தி வங்கிக் கட்டடம் அமைக்க நகரசபை மறுப்பு

**சாவகச்சேரி விசேட நிருபர்**

சாவகச்சேரி நகரசபையினர் சிறுவர் பூங்கா அமைப்பதற்காக கொள்வனவு செய்துள்ள காணியின் ஒரு பகுதியை வலய சமுர்த்தி வங்கி அமைப்பதற்கு வழங்க மறுப்புத் தெரிவித்துள்ளனர்.

நகரசபைத் தவிசாளர் சிவமங்கை இராமநாதன் தலைமையில் நேற்று முன்தினம் இடம்பெற்ற மாதாந்த அமர்வின் போதே எதிர்ப்பைத் தெரிவித்தனர். 2009ஆம் ஆண்டில் இருந்து இழுபறி நிலையில் காணப்படும் சாவகச்சேரி சமுர்த்தி வங்கிக் காணி விவகாரத்தை தீர்ப்பதற்காக அண்மையில் அரசாங்க அதிபர் தலைமையில் குழுவொன்று நியமிக்கப்பட்டிருந்தது.

இக்குழுவினர்(காணி ஆணையாளர், உதவி அரசாங்க அதிபர்) அண்மையில் தென்மராட்சி பிரதேச செயலகத்திற்கு வருகை தந்து சாவகச்சேரி நகரசபை மற்றும் சாவகச்சேரி வலய சமுர்த்தி சங்கத்தினரை அழைத்து கலந்துரையாடியிருந்தனர்.

இச்சந்திப்பின் போது கடந்த 2009ஆம் ஆண்டு ஒருங்கிணைப்புக்குழு ஊடாக சமுர்த்தி வங்கி அமைக்கவென வழங்கப்பட்ட காணி சாவகச்சேரி நகரசபையின் எதிர்கால விஸ்தரிப்பிற்கு அவசியம் என்பதனை உணர்ந்து அதற்கு மாற்றுக் காணியாக நுணாவில் பகுதியில் நகரசபை சிறுவர் பூங்கா அமைக்கவென கொள்வனவு செய்த 29 பரப்புக் காணியில் முகப்புப் பக்கமாக மூன்று பரப்பு காணியை சமுர்த்தி வங்கிக்கு வழங்குமாறு நகர சபை வலியுறுத்தியிருந்தது. இக்குழுவின் வேண்டுகோளின் பிரகாரம் சபை அமர்வில் இவ்விடயம் கலந்துரையாடலுக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட போது பெரும்பாலான உறுப்பினர்கள் சிறுவர் பூங்கா காணியை வழங்க எதிர்ப்பு காட்டியிருந்தனர்.

# கடலட்டை பண்ணை வளர்ப்பினால் பெண்களின் வாழ்வாதாரம் பாதிப்பு

**பரந்தன் குறுாப் நிருபர்**

கிளிநொச்சி பூநகரி பிரதேசத்தில் நீர்வேளாண்மை திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்படும் கடலட்டை வளர்ப்பு தொழில் காரணமாக கடற்றொழிலை நம்பி வாழ்ந்த பெண்களின் வாழ்வாதாரம் முழுமையாக பாதிக்கப்பட்டுள்ளது. பண்ணைகளுக்கான அட்டைக்குஞ்சுகளை பெற்றுக் கொள்ளமுடியாத நிலை காணப்படுவதாக பூநகரி கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் தலைவர் பிரான்சிஸ் ஜோசப் தெரிவித்துள்ளார்

கிளிநொச்சி மாவட்டத்தில் பூநகரி பிரதேசத்தில் தற்போது முன்னெடுக்கப்பட்டு வருகின்ற கடலட்டை தொழில் வழிமுறைகளால் பலரது வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டிருப்பதாக மீனவர்களால் சுட்டிக்காட்டப்பட்டு வருகின்றது.

2018 ஆம் ஆண்டு அட்டைக் குஞ்சு உற்பத்திக்கு பூநகரி வெட்டு காடு பகுதியில் உற்பத்தி நிலையமொன்றை அமைத்து குஞ்சுகளை உற்பத்தி செய்து வழங்குவதற்கு ஏற்ற வகையில் காணியை கோரிய போதும் அப்போதைய முதலமைச்சர் காணியை தர மறுத்ததால் பாரிய திட்டம் கைவிடப்பட்டது.

பெருமளவான வருமானத்தை ஈட்டக்கூடிய அட்டைப்பண்ணைகள் அமைக்கப்பட்டிருந்தாலும் அதற்கான அட்டைக் குஞ்சுகளை பெற்றுக்கொள்வதில் சிரமங்கள் காணப்படுகின்றன. அதாவது இப் பிரதேசத்திலேயே இயற்கையாக உற்பத்தியாகும் குஞ்சுகளை அட்டை பண்ணைகளுக்கு விடுவதன் மூலம் உரிய இலக்கினை எட்ட முடியும். ஆனால் வெளியிடங்களில் இருந்து கொண்டு வரப்படுகின்ற குஞ்சுகள் மூலம் எந்தவிதமான நன்மையும் கிடைப்பதில்லை என்றும் சுட்டிக் காட்டினார்.

குறிப்பாக வலைப்பாடு, இரணைமாதா நகர், பூநகரி வெட்டு காடு போன்ற கடற்பகுதிகளில் இயற்கையாகவே உற்பத்தியாகும் அட்டைக் குஞ்சுகளை அப்பகுதிகளில் இருக்கின்ற பெண்கள் தினமும் கேரிகரித்து அதன் மூலம் வருமானத்தை பெற்று வந்தனர். ஆனால் இப்பொழுது இப்பகுதிகளில் பண்ணைகளை அமைத்துள்ளமையால் அவர்களது தொழில் முழுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளது அட்டைகள் வளர்ப்புக்காக சிலாபம் மற்றும் புத்தளம் அதேபோல அரியாலையில் அமைந்துள்ள சீன நிறுவனத்தின் அட்டை பண்ணைகளிலிருந்து குஞ்சுகளை பெற்று இங்கே உள்ள பண்ணைகளில் விடுகின்ற போது அந்த குஞ்சுகள் அழிந்துவிடுகின்றன.

ஆகவே கடல் பிரதேசத்தில் உற்பத்தியாகும் குஞ்சுகளை இப்பிரதேசத்தில் வளர்க்கக் கூடியதாக இருக்கும் என்பதாகும். அட்டைப் ப ண் ணை க ள ா ல் தொழில் பாதிக்கப்பட்டவர்களுக்கு மாற்று வழியைக் கடற்றொழில் அமைச்சர் ஏற்படுத்துவார் என்று எதிர்பார்க்கிறோம்.

குறிப்பாக இரவு வேளைகளில் வெளிச்சம் பாவித்து அட்டை பிடிப்பது என்பது இலங்கை அரசாங்கத்தினால் முழுமையாக தடை செய்யப்பட்டிருந்தாலும் வெளிமாவட்டங்களிலிருந்து வருபவர்களால் சட்டவிரோதமாக கடலட்டைகள் பிடிக்கப்படுகின்றன.

அவ்வாறு மேற்கொள்ளப்படும் செயற்பாடுகளை கடற்படையினர் தடுத்து வருகின்றனர். சட்டவிரோத கடல் தொழிலில் ஈடுபடுவோர் கடலட்டைகளை மட்டும் பிடிக்கவில்லை.

ஏனைய வளங்களையும் எடுத்துச் செல்கின்றனர். எனவே இரவு அட்டை தொழில் என்பது தடுக்கப்பட வேண்டும் என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

## வெளிமாவட்டத்தவர்களால் சட்டவிரோதமாக கடலட்டை பிடிப்பு





இந்தியாவின் கடனுதவி

# பொருளாதாரத்துக்கே தவிர இந்திய மீனவர்களை அனுமதிப்பதற்கல்ல

**யாழ்.விசேட நிருபர்**

இந்தியாவிடமிருந்து பெறப்பட்ட கடனானது இலங்கையினுடைய பொருளாதார நெருக்கடிக்கு உதவியளிக்க வேண்டுமே தவிர வடக்கு கடற்றொழிலாளர்களான எங்களுடைய வயிற்றில் அடிப்பதாக இருக்கக்கூடாது என யாழ் மாவட்ட கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்க சமாசங்களின் சம்மேளன தலைவர் அ.அன்னராசா தெரிவித்தார்.

யாழ் ஊடக மையத்தில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை இடம்பெற்ற ஊடக சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவ்வாறு தெரிவித்தார்.

மேலும் தெரிவிக்கையில்,

எங்களுடைய கடல் வளத்தில் நாங்கள் சுதந்திரமாக தொழில் செய்யக் கூடிய சூழலை அரசாங்கம் உருவாக்க வேண்டும். வெளிநாடுகளுக்கு எமது கடல்வளங்கள் குத்தகை அடிப்படையில் விற்பனை செய்யப்படுவதை ஏற்கமுடியாது.

நீண்ட காலமாக இந்திய இலங்கை கடற்றொழிலாளர்களின் பிரச்சினை தொடர்ந்த வண்ணம் உள்ளது. கச்சத்தீவு அந்தோணியார் ஆலய உற்சவத்திற்கு பின்னர் இந்திய மீனவர்களின் அத்துமீறல் இலங்கை கடற்பரப்பில் குறைவடைந்திருந்தது. ஆனால் தற்போது இந்திய கடற்றொழிலாளர்கள் மீண்டும் முப்பது, நாற்பது இழுவைப் படகுகளில் அத்துமீறி வந்து நமது கடல் வளத்தை அழிக்கின்ற தொழிலில் ஈடுபட்டு வருகின்றனர். இது தொடர்பாக இந்திய துணைத் தூதரை சந்தித்து முறையிட்டுள்ளோம்.

அக்கோரிக்கையை முன்வைத்ததன் பயனாக இலங்கை கடற்படை இந்திய மீனவர்களை கைதுசெய்துள்ளனர். அதேபோல அத்துமீறி இந்திய மீனவர்கள் கைது செய்யப்பட்டு ஊர்காவல்துறை நீதிமன்றினால் விடுதலை செய்யப்பட்டு இருக்கிறனர்.

எமது கடல்வளம் தொடர்ந்தும் அழிக்கப்பட்டு வருவதை ஏற்றுக் கொள்ளமுடியாது. இந்திய இலங்கை கடற்றொழிலாளர்களின் பிரச்சினையை தீர்க்க இராஜதந்திர மட்டத்தில் பேச்சுவார்த்தைகளை ஆரம்பிக்கவேண்டுமே, தவிர கைது செய்து விடுதலை செய்வது என்பது ஒரு போதும் தீர்வாக அமையாது.

தயவுசெய்து இலங்கை அரசாங்கத்தின் ஜனாதிபதி, பிரதமர் மற்றும் கடற்றொழில் அமைச்சரிடம் நாங்கள் கோருவது என்னவென்றால் மீனவர் பிரச்சினைக்கு மிக விரைவாக ராஜதந்திர மட்டத்தில் பேச்சுவார்த்தை ஆரம்பித்து அதனூடாக தீர்வை காணவேண்டும்.

இலங்கை அரசாங்கம் இந்தியாவிடமிருந்து பல மில்லியன் ரூபா பெறுமதியான நிதியை கடனாக பெற்றுள்ளது. அந்த நிதியானது இலங்கையினுடைய பொருளாதார நெருக்கடிக்கு உதவியளிக்க வேண்டுமே தவிர வடக்கு கடற்றொழிலாளர்களான எங்களுடைய வயிற்றில் அடிப்பதாக இருக்ககூடாது.

இந்தியாவிடம் நிதியைப் கொண்டு இந்திய மீனவர்களை எமது கடல் பகுதிக்குள் அனுமதிப்பதாக இருக்கக் கூடாது என்றார்.

# சட்டவிரோத மணல் அகழ்வு

**மன்னார் குறுாப் நிருபர்**



மாந்தை மேற்கு பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட ஆத்திமோட்டை கிராம பகுதியிலுள்ள அரச காணியில் தனி நபர்கள் முறையற்ற விதத்தில் அனுமதிப் பத்திரங்களை பெற்று மணல் அகழ்வில் ஈடுபட்டு வருவதாக பிரதேச மக்கள் தெரிவிக்கின்றனர்.

இந்நிலையில் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை (24) காலை ஆத்திமோட்டை பகுதியில் இடம்பெற்ற மணல் அகழ்வை நிறுத்தக் கோரி ஆத்திமோட்டை கமக்கார அமைப்பினர் வாகனங்களை இடைமறித்து தமது எதிர்ப்பை தெரிவித்தனர்.

இதனால் சட்டவிரோத மண் அகழ்வில் ஈடுபட்டவர்களுக்கும், ஆத்திமோட்டை கமக்கார அமைப்பினருக்கும் இடையில் தர்க்க நிலை ஏற்பட்டது.

மண் அகழ்வு காரணமாக கள்ளியடி ஆத்திமோட்டை வீதி கடந்த 10 வருடங்களுக்கு மேலாக மாந்தை மேற்கு பிரதேச சபையினால் புனரமைக்கப்படவில்லையென ஆத்திமோட்டை கமக்கார அமைப்பினர் விசனம் தெரிவித்துள்ளனர்.

இவ்வீதியூடாக மக்கள் பயணம் செய்ய முடியாமையால்,பல்வேறு பிரச்சினைகளுக்கு தொடர்ந்தும் முகம் கொடுத்து வருகின்றனர்.

மணல் அகழ்வு இடம்பெறும் காணியானது மேட்டு நில அரச காணியாக காணப்படுகின்ற போதும், தனி நபர்கள் முறையற்ற விதத்தில் அனுமதிப் பத்திரங்களை பெற்று மணல் அகழ்வில் ஈடுபட்டு வருவதாக மக்கள் தெரிவித்தனர்.

சம்பவ இடத்திற்கு வருகை தந்த இலுப்பைக்கடவை பொலிஸார் இவ்விடயம் தொடர்பாக மன்னார் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்வதாக தெரிவித்து மண் ஏற்றிச் சென்ற டிப்பர் வாகனத்தை செல்ல அனுமதித்துள்ளனர்.

எனினும் தொடர்ச்சியாக சட்டவிரோத மண் அகழ்வு இடம்பெறுவதற்கு பொலிஸார், புவிச்சரிதவியல் திணைக்களம், உரிய அரச அதிகாரிகள் மற்றும் அரசியல்வாதிகளே காரணமாக உள்ளதாக அவர்கள் தெரிவித்துள்ளனர்.

எனவே ஆத்திமோட்டை பகுதியில் தொடர்ச்சியாக இடம்பெற்று வருகின்ற மணல் அகழ்வை உடனடியாக தடுத்து நிறுத்த நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறுகமக்கார அமைப்பினர் கவலை தெரிவித்துள்ளனர்.

ஆத்திமோட்டை பகுதியில் சட்டவிரோதமாக மணல் அகழ்வு செய்யப்படும் அரச மேட்டுக் காணி தனியாருடைய காணியென போலி ஆவணங்களை சமர்ப்பித்து மண் அகழ்வு இடம்பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

### சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபைக்கு ஜனாதிபதி விஜயம்

# சுற்றுலாப் பயணிகளின் ஆசிய பயண இலக்காக இலங்கையை மாற்ற திட்டம்

இலங்கையை சுற்றுலா பயணிகளின் ஆசிய பயண இலக்காக மாற்ற முடியும். இதற்கான தடைகளை நீக்கி, உலகளாவிய ஊக்குவிப்பு நிகழ்ச்சிகள் மூலம் சுற்றுலாப் பயணிகளைக் கவரும் வகையில் திட்டங்களை வகுக்க வேண்டுமென ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ சுட்டிக்காட்டியுள்ளார்.

ஆண்டின் முதல் காலாண்டில் 2,60,000 க்கும் அதிகமான சுற்றுலாப் பயணிகள் நாட்டுக்கு வருகை தந்துள்ளனர். இது கடந்த ஆண்டு சுற்றுலா பயணிகளின் வருகையை விட அதிகமாகும். இந்த ஆண்டு இறுதிக்குள் 1.3 மில்லியன் சுற்றுலாப் பயணிகள் இலக்கை அடைய அரசாங்கம் எதிர்பார்க்கிறது. இதற்கு சுற்றுலாத்துறையின் சகல பிரிவுகளும் தயாராக வேண்டுமென ஜனாதிபதி குறிப்பிட்டார்.

இல 80, காலி வீதி, கொழும்பு 03 இல் அமைந்துள்ள இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபையை நேற்று (24) முற்பகல் பார்வையிட்டபோதே ஜனாதிபதி இதனைத் தெரிவித்தார்.

திட்டமிட்ட முறையிலும் முறையான சுற்றுலாத்துறையின் முன்னேற்றத்தின் ஊடாகவும் விரைவான பொருளாதார அபிவிருத்திக்காக 1966 இல் சுற்றுலா சபை ஸ்தாபிக்கப்பட்டதோடு, 2005 இல் அது, இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபையாக மாற்றப்பட்டது.

சுற்றுலாப் பயணிகளை அழைத்து வருதல், தங்குமிடம் மற்றும் ஓய்வு விடுதிகளைத் திட்டமிடல், சுற்றுலா ஹோட்டல்கள் மற்றும் சுற்றுலா நிறுவனங்கள் உள்ளிட்ட சுற்றுலா சேவைகளைப் பதிவு செய்தல் மற்றும் வகைப்படுத்துதல், உரிமங்களை வழங்குதல் உள்ளிட்ட சுற்றுலாத் கைத்தொழிலுடன் தொடர்புடைய அனைத்து துறைகளையும் மேற்பார்வையிட சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபைக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது.

இலங்கை சுற்றுலா ஊக்குவிப்பு பணியகம், ஹோட்டல் முகாமைத்துவ பயிற்சி நிறுவனம் மற்றும் மாநாட்டு பணியகம் என்பனவற்றை பார்வையிட்ட ஜனாதிபதி, சுற்றுலாத்துறையை மேம்படுத்துவதற்காக அர்ப்பணிப்புடன் செயற்படும் ஊழியர்களை பாராட்டினார்.

## 1.3 மில். சுற்றுலாப் பயணிகளை ஈர்ப்பது இவ்வருடத்தின் இலக்கு

சுற்றுலாத்துறையிலிருந்து ஆண்டுக்கு 10 பில்லியன் டொலர்களை திரட்ட அரசு இலக்கு வைத்துள்ளது. உயிர்த்த ஞாயிறு தாக்குதல் சுற்றுலாத்துறையில் பெரும் பின்னடைவை ஏற்படுத்தியது. இது கொவிட் தொற்றுநோயால் மேலும் வீழ்ச்சியடைந்தது. உரிய உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தி சுற்றுலாத்துறையின் விரைவான வளர்ச்சிக்கான அனைத்து நடவடிக்கைகளையும் அரசாங்கம் எடுத்துள்ளது.

தடுப்பூசி வேலைத்திட்டத்தின் வெற்றியினால் சுற்றுலாத்துறை மீண்டும் வளர்ச்சியடைந்துள்ளதாக சுற்றுலாத்துறை அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்தார்.

சுற்றுலாத் துறையுடன் தொடர்புடைய ஏராளமான உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுத் தொழில் வாய்ப்புகள் உள்ளன. அதற்கேற்ப பயிற்சிகளை விரிவுபடுத்த வேண்டுமென ஜனாதிபதி தெரிவித்தார். நாடு முழுவதும் வியாபித்துள்ள ஹோட்டல் கட்டமைப்பின் உதவியுடன் இளைஞர்களுக்கு நடைமுறை ரீதியிலான பயிற்சி மற்றும் கோட்பாட்டு அறிவையும் வழங்கத் திட்டமிடுவதன் மூலம் பாரியளவிலான தொழில் வாய்ப்புகளை உருவாக்க முடியுமென ஜனாதிபதி சுட்டிக்காட்டினார்.

சுற்றுலாத்துறையை வீழ்ச்சியடையச் செய்வதற்கு பல்வேறு வகையான திட்டமிட்ட பிரசாரங்கள் மேற்கொள்ளப்படுகின்றன. இத்தகைய பின்னணியிலும் சுற்றுலாப் பயணிகளின் வருகை அதிகமாகவே உள்ளது. வருகின்ற சுற்றுலாப் பயணிகளின் பாதுகாப்பில் தீவிர கவனம் செலுத்த வேண்டும். இந்நாட்டில் கால் வைத்தது முதல் மீண்டும் திரும்பிச் செல்லும் வரை உயர்தர விருந்தோம்பலுடன் கவர்ச்சிகரமான சேவையை வழங்குவது சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபையின் பொறுப்பாகும் என ஜனாதிபதி தெரிவித்தார். விமான நிறுவனங்களுடன் கலந்துரையாடி இலங்கைக்கான விமானப் பயண எண்ணிக்கையை அதிகரிக்க நடவடிக்கை எடுக்குமாறும் ஜனாதிபதி அவர்கள் பணிப்புரை விடுத்துள்ளார்.

யால, குமண, மின்னேரியா மற்றும் ஏனைய பூங்காக்கள் மற்றும் கரையோரப் பகுதிகளை சுற்றுலாத் தலங்களாகப் பேணுவதற்குத் தேவையான உட்கட்டமைப்பு வசதிகளின் அபிவிருத்தி குறித்தும் இங்கு கலந்துரையாடப்பட்டது.

சுற்றுலாத்துறை அமைச்சர் பிரசன்ன ரணதுங்க, ஜனாதிபதியின் தலைமை ஆலோசகர் லலித் வீரதுங்க, அமைச்சின் செயலாளர் எஸ். ஹெட்டியாரச்சி, சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபையின் தலைவர் கிமாலி பெர்னாண்டோ ஆகியோர் உள்ளிட்ட பலரும் இந்நிகழ்வில் கலந்துகொண்டனர்.



அரசியல் பழிவாங்கும் நோக்கில் நல்லாட்சி அரசாங்கம் தாக்கல் செய்த வழக்குகளிலிருந்து விடுவிக்கப்பட்ட அரச மற்றும் பகுதியளவிலான அரச அதிகாரிகளுக்கு நிவாரணம் வழங்குவதற்காக நியமிக்கப்பட்ட குழுவின் அறிக்கை நேற்று பிரதமரிடம் கையளிக்கப்பட்டது. அறிக்கையை ஓய்வுபெற்ற பிரதம நீதியரசர் அசோக டி சில்வா நேற்று (24) அலரி மாளிகையில் வைத்து பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவிடம் கையளித்தார்.

### மத்திய தபால் பரிவர்த்தனை நிலையத்தில்

# தபால் பொதிகளுக்குள் போதைப் பொருள் மீட்பு

இலங்கை சுங்கத்திணைக்களத்தின் போதைப்பொருள் தடுப்பு பிரிவின் அதிகாரிகள், மத்திய தபால் பரிவர்த்தனை நிலையத்தில் கண்காணிப்பு கடமைகளின் போது பொதிகளில் போதைப்பொருள் இருப்பதாக சந்தேகத்தின் பேரில் 08 பொதிகளை தடுத்து நிறுத்தினர்.

ஜேர்மன், கனடா , பிரித்தானியா ஆகிய நாடுகளிலிருந்து கொழும்பு, கம்பஹா மற்றும் கண்டி ஆகிய பகுதிகளில் வசிப்பவர்களுக்கு இந்த பொதிகள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

இது தொடர்பாக விசாரணைகள் நடத்தியபோது இவை போலி முகவரிகள் என தெரியவந்தன.

பொதிகளுக்குள் 1,590 கிராம் கஞ்சா kush மற்றும் ectasy என்றழைக்கப்படும் methamphetamine போதைப் பொருள் அடங்கிய 601 மாத்திரைகள் கண்டுபிடிக்கப்பட்டன. கைப்பற்றப்பட்ட போதைப்பொருளின் சந்தைப் பெறுமதி சுமார் 32 மில்லியன் என உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

தபால் திணைக்கள உத்தியோகத்தர்களின் உதவியுடன் இலங்கை சுங்கத்தின் போதைப்பொருள் கட்டுப்பாட்டு பிரிவின் உத்தியோகத்தர்களினால் இவை கைப்பற்றப்பட்டன.



# அரச வருமானம் ரூ 2000 பில்லியனாக அதிகரிக்க வேண்டிய தேவை உள்ளது

**இன்று வருமானம் ரூ1,500 பில். செலவு 3,500 பில். ரூபாவாக உள்ளது**

**-சபையில் ஆளும் கட்சி எம்.பி பேராசிரியர் ரஞ்சித் பண்டார**

**லோரன்ஸ் செல்வநாயகம்**

அரசாங்கத்தின் வருடாந்த வருமானம் 1,500 பில்லியனாக இருக்கும் போது அரச செலவினம் 3,500 பில்லியனாக காணப்படுவதாக ஆளும் கட்சி எம்.பி பேராசிரியர் ரஞ்சித் பண்டார பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

மாதாந்தம் 167 பில்லியனை கடனாக பெற வேண்டிய நிலை காணப்படுவதாக தெரிவித்த அவர், ஆகக் குறைந்தது அரசாங்கத்தின் வருமானத்தை 2000 பில்லியனாக வாவது அதிகரிக்க வேண்டியுள்ளதென்றும் அவர் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று பெறுமதி சேர் வரி திருத்தச்சட்ட மூலம் தொடர்பான விவாதத்தில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

கடன் பெற்றுக் கொள்ளாமல் இருந்தால் எமது உணவுத் தேவையை நிறைவேற்றிக் கொள்ளலாமே தவிர நாட்டின் எதிர்கால சந்ததிக்காக எந்த அபிவிருத்தி நடவடிக்கைகளையும் முன்னெடுக்க முடியாதென்றும் அவர் தெரிவித்தார்.

சபையில் தொடர்ந்தும் உரையாற்றிய அவர்,

நாட்டின் வருமானத்தில் 70 வீதம் நாடு பெற்றுக்கொண்டுள்ள கடனை மீளச் செலுத்துவதற்கே செலவாகிறது. மேலும் 58 வீதம் சம்பளம் மற்றும் கொடுப்பனவுகளை வழங்குவதற்கு செலவாகிறது.

எமது வரவு செலவுத் திட்டத்தில் 28 வீத குறைபாடு வருடாந்தம் காணப்படுகிறது. அந்தவகையில் கடந்த 2021ஆம் ஆண்டு வரவுசெலவுத் திட்டத்தில் 12.5 வீதமாக அது உள்ளதுடன் இந்த வருடத்தில் அதனை 8.8வீதமாக குறைத்துக் கொள்வதே அரசாங்கத்தின் எதிர்பார்ப்பாகும். நாட்டின் தேசிய வருமானத்தை நூற்றுக்கு 12.5 வீதமாக அதிகரிக்க வேண்டிய தேவை உள்ளது. அதற்கு இதுபோன்ற திருத்தங்களை கொண்டு வர நேர்ந்துள்ளது என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

## முன்னுரிமை அடிப்படையில் உழவு இயந்திரங்களுக்கு எரிபொருள் வழங்கவும்

**ஒலுவில் விசேட நிருபர்**

அம்பாறை மாவட்டத்தில் சிறுபோக விதைப்புப் பணிகளை முன்னெடுகப்பதற்கு முன்னுரிமை அடிப்படையில் உழவு இயந்திரங்களுக்கான எரிபொருளை வழங்க ஆவன செய்யுமாறு அம்பாறை மாவட்ட அரசாங்க அதிபரிடம் கோரிக்கை விடுத்துள்ளதாக, திட்டமிட்ட விவசாய அமைப்பின் செயலாளர் ஏ.எல்.எம்.என். அஹமட் தெரிவித்தார்.

சிறுபோக விதைப்புப்பணிகளை முன்னெடுப்பதற்கான ஆரம்பக் கூட்டங்கள் நடாத்தப்பட்டு நீர் விநியோகம் செய்யப்பட்டுள்ள நிலையில் உழவு வேலைகளை ஆரம்பிப்பதற்கு உழவு இயந்திரங்களுக்கு எரிபொருள் இல்லாமையால் விதைப்புப் பணிகளை மேற்கொள்வதற்கு விவசாயிகள் பல அசௌகரியங்களை எதிர்கொள்வதாக தெரிவித்தார். எரிபொருள் பற்றாக்குறையை காரணம் காட்டி சில உழவு இயந்திர உரிமையாளர்கள் கூடுதலான பணம் அறவீடு செய்வதாகவும் சுட்டிக்காட்டினர்.

விதைப்புப் பணிகளில் ஈடுபடும் உழவு இயந்திரங்களுக்கு முன்னுரிமை அடிப்படையில் எரிபொருள் வழங்குவதற்கு எரிபொருள் நிரப்பு நிலையங்களுக்கு அறிவித்தல் வழங்குமாறு கேட்டுள்ளார்.



அண்மையில் வெளியான 2020 ஆம் ஆண்டுக்கான தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை குருந்துகொள்ள மத்திய கல்லூரியில் அதிகூடிய புள்ளிகளைப் பெற்று 5 மாணவர்கள் சித்தியடைந்துள்ளனர். இதன் பிரகாரம் எம்.ஐ.எம் ஆதில் 168, எம்.எஸ் அம்ஹர் 156, ஐ. ஸைத் 154. எம்.எப். ஆரிப் 151, எம்.ஆர்.எப். மிப்ரா 150 ஆகிய மாணவர்களுடன் அதிபர் யூ.எல்.எம்.எஸ். ரமீஷ் வகுப்பாசிரியை எம்.எம். சகீனா ஆகியோரையும் படத்தில் காணலாம். (படம்: மாத்தளை சுழற்சி நிருபர்)

## ஹெரோயினுடன் இளைஞர் கைது

**தோப்பூர் குறூப் நிருபர்**

மூதூர் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட இரால்குழி பாலத்தில் வைத்து ஹெரோயின் போதைப் பொருளுடன் இளைஞர் ஒருவரை மூதூர் விசேட பொலிஸ் பிரிவினர் வியாழக்கிழமை மாலை கைது செய்துள்ளதாக மூதூர் பொலிஸார் தெரிவித்தனர்.

இதன் போது 5 கிராம் 100 மில்லிகிராம் நிறையுடைய ஹெரோயின் மீட்கப்பட்டுள்ளதுடன் மூதூர் பகுதியைச் சேர்ந்த 26 வயதுடைய நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

குறித்த நபர் ஹெரோயின் போதைப்பொருளுடன் மூதூர் இரால் பாலத்தினூடாக பயணித்துக் கொண்டிருப்பதாக மூதூர் விசேட பொலிஸ் பிரிவினருக்கு கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலின் அடிப்படையில் இடைமறித்து சோதனைக்கு உட்படுத்தியபோது ஹெரோயின் போதைப் பொருளுடன் சந்தேகநபர் கைது செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கதாகும்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர் மூதூர் பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ளதுடன் இவரை நீதிமன்றில் ஆஜர்படுத்துவதற்கான ஏற்பாடுகளை மூதூர் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## மட்டக்களப்பு கல்லடியில் சித்திரைப்புத்தாண்டு சந்தை

**மட்டக்களப்பு விசேட நிருபர்**

தமிழ், சிங்கள புத்தாண்டை முன்னிட்டு வாடிக்கையாளர்களின் வசதி கருதி சிறு கைத்தொழில் உற்பத்திகளின் உணவுப் பொருட்கள், கைத்தறி உடைகள், தேசிய மற்றும் சர்வதேச மட்டத்தில் சந்தைப்படுத்தும் நோக்கோடு புத்தாண்டு சந்தை கல்லடி பழைய பாலத்திற்கருகில் நேற்று முன்தினம் (24) ஆரம்பித்து வைக்கப்பட்டது.

தொழில் முயற்சியாளர்களை ஊக்குவித்து சந்தை வாய்ப்பை ஏற்படுத்தும் முகமாக பிரதேச அபிவிருத்தி வங்கியின் தலைவர் மஹிந்த சாலிகவின் ஆலோசனைக்கிணங்க தொடர்ந்து 3 நாட்களுக்கு நடைபெறவுள்ளது.

கிழக்கு பிராந்திய பிரதேச அபிவிருத்தி வங்கியின் பொது முகாமையாளர் வி.ஜி.டபிள்யூ. அத்துல குமார தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் மாநகர முதல்வர் தி.சரவணபவன் பிரதம அதிதியாக கலந்து கொண்டு விற்பனையை ஆரம்பித்து வைத்தார்.

விவசாய நவீன மயமாக்கள் திட்டத்தின் கீழ் பெண் சுயதொழில் முயற்சியாளர்களை உள்வாங்கி அவர்களை வலுப்படுத்தும் முகமாக பிரதேச அபிவிருத்தி வங்கியின் ஊடாக கடன்களை குறைந்த வட்டிக்கு வழங்கி பெண் சுய தொழில் முயற்சியாளர்களை வலுப்படுத்தி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.








அக்குறணை முஸ்லிம் பாலிகா மஹா வித்தியாலயத்தின் பவள விழாவை முன்னிட்டு நடந்த நடைபவனியில் அதிபர் சுஹீரா சித்தீக், பிரதேச செயலாளர் ஏ.எச்.எம். இந்திக்கா குமாரி அபேசிங்க, பிரதி அதிபர் ஏ.ஆர்.ஹம்ஸா மற்றும் பொற்றோர் ஆசிரியர்கள் கலந்து கொண்ட போது பிடிக்கப்பட்ட படங்கள்.




# குப்பைகளால் யானைகளுக்கு உயிராபத்து



(இரத்தினபுரி சுழற்சி நிருபர்)

நகரங்கள் கிராமப்புற சந்தைகளில் ஒதுக்கப்படுகின்ற குப்பைகளை உண்ணும் யானைகள் உயிராபத்தை எதிர்நோக்கி வருவதாக ஹம்பேகமுவ வெஹெரயாய மக்கள் மற்றும் ஜீவகாருண்ய அமைப்புக்கள் சுற்றாடலியலாளர்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

பலாங்கொடை தனமல்வில வீதியில் அமைந்துள்ள நகர புறநகர்ப் பகுதிகளில் ஒன்று சேறும் பெருந்தொகை குப்பைகள், கழிவுகள் பிரதேச கிராமிய சந்தைகளிலிருந்து அகற்றப்படும் குப்பைகள் வெஹெரயாய காட்டுப்பகுதியில் கொட்டப்படுவதாக பிரதேச மக்கள் தெரிவிக்கின்றனர்.

இங்கு கொட்டப்படும் குப்பைகளில் பெருமளவு நகரப்பிரதேசங்களில் இருந்து கொண்டு வந்து கொட்டப்படும் கழிவுகளாக இருப்பதால் இவற்றில் பொலித்தீன் மற்றும் பிளாஸ்டிக் கழிவுகள் அதிகமாக காணப்படுவதாக இவர்கள் சுட்டிக்காட்டுகின்றனர். பசி பட்டினியால் யானைகள் மின்சார வேலிகளை உடைத்துக் கொண்டு கிராமத்தினுள் புகுந்து குப்பை மேட்டில் பொதிகளாக காணப்படும் குப்பைகளை அவ்வாறே விழுங்கி விடுவதனால் அவற்றிலுள்ள கழிவுகளால் யானைகள் பாதிப்புக்குள்ளாவதாக ஜீவகாருண்ய அமைப்புக்கள் தெரிவிக்கின்றன.

யானைகளின் மல எச்சங்களில் இவ்வாறான உயிருக்கு ஆபத்தை விளைவிக்கக்கூடிய மோசமான கழிவுகள் காணப்படுவதாகவும் இவர்கள் சுட்டிக்காட்டுகின்றனர். இவ்வாறான நிலைமைகள் தொடர்ந்தால் இப்பகுதியில் உணவுகளை உட்கொள்ளும் யானைகள் பரிதாபமாக உயிரிழக்க நேரிடும் என சுற்றாடலியலாளர்கள் வன ஜீவராசிகள் திணைக்கள அதிகாரிகள் கவலை தெரிவிக்கின்றனர்.

## தரம் 05 புலமைப்பரிசில்; பசறை கனவரல்ல தமிழ் வித்தியாலயத்தில் சிறந்த பெறுபேறு



தரம் 05 புலமைப்பரிசில் பரீட்சைப் பெறுபேறுகளுக்கு அமைய பசறை கனவரல்ல இல.01 தமிழ் வித்தியாலயத்தில் 4 மாணவர்கள் வெட்டுப்புள்ளிக்கு அதிகமான புள்ளிகளைப் பெற்று பரீட்சையில் சித்தியடைந்துள்ளனர். இவர்களில் பி.ஹரிஷான் 173, வி.மேனகாஷினி 167, எஸ்.ருக்ஷிகா 165, வை.தரணியா 149 என புள்ளிப்பெற்றுள்ளனர். (படம்: பசறை நிருபர்)

# இந்திய புலமைப்பரிசில் திட்டத்தை மக்கள் சரியாக பயன்படுத்திக் கொள்ள வேண்டும்

அமைச்சர் எஸ். பி. திசாநாயக்க





மாவத்தகம தினகரன் நிருபர்

இந்தியா வழங்கும் கல்வி புலமைப்பரிசில்களை மக்கள் சரியாக பயன்படுத்திக் கொள்ள வேண்டும். இதன் மூலம் இலங்கை இந்தியாவுக்கிடையிலான இணைந்த கல்வி தொழில் நுட்ப அறிவு மேலும் வளர்ச்சியடையும் என கைத்தொழில் துறை அமைச்சர் எஸ். பி. திசாநாயக தெரிவித்தார்.

இலங்கையிலிருந்து அரச உயர் பதவிகளிலுள்ளவர்கள் இந்தியா பல்கலைக்கழகங்களில் தொழில் நுட்ப பொருளியல் அறிவைப் பெற்றுக் கொண்டவர்களுடைய அனுபவங்களைப் பகிர்ந்து கொள்ளும் நிகழ்வு கண்டி மஹாவெலி ஹோட்டலின் கேட்போர் கூடத்தில் கண்டி இந்தியா உதவி உயர்ஸ்தானிகர் வைத்திய கலாநிதி ஆத்ரா. எஸ். தலைமையில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் பிரதம அதிதியாக கைத்தொழில் துறை அமைச்சர் எஸ். பி. திசாநாயக கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இதனை தெரிவித்தார்.

இந்நிகழ்வு இந்தியா வழங்கும் கல்வி புலமைப்பரிசில் திட்டத்தின் கீழ் இந்தியா இலங்கைக்கிடையிலான அறிவை வலுவூட்டும் வகையில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இந்நிகழ்வில் கண்டி மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் வேலுக்குமார், பேராதனை பல்கலைக்கழக உபவேந்தர் உயர் லமாவன்ச கண்டி உதவி இந்திய ஸ்தானிகராலயத்தின் விசா அதிகாரி கிருஸ்ண பிரசாத் மற்றும் அரச உயர் அதிகாரிகள் உள்ளிட்ட பிரமுகர்கள் கலந்து கொண்டனர்.

இரத்தினபுரி

## மூக்குவத்தையில் காமன் விழா

இரத்தினபுரி, ஹபுகஸ்தென்ன, மூக்குவத்தையில் காமன் விழா இன்று (26) மாலை 6 மணி முதல் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 6 மணிவரை நடைபெறும்.

மறைந்த தொகுப்பாசிரியர் எஸ். ஆர். ராமலிங்ம். எல். கிட்ணன் மறைந்த கலை மன்னன் எஸ்.எம். வடிவேல் ஆகியோர் மன்மதன் ரதி வரலாற்று நாடகமாக வடிவமைத்த காமன் விழாவை, புராண தொகுப்பாசிரியர் எஸ்.எம்.வீ. செல்வகுமார் நெறிப்படுத்தி வழங்குகிறார்.

இவ்விழா தோட்ட பொதுமக்கள் ஆதரவிலும் ஆலய தலைமை நிர்வாகி கே. பி. நடேசன், வி. லோகநாதன், வி. சத்தியநாதன், விழா பொறுப்பாளர் வி. விசுவநாதன் ஆகியோரின் தலைமையின் கீழ் நடைபெறும்.

எஸ். எம். தியாகராஜ வழங்கும் "சிரிப்போம் சிந்திப்போம்" என்ற நகைச்சுவை நாடகமும் ககலை, கலாசார நிகழ்ச்சிகளும் இடம்பெறும்.

இவ்விழாவை நடத்துவதற்கு காமன் விழா ஏற்பாட்டுக்குழு, வாலிபர் சங்கம், தோட்ட கமிட்டி தலைவர் முதல் தொண்டர்கள் வரை இணைந்து செயற்படுவார்கள்.

## சமூக சேவையளர் ராமகிருஸ்ணன் ஸ்ரீதரனின் தந்தை காலமானார்

மாத்தளை பிரபல சமூக சேவையளர் ராமகிருஸ்ணன் ஸ்ரீதரனின் தந்தை நாகலிங்கம் ராமகிஸ்ணன் தமது 90 வயதில் காலமானார். அன்னாரது இல்லமான 18/18 வட்ட வீதி களுதாவளையிலிருந்து மாத்தளை இந்து மயானத்தில் நேற்று மாலை நல்லக்கடம் செய்யப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

## சமாதான நீதவான்



லுணுகல நிருபர்

பசறை கோணக்கலை, காவத்தை பிரிவை வதிவிடமாக கொண்ட அம்பிகாபதி சந்திரசேகர் பதுளை மாவட்ட சமாதான நீதவனாகமாவட்ட நீதவான் முன்னிலையில் சத்தியபிரமாணம் செய்துகொண்டார்.

இவர் பசறை கோணக்கலை தமிழ் மகா வித்தியாலயத்தின் பழைய மாணவரும், தொழிற்பயிற்சி நெறி போதானாசிரியரும் ஆவார். இவர் சமூக சேவை அமைப்புகளில் அங்கத்துவம் வகிப்பதுடன் சமூக சேவைகளில் ஆர்வத்துடன் ஈடுபட்டு வருகின்றமைக் குறிப்பிடத்தக்கது.

## ஆயுர்வேத சத்திர சிகிச்சை முறைகளை வலுப்படுத்த நடவடிக்கை

(எம்.ஏ.அமீனுல்லா)

மத்தியமாகாணத்தில் ஆயுர்வேத சத்திர சிகிச்சை முறைகளை வலுப்படுத்த முறையான வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கவிருப்பதாக மத்திய மாகாண ஆளுநர் லலித் யூ கமகே தெரிவித்துள்ளார்.

அந்தவகையில் மாத்தளை மாவடடத்திலுள்ள தென்ன ஆயுர்வேத வைத்திய சாலையில் சத்திரசிகிச்சை நிலைய வசதிகளை ஏற்படுத்துவதற்கு தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளப்படும் எனவும் ஆளுநர் தெரிவித்துள்ளார்.

கண்டி ஆளுநர் அலுவலகத்தில் அண்மையில் (23) இடம்பெற்ற ஆயுர்வேத சத்திரசிகிச்சை முறைமை தொடர்பான கலந்துரையாடலின் பொழுது ஆளுநர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

ஆயுர்வேத சத்திரசிகிச்சை முறையின் நடைமுறை, பயன்பாடு மற்றும் வெற்றிகரமான முறைகள் குறித்து ஆயுர்வேத சத்திரசிகிச்சை நிபுணர் டாக்டர் அனுர விக்கிரமநாயக்க அங்கு விரிவான விளக்கமளித்தார்.



கதிரேசன் மாதிரி ஆரம்ப பாடசாலையில் 2022 ஆம் ஆண்டுக்கான சாரணர் பயிற்சி முகாம் ஆசிரியை சசிகலா தலைமையில் ஆரம்பித்து வைக்கப்பட்டது. (படம்: மஸ்கெலியா தினகரன் விசேட நிருபர்)



பசறை வலய கல்வி பிரிவுக்குட்பட்ட சுவிண்டன் தமிழ் வித்தியாலயத்தில் தரம் ஐந்து புலமைப்பரிசில் பரீட்சைக்கு தோற்றி கி.நேசன்ராயன் (179) க.சதீஷ்வர் (154) ஆகியோர் சிறப்பான புள்ளிகளை பெற்று சித்தியடைந்துள்ளர். சித்தியடைந்த மாணவர்களையும் வகுப்பாசிரியர் பி.பிரதீபன், அதிபர் எஸ். முருகையா ஆகியோரையும் படத்தில் காணலாம். (லுணுகல நிருபர்)

## பதவியேற்பு

தலவாக்கலை லிந்துலை நகர சபையின் புதிய தலைவராக தெரிவு செய்யப்பட்ட ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் உறுப்பினர் சந்தன பிரதீப் குணதிலக்க நேற்றுமுன்தினம் (24) மாலை தனது கடமைகளை பொறுப்பேற்றார்.

மத்திய மாகாண உள்ளூராட்சி மன்ற ஆணையாளர் மேனகா ஹேரத் தலைமையில் நேற்று முன் தினம் (23) நடைபெற்ற நகர பிதாவுக்கான தேர்தலில், ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் உறுப்பினர் சந்தன பிரதீப் குணதிலக்க பெயரை அதே கட்சியைச் சேர்ந்த பிரசன்ன விதானகே முன்மொழிய இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் உறுப்பினரும் முன்னாள் நகர சபையின் பதில் தலைவருமான லெட்சுமன் பாரதிதாசன் வழிமொழிந்தார்.

அதனைத் தொடர்ந்து வாக்கெடுப்பு இடம்பெறாத நிலையில் 6 பேரின் ஆதரவுடன் புதிய தலைவர் ஏகமனதாக தெரிவு செய்யப்பட்டார்.

2022 வரவு செலவுத் திட்ட வாக்கெடுப்பின் போது இரண்டு தடவைகள் வரவு செலவுத்திட்டம் தோற்கடிக்கப்பட்டதை தொடர்ந்து புதிய தலைவர் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

# எரிபொருள் தட்டுப்பாடு : நுவரெலியா பிரதேசத்தில் தனியார் பஸ் உரிமையாளர்கள் பணி பகிஷ்கரிப்பு

(ஹற்றன் சுழற்சி நிருபர்)



டீசல் உள்ளிட்ட எரிப்பொருளை உரிய முறையில் வழங்க வேண்டும் என வலியுறுத்தி நேற்று (25) நுவரெலியா பிரதேச தனியார் பஸ் உரிமையாளர்கள் பணி பகிஷ்கரிப்பில் ஈடுப்பட்டனர்.

இதனால் தூரப் பிரதேசங்களுக்கு செல்லும் பயணிகள் பெரும் சிரமங்களுக்குள்ளாகியுள்ளனர். எதிர்ப்பு கோஷங்களும் எழுப்பினர்.

நுவரெலியா நகரிலுள்ள எரிபொருள் நிலையங்களில் உரிய முறையில் தமக்கு எரிபொருள் வழங்கப்படுவதில்லை என அவர்கள் தெரிவித்துள்ளனர்.

எனவே தமக்கு எரிப்பொருள் உரிய நடைமுறைகளை பின்பற்றி வழங்கப்பட வேண்டும் என பகிஷ்கரிப்பில் ஈடுப்பட்டுள்ள சாரதிகளும், நடத்துனர்களும் தெரிவித்துள்ளனர்.

நுவரெலியா சாந்திபுர, மிபிலியான, ஹாவா எலிய, பொரலாந்த, ராகல, நானுஓயா மற்றும் பட்டிப்பொல ஆகிய இடங்களுக்கான போக்குவரத்தில் ஈடுபடுவதை தவிர்த்துள்ளதாகவும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.

இந்நிலையில் பிரச்சினை தொடர்பில் கலந்துரையாட தனியார் பஸ் உரிமையாளர்களுக்கு அழைப்பு விடுத்துள்ளதாக நுவரெலிய தலைமையக பொலிஸ் நிலைய பிரதான பொலிஸ் பரிசோதகர் பிரேமலால் தெரிவித்துள்ளார்.

## தனியார் சீமெந்து தொழிற்சாலை இயற்கை நீரூற்றுகளுக்கு பாதிப்பு

(இரத்தினபுரி மேலதிக நிருபர்)

தனியார் சீமெந்துத் தொழிற்சாலைக்கு எம்பிலிப்பிட்டிய சங்கபால கல்பொக்கயாய இயற்கை வனத்திலிருந்து மூலப்பொருட்கள் பெறுவதற்கு பிரதேச மக்கள் கடும் எதிர்ப்புத் தெரிவித்து வருகின்றனர்.

தனியார் சீமெந்து தொழிற்சாலையின் உற்பத்திக்கு அவசியமான கல்சியம் சிலிகேட், டொலமைட் ஆகிய மூலப்பொருட்கள் இயற்கை வனத்திலிருந்து பெறப்படுவதால் சுமார் 250 ஏக்கர் பரப்பளவுடைய வனம் நாளுக்கு நாள் அழிந்து வருவதுடன் பல ஆயிரக்கணக்கான மக்கள் குடிநீருக்கு பயன்படுத்தும் நீரூற்றுக்களும் சீர்குழைந்து வருவதாக பிரதேச மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

மூலப் பொருட்களைப் பெறும் தனியார் சீமெந்து உற்பத்தி நிறுவனம் இயற்கை வளங்களை அழிப்பதை நிறுத்த பொறுப்பு வாய்ந்தவர்கள் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் எனவும் இவர்கள் வேண்டுகோள் விடுக்கின்றனர். இந்நிலை நீடித்தால் தாம் தொடர்ந்து போராட்டங்களை நடத்தி பிரதேசத்தின் இயற்கை வளங்களைப் பாதுகாக்க நடவடிக்கைகளை மேற்கொள்வோம் எனவும் இயற்கை வனப்பாதுகாப்பு அமைப்பின் பிரதிநிதிகள் தெரிவித்தனர்.



# நாளுக்கு நாள் புதிதாகும் இந்திய-இலங்கை நட்புறவு

மஹிந்த ஆரியவன்ச...
தமிழில்: வீ.ஆர். வயலட்

ஆதிகாலம் தொட்டே இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையே பெரும் நட்பு நிலவியது. விஜயனின் வருகையால் மாத்திரமல்ல மஹிந்த தேரரின் வருகையாலும் சரித்திர பூர்வமான உரிமைகள் போன்று நட்புறவும் மிகவும் இதயப்பூர்வமாக அமைந்தது தெளிவாக உள்ளது. எமது நாட்டை முன்னர் ஆண்ட அரசர்கள் கூட தங்களது திருமணத்துக்காக இந்தியாவிலிருந்து குலப் பெண்களை அழைத்து வந்ததால் அது மேலும் உறுதியாகியது. அசோக மன்னன் எமது நாட்டில் காணப்பட்ட அநாகரிக கலாசாரத்தை நாகரிகமான கலாச்சாரம் வரை கொண்டு சென்றது பௌத்த கொள்கைகளை இப்பூமியில் விதைத்ததாலாகும்.

இலகுவான எளிமையான வாழ்க்கையின் பெறுமதியை புத்த தர்மமே எமக்கு எடுத்துரைத்தது. மஹிந்த தேரருடன் இந்தியாவில் இருந்து வருகை தந்த 18 குல வகுப்பார் எமது நாட்டை அருமையான நாடாக மாற்றினார்கள். முறையான நீர் முகாமைத்துவத்தை ஏற்படுத்தி நீர்ப்பாசன துறையை மேம்படுத்தினார்கள். நெல் உற்பத்தியால் தன்னிறைவு பெற்ற மக்கள் மனதாலும் அறிவாலும் முதிர்ச்சி பெற்றது ஆன்மீக மேம்பாட்டினாலாகும். குளமும் தாதுகோபுரமும், பசுமையான வயல் வெளிகளையும் எமக்கு உரிமையாக்கினார்கள். அன்று இந்தியாவில் இருந்து வருகை தந்த 18 குல வகுப்பார் விகாரைகளை மாத்திரமல்ல அரச பூங்காக்களை கூட எமது நாட்டில் உருவாக்கினார்கள். மஹமேவுனா பூங்கா மாத்திரமல்ல மகாவிகாரை போன்ற சிறப்பான கல்விக்கூடங்களைக் கூட எமது நாட்டில் அமைத்தார்கள். கல்லில் வடித்த சந்திரவட்டக்கல், வாகல் கட,கொரவக்கல் போன்ற விசேட நிர்மாணங்கள் கூட அன்று இந்தியாவில் இருந்து வந்த நிர்மாணிப்பாளர்களால் கிடைத்த கொடையாகும். இரண்டு நாடுகளையும் ஆண்ட அரச நிர்வாகிகளின் நட்பால் இந்தியா மற்றும் இலங்கைக்கு இடையே மாறாத கலாச்சார இணைப்பொன்று காணப்பட்டது. அசோக மன்னன் ஆட்சியிலிருந்து இன்றுவரை அந்த நட்பு தேரவாத புத்த தர்மத்துடன் வலுவாகியுள்ளது என்பது இரகசியமான விடயமல்ல.

### கடுமையான ஆட்சியாளர்கள் உருவானது

அரச முடிசூடலை கூட அசோக மன்னனின் ஆலோசனையின்பேரில் எமது நாட்டின் அரசனான தேவநம்பியதீசன் மேற்கொண்டதாக சரித்திரத்தில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. இந்தியாவிலிருந்து வந்த சோழ, பாண்டிய, கேரள அரசர்கள் எமது நாட்டை ஆக்கிரமித்தார்கள். அன்று இந்தியாவிடம் இருந்து கிடைத்த புத்த தர்மத்தை அழித்து இந்து மத கொள்கைகளை நிறுவி கோயில்கள் அமைக்கப்பட்ட விதம் கூட தெளிவாகின்றது. எமது நாட்டில் காணப்பட்ட நீர்ப்பாசன கலாச்சாரத்தை அழித்து நெல் உற்பத்திக்கு கூட பாதிப்பை ஏற்படுத்திய மாகா போன்ற மோசமான அரசர்களும் இந்தியாவிலேயே தோன்றினார்கள்.

எமது நாடு கிழக்கின் நெல் களஞ்சியமாக மாறுவதற்காக சரியான அரசர்கள் உருவானது இந்தியாவில் இருந்து இலங்கைக்கு கிடைத்த கொடையான புத்த தர்மத்தின் வழிகாட்டலாலாகும். சில வேளைகளில் மிகவும் நண்பராக காணப்படும் இந்தியா சிலவேளைகளில் எமது நாட்டின் எதிரியாக மாறி நாட்டின் இறைமைக்கு பாதிப்பை ஏற்படுத்திய சந்தர்ப்பங்களும் உள்ளன. ஆனால் இந்தியாவுடனான நட்புறவு அரசருக்கு அரசர் மாறிக் கொண்டு சென்றது அந்யோன்ய நம்பிக்கை மற்றும் நட்புடனாகும். எமது நாட்டில் தர்மசாஸ்திரம் முன்னேறுவதற்கு வழிகாட்டிய மகா விகாரையுடன் புத்தகோஷ தேரர் மாத்திரமல்ல மகாநாம தேரரும் இந்தியாவிலிருந்து இங்கு வருகை தந்து எமது நாட்டில் தர்ம சாஸ்திரத்தை வளர்த்தார்கள். எமது மகாவம்ச கதைகளில் குறிப்பிட்டுள்ளவாறு ஹேம மாலா மற்றும் தந்தகுமாரர் கொண்டு வந்த புத்தரின் புனித தந்ததாது இன்றும் எமது நாட்டின் புனிதத்துவத்தில் முதன்மையானதாகும். அதுவும் எமக்கு இந்தியாவில் இருந்தே கிடைத்தது. எமது சிங்கள மொழி பாவனையிலுள்ள மொழியாக மாறுவதற்கு பாளி மற்றும் சமஸ்கிருத பாஷைகளை அடிப்படையைக் கொண்டுள்ளது இரகசியமான விடயமல்ல.

### இந்திய சங்கீதம்

எம்முடைய இலக்கியம் மாத்திரமல்ல சங்கீதமும் இந்தியாவை பின்பற்றியே உருவாகி உள்ளது. இந்தியாவின் ராகதாரி சங்கீதமும் வடநாட்டு சங்கீதமும் அதில் இணைந்துள்ளன. இன்றுவரை சங்கீதத்தில் உயர் பரீட்சைகளில் தோற்றுபவர்களில் அனேகமானோர் இந்தியாவிற்குச் சென்றே தமது கல்வி நடவடிக்கைகளை மேற்கொள்கிறார்கள். எமது நாட்டில் வாழ்ந்த சங்கீத பண்டிதர்கள் இந்திய வழிகாட்டுதல்களின் மூல வழித்தோன்றலில் உருவாகியவர்கள் என்பது இரகசியமான விடயமல்ல. சுனில் சாந்த ,லயனல் எதிரிசிங்க, கலாநிதி அமரதேவ போன்ற அனைவருமே இந்தியாவின் பாத்கண்டிலோ அல்லது ரவீந்திரநாத் தாகூரின் சாந்திநிகேதனிலோ கல்வி கற்ற இசைக்கலைஞர்கள் ஆவார்கள். எமது நாட்டின் நாடக சம்பிரதாயங்களில் உருவான மனமே, சிங்கபாகு போன்ற நாடகங்களுக்கு கருப் பொருளிலிருந்து சங்கீதம் வரை அனைத்துக்கும் இந்தியாவே அடிப்படையாக காணப்பட்டது. எமது நாட்டில் சினிமா கைத்தொழிற் பற்றி குறிப்பிடும்போது இந்தியாவின் ஸ்டுடியோகளுக்குச் சென்றே ஆரம்பத்தில் திரைப்படங்களை தயாரித்துள்ளார்கள். அதில் ஹிந்தி திரைப்படங்களினதும் தமிழ் திரைப்படங்களினதும் சாயல் அதிகமாக காணப்பட்டன என்பது இரகசியமான விடயமல்ல. பின்னர் எமது சுயநிர்மாணங்கள் உருவானாலும் ஆரம்பத்தில் இந்திய சாயலிலேயே எமது நாட்டின் சினிமா கலை வளர்ந்தது .

> **எம்முடைய இலக்கியம் மாத்திரமல்ல சங்கீதமும் இந்தியாவை பின்பற்றியே உருவாகி உள்ளது. இந்தியாவின் ராகதாரி சங்கீதமும் வடநாட்டு சங்கீதமும் அதில் இணைந்துள்ளன. இன்றுவரை சங்கீதத் தில் உயர் பரீட்சைகளில் தோற்றுபவர்களில் அனேகமானோர் இந்தியாவிற்குச் சென்றே தமது கல்வி நடவடிக்கைகளை மேற்கொள்கிறார்கள்.**



இன்று கூட டெலிடிராமா கலையில் எமது குரல் வளங்களுடன் இந்தியாவில் உற்பத்தி செய்யப்பட்ட அர்த்தமற்ற கதைகள் கொண்ட நாடகங்கள் இன்றுவரை காணப்படுவது கவலைக்குரிய விடயமாகும். எமது நடனக் கலையும் இந்தியாவின் கலாச்சாரத்திலேயே உருவாகியுள்ளது .மேற்குலகின் பாதிப்பிலிருந்த சமயத்தில் இந்தியாவும் அதன் ஏகாதிபத்தியத்துக்கு உட்பட்டிருந்தது மேலும் மொகலாய ஏகாதிபத்திய வாதிகளின் ஆக்கிரமிப்பாலும் இந்தியாவில் காணப்பட்ட கலாச்சார தனித்தன்மை பெருமளவில் பாதிக்கப்பட்டது என்பது ரகசியமல்ல.இந்தியாவில் ஆரம்ப காலம் தொட்டே காணப்பட்ட உயர்கல்வி நிறுவனங்கள் பல மொகலாய ஏகாதிபத்திய வாதிகளால் உடைக்கப்பட்டன. நாளந்தா ,ஜகத்தாலா,ஓதன் பூரி ,வராஹி போன்ற பல்கலைக் கழகங்கள் மொகலாயர்களால் அழிக்கப்பட்டன. பௌத்த கல்வி மத்திய நிலையங்கள் அவ்வாறு அழிவுடைந்ததுடன் விஞ்ஞான கல்வியும் அநேகமாக அத்துடன் அழிந்து போனது என்பது அறிஞர்களின் கருத்தாகும். எமது நாட்டில் போர்த்துக்கேயர்கள் உடனான சண்டையில் மல்வானை யுத்தத்தில் இந்தியாவின் கல்கத்தாவின் செமோரின் என்னும் அரசன் சீதாவக்கு ராஜசிங்க அரசனுக்கு முஸ்லிம் படைகளை வழங்கியதாக சரித்திரத்தில் குறிப்பிடப்படுகின்றது. பயங்கரமான மல்வான யுத்தத்தில் அவர்கள் அனைவரும் தமது உயிர்களை தியாகம் செய்ததாக சரித்திரத்தில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்தியாவின் சுதந்திரப் போராட்டம் எமது நாட்டின் சுதந்திர போராட்டத்திற்கும் அதிகமான விடயங்களை பெற்றுக்கொடுத்தது என்பதில் எதுவித ரகசியமும் இல்லை. அவர்கள் பெரும் அர்ப்பணிப்புடன் பெருமளவு உயிர் தியாகத்தால் ரத்தம்,கண்ணீர் மூலம் அந்த போராட்டத்தை முடிவுக்குக் கொண்டுவந்தார்கள். அங்கு மகாத்மா காந்தி அகிம்சை முறையை பின்பற்றினார். ஜவஹர்லால் நேரு, சுபாஷ் சந்திரபோஸ், பட்டேல் போன்ற தலைவர்கள் அதனை புரட்சி போராட்டம் வரை கொண்டு சென்றதை மறக்க முடியாது. மகாத்மா காந்தி அகிம்சையை பின்பற்றினாலும் சுபாஷ்சந்திரபோஸ் பட்டேல் போன்ற தலைவர்கள் அதனை வெற்றிக்கான போராட்டமாகவே குறிப்பிட்டார்கள்.

### இடதுசாரித் தலைவர்கள்

எமது நாட்டில் வாழ்ந்த இடதுசாரித் தலைவர்களான கலாநிதி என்.எம். பெரேரா, கலாநிதி கொல்வின் ஆர் டி சில்வா,பிலிப் குணவர்தன, டாக்டர் எஸ்.ஏ. விக்ரமசிங்க, விசேடமாக உடகெந்தவல சரணங்கர தேரர் போன்ற பிக்குகளும் அன்று இந்தியாவின் சுதந்திரப் போராட்டத்துக்காக பங்களிப்பு வழங்கி சிறை சென்றவர்கள் என்பது இரகசியமான விடயமல்ல. ரவீந்திரநாத் தாகூர் போன்ற கவிஞர்களும் அந்த சுதந்திரப் போராட்டத்தில் முன்னணியில் இருந்து செயல்பட்டார்கள்.

புத்தர் வாழ்ந்த நாடாக அறியப்பட்ட இந்தியாவில் பௌத்த கொள்கைகளை பாதுகாப்பதற்காக அநகாரிக தர்மபால செயல்படாவிட்டால் இன்றும் புத்த காயா,மிகதாய, முலகந்த குடி விகாரை, குஷிநகர், செவத் நுவர,சங்கஸ்ஸபுர போன்ற புத்தர் வாழ்ந்த இடங்கள் உலகு வாழ் பௌத்த மக்களுக்கு இல்லாமல் போயிருக்கும். இன்னும் இந்தியாவில் பௌத்தத்தை அடையாளப்படுத்தும் இந்திய தேசியக் கொடியை நிர்மாணிப்பதில் சுதந்திர இந்தியாவின் முதலாவது நீதி அமைச்சர் பாபாசாஹேப் அம்பேத்காரால் முடிந்தது.

இந்தியாவின் பௌத்த தர்ம சக்கரத்தை இந்திய தேசியக் கொடியில் உள்ளடக்கியதன் மூலமாகும். இந்தியாவிடமிருந்து நாம் கற்க வேண்டிய பாடங்கள் அநேகம் உள்ளன. அவர்கள் அந்த நாட்டின் உற்பத்தி பொருளாதாரத்தின் சக்தியாக உள்ளார்கள். சுய முயற்சியால் முன்னேறும் இனமாக உள்ளார்கள். இந்தியாவிலும் எம் நாட்டைப் போன்று ஐந்து வருடங்களுக்கு ஒருமுறை தேர்தல் நடத்தப்படுகிறது.

ஆனால் ஆட்சிக்கு வரும் அரசாங்கத்துக்கு அன்று தொடக்கம் உருவாக்கப்பட்ட தேசிய கொள்கை ஒன்று உண்டு. அதற்கு அப்பால் எந்தவொரு ஆட்சியாளருக்கும் ஆட்சி நடத்த முடியாது.

எமது நாட்டுப் பொருளாதாரத்தை மிகவும் நன்றாக 1970-1977 ஆண்டுகளில் சிறிமாவோ பண்டாரநாயக்க அம்மையாரால் நடத்த முடிந்தது. 1970 இல் ஆட்சிக்கு வந்த ஜே.ஆர் .ஜெயவர்தன அந்த உற்பத்தி பொருளாதாரத்தினை தலைகீழாக மாற்றி சிறந்த பொருளாதாரத்தை கொண்டுவந்தது எமக்கு தேசிய கொள்கை என்று இல்லாததாலாகும். முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ச காலத்தில் மத்தளயில் அமைக்கப்பட்ட சர்வதேச விமான நிலையத்தில் நல்லாட்சி அரசாங்கம் நெல்லை களஞ்சியப்படுத்தியது எமக்கு தேசியக் கொள்கை ஒன்று இல்லாததாலேயாகும்.

கொவிட் நோய்தொற்று காரணமாக பொருளாதாரத்துக்கு ஏற்பட்ட மோசமான பாதிப்புக்கு மத்தியில் அந்நிய செலாவணி கையிருப்பின் குறைவை ஈடுசெய்ய சுற்றுலாத்துறையில் புத்துயிர்ப்பை மேற்கொண்ட வேளையில் ரஷ்ய உக்ரைன் யுத்தம் மரத்திலிருந்து விழுந்த மனிதனை மாடு மிதித்தது போல எமது பொருளாதாரத்துக்கு பெரும் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது.

### பேச்சுவார்த்தையின் பலன்

சிரமமான இச்சந்தர்ப்பத்தில் நிதி அமைச்சர் பசில் ராஜபக்ச இந்தியாவில் சுற்றுலா ஒன்றை மேற்கொண்டார் .அவரின் நோக்கம் படுகுழியில் விழுந்துள்ள பொருளாதாரத்தை அதிலிருந்து மீட்பதாகும். விஷேடமாக இந்திய பிரதமர் நரேந்திர மோடி யுடன் நடத்தப்பட்ட பேச்சுவார்த்தைகளின் பலனாக எமது நாட்டிற்காக ஒரு பில்லியன் பணத்தை பெற்றுக் கொடுக்க நடவடிக்கை எடுக்கப்பட்டது.

நிதி அமைச்சர் பசில் ராஜபக்ச புதுடில்லி சுற்றுலாவின் போது ஏற்படுத்திக்கொண்ட புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் கீழ் இந்தியாவின் பெட்ரோலிய உற்பத்திப் பொருட்களை விலைக்கு வாங்க இலங்கைக்கு கொடுக்கப்பட்டுள்ள 1 பில்லியன் அமெரிக்க டாலரில் நூற்றுக்கு எழுபத்தி ஐந்து சதவீத பெறுமதியான பொருட்கள் மற்றும் சேவைகளை இந்தியாவே வழங்க முடியும்.

அதன்படி இந்தியாவின் IOC நிறுவனம் இலங்கைக்கு 40 ஆயிரம் மெட்ரிக் தொன் எரிபொருளை வழங்க நடவடிக்கை எடுக்கும்.

அதில் உள்ள விசேட தன்மை என்னவென்றால் எஞ்சிய நூற்றுக்கு 25 சதவீதமான பணத்தில் பொருட்கள் மற்றும் சேவைகளை உலகில் வேறு எந்த நாட்டிலிருந்தும் பெற்றுக்கொள்ள முடியும். மீள் உருவாக்க வலு சக்தியை உற்பத்தி செய்யக்கூடிய சூரிய சக்தியால் மின்னை உற்பத்தி செய்வது எமது மின்சார பிரச்சனைக்கு தெளிவான விடையாகும்.

மேலும் இந்திய இலங்கை கடல் எல்லையில் கடற்கரை பாதுகாப்பு படையணியின் ஒத்துழைப்பை பெற்றுக் கொள்வதற்கு பேச்சுவார்த்தை மூலம் தீர்வினை எடுத்த புதுடில்லி கலந்துரையாடல் இருநாடுகளுக்கும் இடையேயான புரிந்துணர்வின் இன்னுமொரு வெற்றியாகும்.



# பாகிஸ்தானில் அதிகரித்துவரும் பெண்களுக்கு எதிரான வன்முறைகள்



பாகிஸ்தானில் பெண்களுககு எதிரான வன்முறைச் சமபவங்கள் அதிகரித்து வருவதாகவும் இம்ரான்கான் தலைமையிலான அரசு அவற்றைக் கட்டுப்படுத்தும் நடவடிக்கைகளில் அலட்சியம் காட்டுவதாகவும் பாக். மனித உரிமை செயற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர். வீட்டு வன்முறைகள், பலாத்காரம், அசிட் வீச்சு, மதமாற்றம் மற்றும் திருமணம், வேலை வாய்ப்புகளில் பெண்களுக்கு பாரபட்சம், மதத்தீவிரவாதம், கௌரவக் கொலை என்பன பாகிஸ்தானில் அதிகரித்து வருவதாக இவர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

பெண்களை பலாத்காரமாக திருமணம் செய்து வைப்பது செல்வந்த குடும்பங்களிலும் நடைபெற்று வருவதாகவும் திருமணத்துக்கு சம்மதிக்காத தன் மகளை பாகிஸ்தான் ராஜதந்திரி ஒருவர் கொலை செய்த சம்பவத்தை உதாரணமாகக் காட்டும் மனித உரிமை செயற்பாட்டார்கள், பெண்களுக்கு எதிரான வன்முறைகள் பாகிஸ்தானில் மோசமான பிரச்சினையாக மாறியிருப்பதாகக் கூறுகின்றனர்.

இரண்டு ஆண்டுகளுக்கு முன்னர் லாகூர் அதிவேக பாதையில் பயணித்த பிரெஞ்சு பெண்மணி ஒருவரின் வாகனம் பழுதடைந்து நின்றுவிட்ட போது அப்பெண்மணியின் இரண்டு பிள்ளைகளின் முன்பாக அவர் இருவரால் பாலியல் பலாத்காரம் செய்யப்பட்டதாகவும் கூறும் சர்வதேச மன்னிப்புச் சபையின் தெற்காசிய பொறுப்பாளர் ரிம்மல் மொஹைடீன், லாகூர் உயர் பொலிஸ் அதிகாரி அப்பெண்மணியிடம் அதிவேக பாதைக்குப் பதிலாக ஏன் சாதாரண பாதையில் பயணித்திருக்கக் கூடாது என்று கேட்டதாகக் குறிப்பிட்டுள்ளார்.

பெண்களுக்கு எதிரான வன்முறைக் தொடர்பாக கருத்து தெரிவித்துள்ள பாக். பிரதமர், எல்லா சமூகங்கள் மத்தியிலும் பெண்களை இழிவாகப் பார்க்கும் தன்மை நிலுவுவதால் ஆண்களின் இச்சையைத் தவிர்க்கும் வகையில் பெண்கள் உடையணிந்து கொள்ள வேண்டும் எனக் கூறியிருப்பதற்கு கடுமையான எதிர்ப்பு எழுந்தது. இத்தகைய கருத்துக்கள் நிலைமையை மேலும் மோசமாக்கவே உதவும் என மனித உரிமை செயற்பாட்டார்கள் தெரிவித்துள்ளனர்.

## அம்பாறை மாவட்ட ஊடகவியலாளர் போரத்தின் ஒன்றுகூடல்

மாளிகைக்காடு குறூப் நிருபர்

அம்பாறை மாவட்ட ஊடகவியலாளர் போரத்தின் மார்ச் மாத கூட்டமும் வருடாந்த ஒன்றுகூடமும் இன்று 26 ஆம் திகதி சனிக்கிழமை மாலை 5 மணிக்கு பொத்துவில் புழுவேவ் ஹோட்டலில் இடம்பெறுகிறது. போரத்தின் தலைவர் கலாபுசணம் எம்.ஏ.பகுர்தீன் தலைமையில் இடம்பெறவுள்ள மேற்படி நிகழ்வில் இவ்வருடம் மேற்கொளளவுள்ள நிகழ்வுகள் மீளாய்வு செய்யப்படுவதுடன் பொத்துவில், செங்காமம், கோமாரி பிரதேச மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் சம்பந்தமாகவும் நேர்காணல்களும் இடம்பெறுவுள்ளன.


இலங்கை சனநாயக சோஷலிச குடியரசின் அரசாங்கம்

**விலைமனுக்களுக்கான அழைப்பு (IFB)**

கரும்பு, சோளம், மரமுந்திரிகை, மிளகு, கறுவா, கராம்பு, வெற்றிலை உள்ளிட்ட சிறு தோட்ட பயிர்ச் செய்கை அபிவிருத்தி, அவை சார்ந்த தொழில்கள் மற்றும் ஏற்றுமதி மேம்பாட்டு இராஜாங்க அமைச்சு

**வரையறுக்கப்பட்ட லங்கா சீனி (தனியார்) நிறுவனம்**

**2022 ஆம் ஆண்டுக்காக வாகன பழுது பார்த்தலுக்கான தேசிய போட்டிரீதியான விலைமனு**

பெலவத்த பிரிவுக்கு 2022ஆம் ஆண்டுக்காக வாகனம் பழுதுபார்த்தலுக்காக ஆர்வமுடைய தரப்புகளிடம் இருந்து வரையறுக்கப்பட்ட லங்கா சீனி (தனியார்) நிறுவனத்தின் திணைக்கள பெறுகைக் குழு (DPC), தலைவரினால் முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் இத்தால் கோரப்படுகின்றன.

1. ஒவ்வொரு விலைமனு ஆவணத்திற்காகவும் மீளளிக்கப்படாத கட்டணமாக 15,000.00 இ. ரூபாவை செலுத்தி 2022 ஏப்ரல் 20 ஆம் திகதி வரை வேலை நாட்களில் 9.00 மணி தொடக்கம் 15.00 மணி வரை வரையறுக்கப்பட்ட லங்கா சீனி (தனியார்) நிறுவனம், இல. 27, மெல்போர்ன் ஒழுங்கை, கொழும்பு 04 என்ற முகவரிக்கு எழுத்துமூல விண்ணப்பம் ஒன்றை சமர்ப்பித்து விலைமனு ஆவணங்களின் முழுமையான தொகுதி ஒன்றை விலைமனுதாரர்களால் கொள்வனவு செய்ய முடியும். ரொக்கப்பணம் மூலம் கட்டணம் செலுத்தப்படல் வேண்டும்.

| தொ./ இல. | வாகனம் | வாகன இல. | தேவையான இயந்திரங்கள் | விலைமனு பிணை | கேள்விமனு குறிப்பு |
|---|---|---|---|---|---|
| 01 | Land Cruiser (Mark ii) Jeep 4 WD இன் பழுதுபார்த்தல் | 61-0064 | 01 | 165,000.00 | PR 6363 |
| 02 | Tusker Super இன் பழுதுபார்த்தல் | UP GG-9667 | 01 | 165,000.00 | PR 6367 |
| 03 | Jeep 4 WD இன் பழுதுபார்த்தல் | 32-1349 | 01 | 165,000.00 | PR 6364 |
| 04 | Motor Lorry ( Truck Loader Cane) இன் பழுதுபார்த்தல் | 43-9173 | 01 | 165,000.00 | PR 6368 |
| 05 | Hiace Van இன் பழுதுபார்த்தல் | 63-0038 | 01 | 165,000.00 | PR 6366 |
| 06 | Serena இன் பழுதுபார்த்தல் | 59-9839 | 01 | 165,000.00 | PR 6365 |

2. விலைமனுதாரர் விலைமனு ஆவணங்களுடன் மீளளிக்கப்படாத வைப்பு ரசீதை இணைத்தல் வேண்டும். அவ்வாறு இணைக்கத் தவறினால் விலைமனு நிராகரிக்கப்படும்.
3. விலைமனுக்களை 2022 ஏப்ரல் 21 ஆம் திகதி 14.00 மணி தாமதிக்காது தலைவர், திணைக்கள பெறுகைக் குழு, வரையறுக்கப்பட்ட லங்கா சீனி (தனியார்) நிறுவனம், இல. 27, மெல்போர்ன் ஒழுங்கை, கொழும்பு 04 என்ற முகவரிக்கு கிடைப்பதற்கு முத்திரை பொறிக்கப்பட்ட கடித உறையில் கைகளால் கொண்டுவந்து சேர்ப்பது, விரைதூதர் மூலம் அனுப்ப வேண்டும் என்பதோடு கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் ''குறிப்பு இலக்கத்துடன் 2022 ஆம் ஆண்டுக்கு வாகனம் பழுதுபார்த்தலுக்கான கேள்விமனு'' என்று தெளிவாக குறிப்பிடுதல் வேண்டும். அதன் பின் விலைமனுக்கள் உடன் திறக்கப்படும். விலைமனுக்களை திறக்கும் நிகழ்வில் விலைமனுதாரர்கள் அல்லது அவர்தம் அதிகாரம் பெற்ற பிரதிநிதிகள் பங்கேற்கலாம். தாமதிக்கும் விலைமனுக்கள் ஏற்கப்படமாட்டாது. பெறுகைக் குழுவின் முடிவு இறுதியானதாகும்.
4. அனைத்து விலைமனுக்களும் 165,000.00 இ.ரூபாவை (ஒரு இலட்ச்சத்து அறுபத்து ஐந்தாயிரம் மாத்திரம்) ''விலைமனு பிணையை'' கொண்டிருத்தல் வேண்டும் என்பதோடு மதிப்பிடப்பட்டுள்ள மொத்த செலவு (6 எண்ணிக்கை) 65 மில்லியன் இ. ரூபாவாகும்.
5. ஆர்வமுடைய விலைமனுதாரர்கள் வரையறுக்கப்பட்ட லங்கா சீனி (தனியார்) நிறுவன - பெறுகை முகாமையாளரிடம் இருந்து மேலதிக விபரங்களை பெறலாம் (தொ. +94 11 2505558, கைபேசி + 94 077 0103359, தொலைநகல் +94 11 2500674, (மின்னஞ்சல்: mpm_sev@lankasugar.lk)

**தலைவர் - திணைக்கள பெறுகைக் குழு**
**வரையறுக்கப்பட்ட லங்கா சீனி (தனியார்) நிறுவனம்**
**இல. 27, மெல்போர்ன் ஒழுங்கை, கொழும்பு 04.**






பொலன்நறுவை மஜீதிய்யா மகளிர் அரபுக் கல்லூரியின் 3 ஆவது பட்டமளிப்பு விழா ஞாயிற்றுக்கிழமை கல்லூரி மண்டபத்தில் வெகுவிமர்சையாக நடைபெற்றது.இதன் போது விசேட பேச்சாளராகக் கலாநிதி அஷ் ஷேய்க்ஹ் ஏ. அஸ்வர் அஸாஹிம் சொற்பொழிவாற்றினார். (படம்: மாத்தளை சுழற்சி நிருபர்)

## மூதூர்,தோப்பூர்,சம்பூர் பிரதேச விவசாயிகளுக்கு சேதன பசளை தொடர்பான கருத்தரங்கு





இலங்கை இராணுவத்தின் கட்டைபரிச்சான் படைப் பிரிவு 223 இன் தலைமையில் மூதூர்,தோப்பூர்,சம்பூர் விவசாயிகளுக்கு சேதன பசளை தொடர்பான கருத்தரங்கு மூதூர் பிரதேச செயலகத்தில் வியாழக்கிழமை (24) நடைபெற்றது.இந்நிகழ்வில் மக்கள் தொடர்பாடல் அபிவிருத்தி இராணுவ உத்தியோகத்தர் கேணல் சுபசிங்க, ஜனநாயக இடதுசாரி முன்னணியின் திருகோணமலை மாவட்ட மகளிர் அணித் தலைவி றைஷா மகறூப், மூதூர் வர்த்தக சங்கத் தலைவர் நஸீர் ஹஸன் பஷ்ரி (நஜா) ஆகியோருடன் விவசாய அபிவிருத்தி உத்தியோகத்தர்கள்,பிரதேச விவசாயிகள் என பலரும் கலந்து கொண்டனர்.

## கிராமிய மாணவ அபிவிருத்தி அறக்கட்டளையின் இசை நிகழ்ச்சி; இதமான இசை இரவு

கிராமிய மாணவர்களின் முன்னேற்றத்தைக் கருத்திற் கொண்டு செயற்படும் அமைப்பு கிராமிய மாணவ அபிவிருத்தி அறக்கட்டளை ஆகும்.

இந்த கிராமிய மாணவ அபிவிருத்தி அறக்கட்டளையின் அபிவிருத்திக்காக அதிபர் கே. அசோகனுடன் நம்நாட்டு கலைஞர்கள் இணைந்து வழங்கும் இதமான இசை இரவு நாளை 27ஆம் திகதி மாலை 6.30 மணிக்கு கொழும்பு 11, ஸ்ரீ கதிரேசன் வீதியிலுள்ள கதிரேசன் மண்டபத்தில் இடம்பெறவுள்ளது. அதிபர் கே. அசோகனுடன் இலங்கையிலுள்ள பாடக, பாடகிகளும் இதில் இணைந்து பாடவுள்ளனர்.

டீ. மகேந்திரன் குருசாமி, எம். பவானி, ஏ. எல். சுவர்ணிய பிரசாத், ஏ. சுலக்சன், கே. நரேஸ் ஆகியோர் இங்கு பாடல்கள் பாடவுள்ளனர்.

## கம்பளை முத்துமாரி அம்மன் ஆலய தேர்த்திருவிழா





கம்பளை ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயத்தின் வருடாந்த மாசிமக மஹோற்சவ தேர்த்திருவிழாவின் போது அம்பாள் அலங்கார தேரில் வெளிவீதி உலா வருவதையும் சிறுமிகளின் கும்மி நடனம் இடம்பெறுவதையும் நிகழ்வில் கலந்து கொண்டவர்களையும் படங்களில் காணலாம். (நாவலப்பிட்டி சுழற்சி நிருபர் டி.வசந்தகுமார்)

## வரணி, தாவளை, இயற்றாளை பத்திரகாளி வீரபத்திரர் ஆலய வருடாந்த திருவிழா







வரணி, தாவளை, இயற்றாளை பத்திரகாளி வீரபத்திரர் ஆலய வருடாந்த திருவிழா அண்மையில் நடைபெற்றது.


# INVITATION FOR BIDS (IFB)

## PUTHUKKUDIYIRUPPU PRADESHIYA SABHA, MULLAITIVU DISTRICT

## LOCAL DEVELOPMENT SUPPORT PROJECT (LDSP)

## Performance Transfer - (PT1)

## Strengthening the Capacity of Local Authority

01. The Democratic Socialist Republic of Sri Lanka has received a loan from the World Bank (WB) towards the cost of Local Development Support Project (LDSP), and intends to apply part of the proceeds of this loan to payments under the Contract for **PURCHASING & INSULATION OF SOLAR PANELS**.
02. The Chairman, Provincial Project Procurement Committee (PPPC) on behalf of the Puthukkudiyiruppu Pradeshiya Sabha now invites sealed bids from eligible and qualified bidders for **PURCHASING & INSULATION OF SOLAR PANELS** as described below.

| No. | Contract No. | Contract Name | Tentative Estimated Cost (Rs. Mn) | Contract Period |
|---|---|---|---|---|
| 01 | LDSP/NP/MU/PTKPS/PT/2022/01 | PURCHASING & INSULATION OF SOLAR PANELS | 4.91 | 45 Days |

03. Bidding will be conducted through **National Competitive Bidding (NCB)** procedure.
04. Qualification requirements include: possessing minimum 3 years' experience in selling and having island wide maintenance in the particular brand and field.
05. Qualification requirements are indicated in Section 5 (Bidding Data and Contract Data) of the Bidding document.
06. Interested bidders may obtain further information from **Chairman, Puthukkudiyiruppu Pradeshiya Sabha, A35 Road, Puthukkudiyiruppu, Mullaitivu** (T.P No: 0212290847, 0212291023 Fax No: 0212061640) and inspect the bidding documents at the address given below from **28th March 2022** until **25th April 2022** on normal working days.
07. A complete set of Bidding Documents in English language may be purchased by interested bidders on submission of a written application to the **Chairman, Puthukkudiyiruppu Pradeshiya Sabha, A35 Road, Puthukkudiyiruppu, Mullaitivu** from **28th March 2022** until **25th April 2022** between **09:00 Hrs and 15:00 Hrs** on normal working days upon payment of a non-refundable fee of **Two Thousand Rupees (Rs. 2,000.00).** The method of payment will be by cash.
08. Bids shall be delivered in duplicate to the address below at **Chairman, Local Authority Procurement Committee, Puthukkudiyiruppu Pradeshiya Sabha, A35 Road, Puthukkudiyiruppu, Mullaitivu** at or before **14.00 Hrs on 25th April 2022**. Late bids will be rejected. Bids will be opened soon after closing in the presence of the bidders' representatives who choose to attend.
09. Bids shall be valid up to **11th July 2022.** All bids shall be accompanied by a Bid Security of Rs.100,000.00. Bid Security shall be valid up to **08th August 2022.**
10. A pre-bid meeting will be held at 10.00 Hrs on **19th April 2022 at Puthukkudiyiruppu Pradeshiya Sabha, A35 Road, Puthukkudiyiruppu, Mullaitivu.**

**Chairman,**
**Local Authority Procurement Committee (LAPC)**
**Puthukkudiyiruppu Pradeshiya Sabha,**
**A35 Road, Puthukkudiyiruppu,**
**Mullaitivu.**

25.03.2022.

மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி விவகாரங்கள் இராஜாங்க அமைச்சு

## வளர்ச்சி பெறும் பிராந்தியங்களில் JICA நிதியிடப்பட்ட கிராமிய உட்கட்டமைப்பு அபிவிருத்தி செயற்றிட்டம் (RIDEP) Loan No.: SL-P116

**செயற்றிட்ட அமுலாக்கல் அலகு, ஊவா மாகாணம்**
**செயற்றிட்ட அமுலாக்கல் அலகு, கிழக்கு மாகாணம்**
**செயற்றிட்ட அமுலாக்கல் அலகு, வடமத்திய மாகாணம்**

**கேள்வி இலக்கம்: PL/5/W/RIDEP/2022/03-02**

# விலைமனுக்களுக்கான அழைப்பு – படிநிலை 2

1. வளர்ச்சிபெறும் பிராந்தியங்களில் சர்வதேச ஒத்துழைப்பிற்கான ஜப்பான் நிறுவனத்திடமிருந்து (JICA) இலங்கை சனநாயக சோசலிச குடியரசானது வளர்ச்சிபெறும் பிராந்தியங்களில் கிராமிய உட்கட்டமைப்பு செயற்றிட்ட ஆகுசெலவிற்காக கடனொன்றைப் பெற்றுள்ளது. இக்கடன் பெறுகைகளின் பகுதியொன்றை பின்வரும் கிராமிய வீதிகள் மேம்படுத்தல் மற்றும் குடி நீர் பணி ஒப்பந்தத்தின் கீழான தகுதியுள்ள பணக்கொடுப்பனவுகளுக்காக செலவழிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.
   - 1.1 ஊவா மாகாணத்தின் பதுளை மாவட்டம், வெலிமடை, பண்டாரவளை மற்றும் ஹப்புத்தளை பிரதேச சபைகளிலுள்ள ஹிங்குறுகமுவ வீதி (வெலிமடை - ஹப்புத்தளை வீதிக்கு அப்பால் - நீளம் 4.425 கி.மீ.), உடபேருவ வீதி வலையமைப்பு (நீளம் 0.975 கி.மீ.) மற்றும் ஜினானந்தகம வீதி (0.72 கி.மீ) வீதிகளின் மேம்படுத்தல் வேலைகள் - பொதி இல. SLP116/UP2/RR/2021/19
   - 1.2 கிழக்கு மாகாணத்தின் திருகோணமலை மாவட்டத்திலுள்ள மூதூர் பிரதேச செயலகப் பிரிவில் இத்திக்குளத்திலுள்ள (சகல குறுக்கு வீதிகள் சகிதம் பிரதான வீதி - மொத்த நீளம் 4.225 கி.மீ.) கொங்கிறீட் வீதிகளை நிர்மாணித்தல் மற்றும் நிறைவு செய்தல் (மீள் விலைக்கோரல்) - பொதி இல. SL-P116/EP2/RR/2021/15-R
   - 1.3 வடமத்திய மாகாணத்தின் அனுராதபுரம் மாவட்டம், திரப்பனே பிரதேச சபையிலுள்ள எதுன்கம வடக்கு மற்றும் தெற்கு உப-செயற்றிட்டப் பிரதேசத்திற்கு நீர் வழங்கல் முறைமையை நிர்மாணித்தல் - பொதி இல. SLP116/NCP/WS/2020/05
2. விலைமனுக்கோரலானது ஜப்பானின் ODA கடன்களின் கீழான பெறுகைக்கான ஏற்புடையதான வழிகாட்டிகளுக்கமைவாக நடைமுறை மூலம் நடாத்தப்படுவதுடன் கடன் உடன்படிக்கையில் வரையறுக்கப்பட்டவாறு தகுதியுள்ள வளநாடுகளின் அனைத்து விலைமனுதாரர்களும் இதில் பங்குபற்றலாம்.
3. ஒப்பந்தத்தை வழங்குவதற்காக, விலைமனு ஆவணங்களில் சுட்டிக்காட்டப்பட்டுள்ள சில தகுதித்தன்மை தகவுத்திறன்கள் மேற்குறிப்பிடப்பட்ட வீதி அபிவிருத்தி வேலைகள் மற்றும் எதுன்கம உப திட்டத்திற்கான நீர் வழங்கல் முறைமையை நிர்மாணித்தல் மற்றும் நிறைவு செய்தல் என்பவைகளை உள்ளடக்கிய மேற்குறிப்பிடப்பட்ட நிர்மாண வேலைகளுக்காக வேலை கொள்வோர் சார்பாக மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி விவகாரங்கள் இராஜாங்க அமைச்சின், அமைச்சு பெறுகைக் குழுவின் தலைவர், தகுதி மற்றும் தகைமை வாய்ந்த விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்களை இப்போது கோருகின்றார்.

| இல. | மாகாணம் | ஊவா மாகாணம் | கிழக்கு மாகாணம் | வடமத்திய மாகாணம் |
|---|---|---|---|---|
| 1. | விலைக்கோரல் பொதி இலக்கம்: | SLP116/UP2/RR/2021/19 | SL-P116/EP2/RR/2021/15-R | SLP116/NCP/WS/2020/05 |
| 2. | ஒப்பந்தக் காலம் | 12 மாதங்கள் | 12 மாதங்கள் | 14 மாதங்கள் |
| 3. | விலைமனுக்களின் செல்லுபடியாகும் காலம் | 2022-09-13ஆம் திகதி வரை | 2022-08-16ஆம் திகதி வரை | 2022-09-13ஆம் திகதி வரை |
| 4. | விலைமனுப் பிணை முறியின் பெறுமதி (இல. ரூபா) | 4.6 மில்லியன் ரூபா (2022-10-11ஆம் திகதி வரை செல்லுபடியாதல் வேண்டும்.) | 3.5 மில்லியன் ரூபா (2022-09-16ஆம் திகதி வரை செல்லுபடியாதல் வேண்டும்.) | 5.7 மில்லியன் ரூபா (2022-10-11ஆம் திகதி வரை செல்லுபடியாதல் வேண்டும்.) |
| 5. | மீளளிக்கப்படாத வைப்பு (இல. ரூபா) | 40,000.00 | 35,000.00 | 50,000.00 |
| 6. | தகுதித் தகவுத்திறன் | (i) பெருந்தெருக்கள் நிர்மாணத்திற்கான C-2 அல்லது அதற்கு மேற்பட்ட CIDA பதிவு மற்றும் செல்லுபடியாகும் CIDA பதிவுச் சான்றிதழின் பிரதி | (i) பெருந்தெருக்கள் நிர்மாணத்திற்கான C-3 அல்லது அதற்கு மேற்பட்ட CIDA பதிவு மற்றும் செல்லுபடியாகும் CIDA பதிவுச் சான்றிதழின் பிரதி | (i) நீர் வழங்கல் மற்றும் சாக்கடைக்கான C-2 அல்லது அதற்கு மேற்பட்ட CIDA பதிவு மற்றும் செல்லுபடியாகும் CIDA பதிவுச் சான்றிதழின் பிரதி |
| | | (ii) இலங்கையின் கம்பனிகளின் பதிவாளரினால் வழங்கப்பட்ட பதிவுச் சான்றிதழின் பிரதியொன்று<br>(iii) PCA3 படிவம் (கேள்வியின் சார்பாக முகவர், உப-முகவர், பிரதிநிதியாக பதிவுச் சான்றிதழ்) | | |
| 7. | வீதிகளின் பெயர் மற்றும் நீளம் (கி.மீ) | ஊவா மாகாணத்தின் பதுளை மாவட்டம், வெளிமடை, பண்டாரவளை மற்றும் ஹப்புத்தளை பிரதேச சபைகளிலுள்ள ஹிங்குறுகமுவ வீதி (வெளிமடை - ஹப்புத்தளை வீதிக்கு அப்பால் - நீளம் 4.425 கி.மீ.), உடபேருவ வீதி வலையமைப்பு (நீளம் 0.975 கி.மீ.) மற்றும் ஜினானந்தகம வீதி (0.72 கி.மீ) வீதிகளின் மேம்படுத்தல் வேலைகள் | கிழக்கு மாகாணத்தின் திருகோணமலை மாவட்டத்திலுள்ள மூதூர் பிரதேச செயலகப் பிரிவில் இத்திக்குளத்திலுள்ள (சகல குறுக்கு வீதிகள் சகிதம் பிரதான வீதி - மொத்த நீளம் 4.225 கி.மீ.) கொங்கிறீட் வீதிகளை நிர்மாணித்தல் மற்றும் நிறைவு செய்தல் | வடமத்திய மாகாணத்தின் அனுராதபுரம் மாவட்டம், திரப்பனே பிரதேச சபையிலுள்ள எதுன்கம வடக்கு மற்றும் தெற்கு உப-செயற்றிட்டப் பிரதேசத்திற்கு நீர் வழங்கல் முறைமையை நிர்மாணித்தல் |
| 8. | நிதியிடல் நிலைமை | கடந்த 3 வருடங்களில் வருடாந்த நிர்மாண சராசரி நிதிப்புரள்வு ஆகக் குறைந்தது 302 மில். இல. ரூபா | கடந்த 3 வருடங்களில் வருடாந்த நிர்மாண சராசரி நிதிப்புரள்வு ஆகக் குறைந்தது 290மில். இல. ரூபா | கடந்த 3 வருடங்களில் வருடாந்த நிர்மாண சராசரி நிதிப்புரள்வு ஆகக் குறைந்தது 405 மில். இல. ரூபா |
| 9. | நிதியிடல் வளங்கள் | ஆகக் குறைந்த திரவச் சொத்து தொகை 80 மில். இல. ரூபா (திரவச் சொத்து இந்தத் திட்டத்திற்காக வங்கி உத்தரவாதத்தின் வடிவத்தில் இருத்தல் வேண்டும்) அல்லது கடன் வசதிகள் | ஆகக் குறைந்த திரவச் சொத்து தொகை 77 மில். இல. ரூபா (திரவச் சொத்து இந்தத் திட்டத்திற்காக வங்கி உத்தரவாதத்தின் வடிவத்தில் இருத்தல் வேண்டும்) அல்லது கடன் வசதிகள் | ஆகக் குறைந்த திரவச் சொத்து தொகை 108 மில். இல. ரூபா (திரவச் சொத்து இந்தத் திட்டத்திற்காக வங்கி உத்தரவாதத்தின் வடிவத்தில் இருத்தல் வேண்டும்) அல்லது கடன் வசதிகள் |
| 10. | நிர்மாண அனுபவம் | கடந்த 7 வருடங்களில் திருப்திகரமாக பூர்த்தி செய்யப்பட்ட 150 மில். இல. ரூபாவிற்குக் குறையாத ஆகக் குறைந்தது 1 நிகரான ஒப்பந்தம் | கடந்த 7 வருடங்களில் திருப்திகரமாக பூர்த்தி செய்யப்பட்ட 110 மில். இல. ரூபாவிற்குக் குறையாத ஆகக் குறைந்தது 1 நிகரான ஒப்பந்தம் | கடந்த 10 வருடங்களில் ஆகக் குறைந்தது பின்வரும் கூறுகளை திருப்திகரமாக நிறைவு செய்திருத்தல்.<br>• HDPE குழாய்கள் வழங்குதல் மற்றும் பதித்தலில் ஆகக் குறைந்தது ஒரு ஒப்பந்தம் அல்லது இதற்கு நிகரான ஆகக் குறைந்தது 50 கி.மீ. நீளமான குழாய் ஒப்பந்தம்<br>• கட்டமைப்பு சிவில் வேலைகள், களஞ்சியக் கூறுகள், வசதிக் கட்டிட வேலைகள் மற்றும் தரை நீர்த்தேக்கம் மற்றும் Aerators, கடனமான வடிகட்டிகள், பீடன வடிகட்டிகள் உட்பட நீர் சுத்திகரிப்பு கூறுகள் உள்ளடங்கலாக ஆகக் குறைந்தது ஒரு ஒப்பந்தம்<br>• கட்டுப்பாட்டு பெனல்கள் சகிதம் நேரடி பம்பிகள் மற்றும் நீரில் அமிழ்ந்தியங்கும் பம்பிகள் உட்பட நீர் வழங்கல் மின்சார - இயந்திர உபகரணங்கள், VSD பம்பிகள், திரவ குளோரினேட்டர் முறைமைகள் மற்றும் அதனோடிணைந்த வேலைகள், முன்னுரிமை பகுதி ஒட்டோமேஷன் முறைமைகள் வழங்குதல், நிறுவுதல் உள்ளடங்கலான ஆகக் குறைந்தது ஒரு ஒப்பந்தம் மற்றும் ஒரு நாளைக்கு 500 கன மீற்றர் கொள்ளளவைக் கொண்ட வழக்கமான சுத்திகரிப்பு பொறித்தொகுதியை நிர்மாணித்தல் |
| 11. | விலைக்கோரல் முன்னோடிக் கூட்டம் மற்றும் தள விஜய திகதி மற்றும் நேரம் | 2022-05-04ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு விலைக்கோரல் முன்னோடிக் கூட்டத்தின் பின் தள விஜயம் பற்றி தீர்மானிக்கப்படும் | 2022-04-05ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு விலைக்கோரல் முன்னோடிக் கூட்டத்தின் பின் தள விஜயம் பற்றி தீர்மானிக்கப்படும் | 2022-05-04ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு விலைக்கோரல் முன்னோடிக் கூட்டத்தின் பின் தள விஜயம் பற்றி தீர்மானிக்கப்படும் |
| 12. | விலைக்கோரல் முன்னோடிக் கூட்டம் நடைபெறும் இடம் | RIEDP /செயற்றிட்ட அமுலாக்கல் அலகு அலுவலகம் (ஊவா மாகாணம்), 37/2, பண்டாரநாயக்க மாவத்தை, பதுளை. | RIEDP /செயற்றிட்ட அமுலாக்கல் அலகு அலுவலகம் (கிழக்கு மாகாணம்), EPC கட்டிடத்தொகுதி, கிண்ணியா வீதி, வரோதயா நகர், திருகோணமலை. | RIEDP /செயற்றிட்ட அமுலாக்கல் அலகு அலுவலகம் (வடமத்திய மாகாணம்), 3063, படிநிலை 3, புபுது மாவத்தை, தஹய்யாகம, அனுராதபுரம். |

**குறிப்பு**

**(I)** கூட்டுமுயற்சி போன்றவற்றுக்கான CIDA பதிவுத் தேவைப்பாடு தகுதித்தன்மை மற்றும் தகைமை தகவுத்திறன் என்பவற்றுக்கு 2.1.4 இலக்கமுடைய சரத்தை தயவுசெய்து பார்வையிடவும்.

**அட்டவணை (1)**

4. விலைமனுதாரர்கள் பின்வரும் அட்டவணையின் (2) பிரகாரம் 2022-03-28ஆம் திகதி முதல் 2022-04-18ஆம் திகதி வரையில் சாதாரண வேலை நாட்களில் விலைமனுக்கள் வழங்கப்படும். (1) அட்டவணையின் 5ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள மீளளிக்கப்படாத கட்டணம் மற்றும் பின்வரும் (2) அட்டவணையிலுள்ள முகவரிக்கு எழுத்து மூலமான வேண்டுகோள் ஒன்றைச் சமர்ப்பிப்பதன் பேரில் ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் முழுமையான விலைக்கோரல் ஆவணத் தொகுதியொன்றைக் கொள்வனவு செய்யலாம் என்பதுடன் விலைமனுக்களைப் பரீட்சித்தும் பார்க்கலாம்.

   விலைக்கோரல் ஆணங்களை கொள்வனவு செய்ய ஆர்வமுள்ளவர்கள் மற்றும் தவிர்க்கமுடியாத நிலைமை காரணமாக (கொவிட் 19 தொற்று நிலைமை) மீளளிக்கப்படாத கட்டணத்தை பின்வரும் (2) அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள வங்கிக் கணக்கிற்கு வைப்புச் செய்ததன் பின் விலைமனுக்கள் பெற்றுக்கொள்ள வர முடியாதவர்களுக்கு அனுப்பும் PDF வடிவிலான விலைக்கோரல் ஆவணங்களைப் பெற்றுக்கொள்வதற்கு பின்வரும் அட்டவணையில் (2) தரப்பட்டுள்ள இயைபுடைய மின்னஞ்சல் முகவரிக்கு டிஜிட்டல் கொடுப்பனவு பற்றுச்சீட்டை மின்னஞ்சலிடவும்.

| அலுவலகத்தின் பெயர் | அலுவலக முகவரி | தொலைபேசி இல. | தொலைநகல் இல. | மின்னஞ்சல் முகவரி | வங்கி மற்றும் கணக்கிலக்கம் | விலைக்கோரல் பொதி இலக்கம் |
|---|---|---|---|---|---|---|
| RIDEP – திட்ட அமுலாக்கல் அலகு | இல. 157A, கின்சி வீதி, கொழும்பு -8 | 011-2667748 | 011-2667768 | ridep@pclg.gov.lk | இலங்கை வங்கி, யூனியன் பிளேஸ் கிளை - கணக்கிலக்கம் 0007040873 | சகல விலைக்கோரல் பொதிகளும் |
| RIDEP – திட்ட அமுலாக்கல் அலகு (ஊவா மாகாணம்) | இல. 37/2, பண்டாரநாயக்க மாவத்தை, பதுளை. | 055-2232490 | 055-2232490 | ridepuva@gmail.com | இலங்கை வங்கி, விசேட தரக் கிளை, பதுளை கணக்கிலக்கம் 83130799 | SLP116/UP2/RR/2021/19 |
| RIDEP – திட்ட அமுலாக்கல் அலகு (கிழக்கு மாகாணம்) | EPC கட்டிடத் தொகுதி, கிண்ணியா வீதி, வரோதயா நகர், திருகோணமலை. | 026-2224470 | 026-2224475 | ridepep@gmail.com | இலங்கை வங்கி, விசேட தரக் கிளை, திருகோணமலை கணக்கிலக்கம் 83101385 | SL-P116/EP2/RR/2021/15-R |
| RIDEP – திட்ட அமுலாக்கல் அலகு (வடமத்திய மாகாணம்) | இல. 3063, புபுது மாவத்தை, தஹய்யாகம, அனுராதபுரம் | 025-2222875 | 025-2222875 | ridep.piuncp@gmail.com | இலங்கை வங்கி, விசேட தரக் கிளை, அனுராதபுரம் கணக்கிலக்கம் 83124457 | SLP116/NCP/WS/2020/05 |

**அட்டவணை (2)**

5. விலைமனுதாரர்களுக்கான பணிப்புரைகள் மற்றும் ஒப்பந்தத்தின் பொதுவான நிபந்தனைகளிலுள்ள ஏற்பாடுகளே சிறு வேலைகளின் பெறுகைக்கான 2013 ஏப்ரல், 1.1 பதிப்பின் ஜப்பானிய ODA கடன்களின் கீழ் நியமமாக்கப்பட்ட விலைமனுக்கோரல் ஆவணங்களின் ஏற்பாடுகளாகும்.
6. மூலப் பிரதி மற்றும் நகல் பிரதியென வெவ்வேறான கடித உறைகளில் இட்டு முத்திரைக் குறி பொறித்து அதன் இடதுபக்க மேல் மூலையில் ''.............. பொதிக்கான விலைக்கோரல்'' (மேற்படி 1ஆம் இலக்க அட்டவணையின் பிரகாரம்) எனக் குறிப்பிட்டு மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி விவகாரங்கள் இராஜாங்க அமைச்சு, நிதிப் பிரிவு, இல. 330, யூனியன் பிளேஸ், கொழும்பு-02 எனும் முகவரிக்கு பதிவுத் தபால் மூலம் அல்லது மேற்படி அமைவிடத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிட்டு 2022-04-19ஆம் திகதி பி.ப. 2.00 மணி அல்லது அதற்கு முன் கிடைக்கச் செய்தல் வேண்டும் என்பதுடன் சகல விலைமனுக்களுடனும் 01ஆம் இலக்க அட்டவணையின் 3ஆம் பிரிவின் பிரகாரம் விலைமனுப் பிணையொன்று இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும். விலைமனுப் பிணை முறியானது இலங்கை மத்திய வங்கியினால் அங்கீகரிக்கப்பட்ட மற்றும் பதிவு செய்யப்பட்ட வங்கியினால் வழங்கப்பட்ட நிபந்தனைகளற்ற உத்தரவாதமாகவிருத்தல் வேண்டும்.
7. விலைமனுக்கள் கொழும்பு-02, இல. 330, யூனியன் பிளேஸ், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி விவகாரங்கள் இராஜாங்க அமைச்சின் நிதிப் பிரிவிற்கு சமுகம் தந்துள்ள விலைமனுதாரர்கள் அல்லது அவர்களின் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகளின் முன்னிலையில் முடிவுறுத்தப்பட்டு அதன்பின் உடன் திறக்கப்படும்.

**தலைவர், அமைச்சுப் பெறுகைக் குழு,**
**மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி விவகாரங்கள் இராஜாங்க அமைச்சு,**
**இல. 330, யூனியன் பிளேஸ், கொழும்பு 02.**
**தொலைபேசி: 011-2399735 தொலைநகல்: 011-2329725**
**மின்னஞ்சல்: secretary@pclg.gov.lk**
**திகதி: 2022-03-26**

## விஷேட அற்றோணி தத்துவத்தை இரத்துச் செய்தல்

இலக்கம் 142/1, உடுலகும்புர, தன்துரே, தபால் பத்கொட இல் வசிக்கும் வீரசேகர முதியன்சேலாகே துளசி குமாரி வீரசேகர அல்லது கன்னிப் பெயர் துளசி குமாரி ஜயசுந்தர (தே.அ.அ. இல: 866161623V மற்றும் P.P.No. 659358442) ஆகிய நான்,
கண்டி பிரசித்த நொத்தாரிசு திருமதி மீனு உபர்னா அமரதுங்க என்பவரினால் 2016 பெப்ரவரி 10ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்ட இலக்கம் 42 உடையதும் 2016.03.02ஆம் தகிதி பதிவு செய்யப்பட்டதும், இலக்கம் 142/1, உடுலகும்புர, தன்துரே தபால் பத்கொட இலங்கை இல் வசிக்கும், கியந்துவகே சுமித்ரா (தே.அ.அ. இல. 528044409V) என்பவருக்கு என்னால் வழங்கப்பட்டதுமான விஷேட அற்றோணி தத்துவமானது உடன் அமுலுக்கு வரும் வகையில் இரத்துச் செய்து இல்லாதொழிக்கப்படுகின்றதெனவும் இதன் பின்னர் என்சார்பில் அவர் மேற்கொள்ளும் எந்தவித நடவடிக்கைகளிற்கும் நான் பொறுப்புதாரியல்ல எனவும் இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசிற்கும் பொது மக்களுக்கும் இத்தால் அறிவித்துக் கொள்கின்றேன்.
**வீரசேகர முதியன்சேலாகே துளசி குமாரி வீரசேகர அல்லது (கன்னிப்பெயர்) துளசி குமாரி ஜயசுந்தர**

SUNDAY OBSERVER adz it's what you want
தினகரன் வாரமஞ்சரி

Promotional Rates for Classified Advertisements (Only 15 Words)

| Any Single Newspaper | Two Newspapers | Three Newspapers |
|---|---|---|
| ரூ. 500/- (Except Thinakaran Varamanjari) | ரூ. 700/- (Except Thinakaran Varamanjari) | ரூ. 850/- |

- ISLANDWIDE -

MONARAGALA
MONARAGALA ........ 077 6 565 653
SRI RAMYA STORES., NO 19., 20, MONARAGALA.

MATARA
MATARA ........ 047 2 230 093
NILMINI STORSE - NO 69., DHARMAPALA MAWATHA, MATARA

ANURADAPURA
THABUTTEGAMA ........ 025 2 276 431
MUTHUKUDA PAPER CORNER - No 86, Thambuttegama

ANURADHAPURA ........ 025 2 221 411
MAHAJANA BOOK SHOP - Anuradhapura

ANURADHAPURA ........ 025 2 222 806
SATHSARA BOOK SHOP - 4D, KADAPANAHA, ANURADHAPURA

ANURADHAPURA ........ 025 2 222 575

RATHNAPURA
RATHNAPURA ........ 071 2 900 35
NO 16, CHURCH ROAD, RATNAPURA

RATHNAPURA ........ 045 2 223 883
LAKE HOUSE ADVERTISING CENTER - NO 88, MAIN STREET, RATNAPURA

HAMBANTHOTA
MIDDENIYA ........ 047 2 27 245
SOMASIRI STORES - HUNGAMA ROAD MIDDENIYA.

TANGALLE ........ 047 2 240 402
D.W.TRADERS - NO 158., MATARA ROAD., TANGALLE

HAMBANTOTA ........ 077 0 051 975
MISRIYA STORSE - NO 32 MAHAJANA POLA., HAMBANTOTA

AMBALANTOTA ........ 047 2 223 152
SUMITHRA TRADE CENTER - NO 11, MAIN STREET., AMBALANTOTA.

TISSAMAHARAMA ........ 047 2 239 088
T.D. MADANAYAKE & COMPANY (PVT) LTD - MAIN STREET, TISSAMAHARAMA

BATTICALO
KATHTHANKUDY ........ 077 7 435 566
A.L.M. UWAIS, OLD POST OFFICE BUILDING., KATHTHANKUDY.

BATTICALA ........ 065 2 226 034
PRIYA STORES, N.K. RATHNASINGHAM, NO. 01, MARKET ROAD, BATTICALOA.

POLONNARUWA
POLONNARUWA ........ 077 9 627 542
PARAKUM BOOK SHOP - HOSPITAL JUNCTION, POLONNARUWA.

KADURUWELA ........ 076 4 201 263
GALLE CITY STORES - KADURUWELA, POLONNARUWA

KANDY
HIDAGALA ........ 081 3 813 666
ANURA STORES - DOLUWA ROAD., HINDAGALA.

KANDY ........ 081 2 222 780
JAYAKODY TRADERS (PVT) LTD - NO.229/A, PERADENIYA ROAD, KANDY.

GAAMPOLA ........ 081 2 354 994
UMASA CENTER - NO.14., STATION ROAD., GAMPOLA.

NAWALAPITIYA ........ 077 3 039 996
CHEAP SIDE BOOK SHOP - NO 46, GAMPOLA ROAD, NAWALAPITIYA

MATHALE
MATALE ........ 066 5 671 304
MALAKA TRADERS (PVT) LTD - NO.55-57., MAIN STREET., MATALE

NUWARA ELIYA
N.ELIYA ........ 052 2 234 660
NO 06., NEW MARKET BUILDING., NUWARA ELIYA

classified@lakehouse.lk
011 2 429 342 | 011 2 429 343
Fax - 011 2 429 375 / 011 2 429 380

# பெறுகை அறிவித்தல்

**இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம்**
**எரிபொருள் சக்தி அமைச்சு**
**யாழ்ப்பாண விமானநிலையத்திற்கு 15,000 லீற்றர் கொள்ளளவுள்ள இரண்டு விமானநிலைய எரிபொருள் நிரப்பும் சாதனங்களை வடிவமைத்தல் மற்றும் வழங்கல்**

**B/25/2022**

யாழ்ப்பாண விமானநிலையத்திற்கு 15,000 லீற்றர் கொள்ளளவுள்ள இரண்டு விமானநிலைய எரிபொருள் நிரப்பும் சாதனங்களை வடிவமைத்து மற்றும் வழங்குவதற்காக சர்வதேச போட்டி ரீதியிலான விலைமனுக்களை இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபன திணைக்கள பெறுகைக் குழுத் தலைவர் அழைக்கின்றார்.

ஒப்பந்தத்தை பெறுவதற்கான தகுதிக்காக, சித்திகரமான விலைமனுதாரர் அபகீர்த்தியானோர் பட்டியலில் சேர்க்கப்படாதவராகவும் விலைமனுக்கோரல் ஆவணத்தில் கூறப்பட்டுள்ள தகுதித்தன்மை மற்றும் தகைமை தகவுத்திறனுக்கு அமைந்தொழுகலும் வேண்டும்.

கொவிட்-19 தொற்று காரணமாக விலைமனுதாரர்கள் http://ceypetco.gov.lk/public-tenders என்ற இபெகூ இன் இணையதளத்திலிருந்து விலைமனுக்கோரல் ஆவணத்தை பதிவிறக்கம் செய்யலாம். விலைமனுதாரர் மீளளிக்கப்படாத கட்டணமாக 20,000 ரூபாவை (அதாவது 18,400 + 8% பெசேவ) மக்கள் வங்கி தலைமையலுவலகத்தின் இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனத்தின் 004100110208633 பெயரிலுள்ள கணக்கிலக்கத்திற்கு செலுத்தப்பட்டு பணக்கொடுப்பனவு பற்றுச் சீட்டானது விலைமனுவுடன் இணைக்கப்படல் வேண்டும்.

அனைத்து விலைமனுக்களும் 1,600,000 ரூபா பெறுமதியான விலைமனுப்பிணையொன்றுடன் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

விலைமனுக்கள் 2022.05.06 ஆம் திகதியன்று பி.ப.2 மணிக்கு மூடப்பட்டு கீழே வழங்கப்பட்டுள்ள முகவரியானது இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபன, பெறுகை மற்றும் களஞ்சியசாலைகளுக்கான முகாமையாளரின் அலுவலகத்தில் விலைமனுக்களின் மூடும் நேரத்தின் பின்னர் உடனடியாகவே திறக்கப்படும். விலைமனுதாரர்கள் அல்லது அவர்களின் அதிகாரம் பெற்ற பிரதிநிதிகள் விலைமனுக்களை திறக்கும் வேளையில் சமுகமளிக்கலாம். 1987 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டத்தின் பிரகாரம் வளமுள்ள விலைமனுதாரர்கள் https://eroc.drc.gov.lk என்ற இணையதளத்தின் வழியாக கம்பனிகள் பதிவாளர் திணைக்களத்தில் பதிவு பெற்று அவர்களின் விலைமனுக்களுடன் பிசிஎ-3 சான்றிதழை சமர்ப்பித்தல் வேண்டும்.

விலைமனுக்கள் பதிவுத் தபாலில் அனுப்பப்படலாம் அல்லது கொழும்பு-09, டொக்டர் த சில்வா மாவத்தை, 1 ஆம் மாடி, இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபன பெறுகை மற்றும் களஞ்சியசாலைகளுக்கான முகாமையாளரின் அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் சேர்க்கப்படலாம்.

பெறுகை மற்றும் களஞ்சியசாலைகளுக்கான முகாமையாளரின் அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம், 1 ஆம் மாடி, இல. 609, டொக்டர் டனிஸ்டர் த சில்வா மாவத்தை,

தெளிவுறுத்தல்கள் ஏதுமிருப்பின் 011 5455331/ 011 5666225 என்ற தொலைபேசி இலக்கங்களூடாக அல்லது 011-5455424 என்ற தொலைநகல் இலக்கத்தினூடாகவும் பெறுகை மற்றும் களஞ்சியங்களுக்கு பொறுப்பான முகாமையாளரிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

**தலைவர்,**
**திணைக்கள பெறுகைக் குழு,**
**முகாமையாளர் (பெறுகை மற்றும் களஞ்சியசாலைகள்) மே/பா.,**
**இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம்,**
**1 ஆம் மாடி, இல. 609, டொக்டர் டனிஸ்டர் த சில்வா மாவத்தை,**
**கொழும்பு-09, இலங்கை.**

# பெறுகை அறிவித்தல்

## களனி பிரதேச சபை

## களனி பிரதேச சபைக்குச் சொந்தமான கீழே அட்டவணையில் குறிப்பிடப்படும் சொத்துக்களை குத்தகைக்கு விடுவதற்கான கேள்வி அழைப்பு

களனி பிரதேச சபைக்குச் சொந்தமான கீழ்க்காணும் சொத்துக்களை குத்தகைக்கு விடுவதற்காக கேள்வி விண்ணப்பங்கள் 2022.04.18 பி.ப. 3.00 வரை களனி பிரதேச சபையின் தலைமையகத்தில் பெற்றுக்கொள்ள முடிவதுடன் பூர்த்தி செய்யப்பட்ட கேள்வி விண்ணப்பங்கள் 2022.04.19 பி.ப. 10.00 வரை ஏற்கப்படும்.

கேள்விகள் சமர்ப்பிக்கும் மாதிரிப் பத்திரங்கள் விநியோகிக்கப்படுவது, எழுத்துமூல வேண்டுதலுடன் மீளளிக்கப்படாத ரூபா 3000.00 படிவக் கட்டணம் மற்றும் கீழே தரப்பட்டுள்ள கோரப்படும் சொத்துடன் சம்பந்தப்பட்ட மீளளிக்கப்படும் கேள்விப் பிணை வைப்பு கட்டணத்தை செலுத்திப் பெற்றுக்கொண்ட பற்றுச் சீட்டை சமர்ப்பித்த பின்னர் மட்டுமே.

கேள்வி விண்ணப்பங்கள் இரு பிரதிகளுடன் விநியோகிக்கப்படுவதுடன் அவ் இரு பிரதிகளையும் மூலப் பிரதி மற்றும் நகல் பிரதியெனக் குறிப்பிட்டு, வேறுவேறாக முத்திரையிட்டு மீண்டும் அவ் உறைகளை ஒரு உறையில் இட்டு, பொறியிட்டு செயலாளர், களனி பிரதேச சபை என்ற முகவரிக்கு 2022.04.19ம் திகதி மு.ப. 10.00 இற்கு முன் கிடைக்குமாறு பதிவுத் தபாலில் அனுப்பலாம் அல்லது குறித்த நேரத்திற்கு முன்பு களனி பிரதேச சபையின் தலைமையகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்வி உள்ளிடும் பெட்டியில் உள்ளிடலாம். கேள்விதாரர்களால் கேள்வி உள்ளிடும் உறையின் இடது பக்க மேல் மூலையில் கேள்வி விடயத்தையும் குறிப்பிடுதல் வேண்டும். குறைந்தபட்ச கேள்விக்கு குறைவாக சமர்ப்பிக்கப்படும் கேள்விகள் நிராகரிக்கப்பட்டு பிணைத் தொகை சபைக்கு உரியதாக்கப்படும்.

2022.04.19 மு.ப. 10.00 வரை கேள்விகள் ஏற்றுக்கொள்ளல் முடிவடைந்தவுடன் கேள்விகள் திறக்கப்படல் இவ் அலுவலகத்தில் இடம்பெறும். அவ்வேளையில் கேள்விதாரர் அல்லது கேள்விதாரரால் அதிகாரமளிக்கப்படும பிரதிநிதியொருவருக்கு சமுகமளிக்கலாம்.

சித்திகரமான கேள்விதாரர்களுக்கு கேள்விகள் ஏற்கப்பட்டதாக தெரிவித்து அனுப்பியதன் பின்பு கேள்விதாரர்களால் அங்கீகரிக்கப்பட்ட கேள்வித் தொகையில் மாதாந்த வாடகை தொகைபோன்று 03 மாத தொகையை இவ் அலுவலகத்தில் வைப்புச் செய்து உடன்படிக்கை ஒன்றுக்கு உற்படுத்தல் வேண்டும். அவ்வாறே அரசிற்கு செலுத்த வெண்டிய குத்தகை தொகையையும் செலத்துதல் வேண்டும்.

மேலும், கேள்விதாரர்களால் களனி பிரதேச சபை மூலம் விதிக்கப்பட்டுள்ள மற்றும் எதிர்வரும் காலங்களில் விதிக்கப்படும் இடைக்கால யாப்பு மற்றும் நிபந்தனைகளுக்கும் உற்படுத்தல் வேண்டும். கேள்வியை ஏற்றுக்கொள்ளல் பற்றிய இறுதித் தீர்மானம் களனி பிரதேச சபை கேள்விச் சபைக்கு உரியது.

அவ்வாறே கீழ்க்கானும் குத்தகை வழங்கப்பட்ட பின்பு சபையின் தேவைப்பாட்டின் அடிப்படையில் 03 மாதத்திற்கு முன்பு முன் அறிவித்திலின் பின்னர் எந்த சந்தர்ப்பத்திலும் மீண்டும் சபைக்கு சுவீகரிக்கும் தகைமை உண்டு.

தொ.பே. - 0112914110

**அட்டவணை**

| தொடர் இல | வர்த்தக நிலையம் | குறைந்தபட்ச கேள்வி | கேள்வி வைப்பு | படிவக் கட்டணம் | குத்தகைக்கு வழங்குவதற்கு குறித்த கால எல்லை |
|---|---|---|---|---|---|
| 01 | ஹுனுப்பிட்டிய ஜயந்தி மஹல் சந்தி 1.11 பேர்ச் காணித் துண்டு மற்றும் கட்டிடம் | ரூ. 232,000.00 | ரூ. 5,000.00 | ரூ. 3,000.00 | 2022.05.01 - 2024.12.31 |

**டபிள்யூ.டீ. சாந்தி குமுதினீ**
**தலைவர்**
**களனி பிரதேச சபை**

**2022.03.25**

**தேசிய மரபுரிமைகள், அருங்கலைகள் மற்றும் கிராமிய சிற்பக்கலைகள் மேம்பாட்டு அலுவல்கள் இராஜாங்க அமைச்சு**

# டவர் மண்டப அரங்க மன்றம்

# பதவி வெற்றிடங்கள்

டவர் மண்டப அரங்க மன்றத்தின் பணிப்பாளர் நாயகம் பதவி வெற்றிடத்திற்கு பின்வரும் தகுதிகளைப் பூர்த்தி செய்துள்ள இலங்கைப் பிரஜைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**பணிப்பாளர் நாயகம் பதவி - (HM 2-1) சிரேஷ்ட முகாமைத்துவ சேவை வகுதி**

இந்தப் பதவிகள் ஊழியர் சேமலாப நிதியம் மற்றும் ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியத்திற்கான உரித்துகளைக் கொண்ட நிரந்தர பதவிகளாகும்.

**பணி விபரம்**

பணிப்பாளர் நாயகம் பதவியானது டவர் மண்டப அரங்க மன்றத்தின் பிரதான நிறைவேற்றுநர் பதவியாகும் என்பதுடன் பொறுப்பாளர் சபையினால் தீர்மானிக்கப்படும் கொள்கைகளை செயற்படுத்தும் வேலையை நிறுவனத்தின் கட்டமைப்பின் ஊடாக நிறைவேற்றும் பிரதான பொறுப்பு இந்தப் பதவிக்குரியதாகும். பொறுப்பாளர் சபையை செயற்படுத்துதல் மற்றும் நிர்வாகத்தின் கீழ் பொறுப்பாளர் சபையினால் ஒப்படைக்கப்படும் அதிகார வேலைகளை செயற்படுத்தி நிறுவனத்தின் ஏனைய பணியாட் தொகுதியினருக்கு வழிகாட்டி தலைமைத்துவத்தை வழங்கி நிறுவனத்தின் ஒட்டுமொத்த நோக்கத்தை நிறைவேற்றும் பொறுப்பு இந்தப் பதவிக்குரியதாகும்.

**வெளிவாரி விண்ணப்பதாரிகளுக்குத் தேவையான அடிப்படைத் தகைமைகள் மற்றும் அனுபவம்**

(அ) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்திலிருந்து வியாபார முகாமைத்துவம், அரச முகாமைத்துவம், மனித வள முகாமைத்துவம், சட்டம், நாடகமும் அரங்கியலும், அருங்கலை, அழகியல் மற்றும் நுண்கலை, வெகுசன ஊடகம், கல்வியியல் போன்ற விடயத்துறையில் ஆரம்பப் பட்டத்துடன் பட்டப் பின்படிப்பு பட்டமொன்றைப் (Master) பெற்றிருத்தல்.

மற்றும்

பட்டத் தகைமையைப் பெற்றுக்கொண்டதன் பின் அரச, அரச கூட்டுத்தாபனத்தில் அல்லது அங்கீகரிக்கப்பட்ட தனியார் நிறுவனத்தில் முகாமைத்துவ மட்டப் பதவியொன்றில் 20 வருட அனுபவத்தைப் பெற்றிருத்தல் வேண்டும் என்பதுடன் இதில் 05 வருடங்கள் சிரேஷ்ட முகாமைத்துவ மட்டப் பதவியிலாக இருத்தல் வேண்டும்.

(ஆ) மேற்படி விடயங்களில் பெற்றுக்கொண்ட பட்டத்துடன் இயைபுடைய துறையில் கலாநிதிப் பட்டத்தைப் பெற்றிருத்தல் அல்லது கலாநிதிப் பட்டத்தைப் பெற்றுக்கொண்டதன் பின் அரச கூட்டுத்தாபனம், நியதிகள் சட்டச் சபையில் சிரேஷ்ட முகாமைத்துவ மட்டத்தில் குறைந்தபட்சம் 05 வருட காலம் அதிசிறந்த சேவை அறிக்கையைக் கொண்ட அதிகாரியாக அனுபவம்.

**சம்பள அளவு** : ரூபா 91645 - 2700x12 - 124,045/-

**வயது** : 35 வயதிற்குக் குறையாமலும் 55 வயதிற்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும். (அரச மற்றும் நியாயாதிக்கச் சபைகளில் சேவையாற்றுபவர்களுக்கு உச்ச வயதெல்லை ஏற்புடையதாகாது.)

**தெரிவு செய்யும் முறை:** கட்டமைக்கப்பட்ட நேர்முகத் தேர்வின் மூலம்

**இந்தப் பதவிக்குரித்தான வரப்பிரசாதங்கள்**

I. திறைசேரியினால் அங்கீகரிக்கப்பட்ட வாழ்க்கைச் செலவுப் படி மற்றும் தொழில்சார் கொடுப்பனவுகள் உட்பட ஏனைய அனைத்து அங்கீகரிக்கப்பட்ட கொடுப்பனவுகள்
II. அரச தொழில்முயற்சி சுற்றுநிருபம் 02/2022 பிரகாரம் தொலைபேசி கொடுப்பனவு
III. சாரதி சகிதம் உத்தியோகபூர்வ வாகனம் அல்லது PED 01/2015 மற்றும் PED 01/2015(i) ஆம் இலக்க அரச தொழில்முயற்சி சுற்றுநிருபத்தின் பிரகாரம் போக்குவரத்துக் கொடுப்பனவு
IV. 01/2015(ii)ஆம் இலக்க அரச தொழில்முயற்சி சுற்றுநிருபத்தின் பிரகாரம் மாதாந்த எரிபொருள் கொடுப்பனவு
V. நிறுவனத்தினால் செயற்படுத்தப்படும் மருத்துவ காப்புறுதித் திட்டத்தின் நன்மைகள்

மேற்குறிப்பிடப்பட்ட பதவிக்கான தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ள விண்ணப்பதாரர்கள் தமது விண்ணப்பப் படிவத்தை 2022-04-21ஆம் திகதிக்கு முன் பணிப்பாளர் (நிர்வாகம் மற்றும் அபிவிருத்தி), டவர் மண்டப அரங்க மண்டபம், சவ்சிரிபாய, இல. 123, விஜேராம மாவத்தை, கொழும்பு - 07 எனும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அல்லது அலுவலக நேரத்தில் நேரில் கொண்டு வந்து ஒப்படைத்தல் வேண்டும் என்பதுடன் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் பணிப்பாளர் நாயகம் பதவிக்கான விண்ணப்பப்படிவம் எனக் குறிப்பிடுதல் வேண்டும். அரச, கூட்டுத்தாபன, நியாயாதிக்கச் சபைகளில் சேவையாற்றும் விண்ணப்பதாரர்கள் தமது நிறுவனத்தின் தலைவரின் ஊடாக விண்ணப்பங்களைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

**கவனிக்கவும்:**
* அடிப்படை தகைமைகளைப் பூர்த்தி செய்திராத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.
* இது தொடர்பில் மேற்கொள்ளப்படும் சகல அழுத்தங்களும் தெரிவு செய்வதற்கு தகுதியீனமாகக் கருதப்படும்.

**பணிப்பாளர் நாயகம்,**
**டவர் மண்டப அரங்க மன்றம்,**
**சவ்சிறிபாய,**
**இல. 123, விஜேராம மாவத்தை,**
**கொழும்பு 07.** **விசாரணைகள்: பணிப்பாளர் (நிர்வாகம் மற்றும் அபிவிருத்தி) - 0112682324**

**இலங்கை சனநாயக சோஷலிச குடியரசு**
**நீர்ப்பாசன அமைச்சு**
**மகாவலி நீர்ப் பாதுகாப்புக்கான முதலீட்டுத் திட்டம் (MWSIP)**
**திட்ட முகாமைத்துவப் பணிமனை (PMU)**
**கடன் 3625-SRI**

## விலைமனு மூடப்படும் திகதியை நீடித்தல்

*(சர்வதேச போட்டி விலைமனுக்கள்)*

| ஒப்பந்த பெக்கேஜ் இன் பெயர் | ஒப்பந்த இலக்கம் | முன்னைய பத்திரிகை விளம்பரம் பிரசுரமான திகதி | விலைமனு சமர்ப்பிப்பதற்கான நீடிக்கப்பட்ட திகதி மற்றும் நேரம் |
|---|---|---|---|
| உள்ளக வெளியக உட்கட்டமைப்புக்கள் உள்ளடங்கலாக போவத்தன்னயிலிருந்து வேமெடில்ல நீர்த்தேக்கம் வரை (சுரங்கப்பாதை இல. 02) 8.5 கி.மீ நீளமான சுரங்கப்பாதையை நிர்மாணித்தல் | MI/MWSIP/ADB/WORKS/NWPCP-5/ICB/2021/033 | 2022.01.21 மற்றும் 2022.03.12 | 2022.04.19 மு.ப. 10.00 மணிக்கு (உள்ளூர் நேரம்) |

மேற்படி அட்டவணையில் குறிப்பிடப்படும் சம்பந்தப்பட்ட திகதி மற்றும் நேரத்திற்கு அல்லது அதற்கு முன் அடையுமாறு கீழே தரப்பட்டுள்ள முகவரிக்கு விலைமனுக்கள் விநியோகிக்கப்படும். அத்துடன் விலைமனுக்கள் மூடப்பட்டவுடன் உடனடியாக விலைமனுக்கள் திறக்கப்படும்.

**திட்டப் பணிப்பாளர்**
**மகாவலி நீர்ப் பாதுகாப்புக்கான முதலீட்டுத் திட்டம் (MWSIP)**
**திட்ட முகாமைத்துவ பணிமனை (PMU)**
**இல. 493 1/1, T.B. ஜாயா மாவத்த, கொழும்பு-10.**
**தொ.பே.இல. +94112675810, தொலைநகல் இல. +94112675227**
**மின்னஞ்சல் முகவரி: ebid.mwsip@gmail.com**

Repeat Your Ad For Better Offers

**விவசாயத் திணைக்களம்**
**பூங்காப் பயிர் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நிலையம்**
**கண்ணொருவ**

# விலைமனு அழைத்தல்

## Purchasing of Building Materials - HORDI

பூங்காப் பயிர் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நிலையத்தின் பெறுகைக்குழுத் தலைவரினால் கண்ணொருவ பூங்காப்பயிர் ஆராய்சசி மற்றும் அபிவிருத்தி நிலையத்தின் நிர்மாண நடவடிக்கைகளிற்காக கட்டிடப் பொருட்களைக் கொள்வனவு செய்து கொள்வதற்காக தேசிய விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரையிடப்பட்ட விலைமனுக் கோரப்படுகின்றது.

இதற்காக விலைமனுப்படிவம் ஒன்று மாத்திரம் உபயோகப்படுத்தப்படல் வேண்டும். மீளளிக்கப்படாத ரூபா 1000/- இற்கான தொகையை விவசாயத் திணைக்களத்தின் சிறாப்பருக்குக் காசாகச் செலுத்திப் பெற்றுக்கொள்ளும் பற்றுச்சீட்டை, த.பெ. 11, கண்ணொருவ, பேராதெனிய, என்ற முகவரியில் அமைந்துள்ள பூங்காப் பயிர் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நிறுவனத்தின் அலுவலகத்தில் சமர்ப்பித்து, ஆங்கில மொழியில் தயாரிக்கப்பட்டுள்ள விலைமனுப் படிவங்களை, 2022 மார்ச் 28 முதல் ஏப்ரில் 19 வரை வார வேலை நாட்களில் மு.ப. 9.00 முதல் பி.ப. 4.00 வரை பெற்றுக்கொள்ளலாம். மேலும் இதற்கான மேலதிக விபரங்கள் விலைமனுப்படிவங்களில் குறிப்பிடப்பட்டுள்ளதுடன், இதற்காக ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள், மேற்படி முகவரியில் இதற்கான ஆவணங்களை இலவசமாகப் பரிசீலனை செய்து கொள்ளலாம்.

அனைத்து விலைமனுக்களும், முத்திரையிடப்பட்ட உறைகளில் சேர்க்கப்பட்டு, அவ்வுறைகளின் இடது பக்க மேல் மூலையில் 'Perchaning of Building Materials - HORDI' எனக் குறிப்பிட்டு, 'தலைவர், பெறுகைக்குழு, பூங்காப் பயிர் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நிலையம், கண்ணொருவ, பேராதெனிய' என்ற முகவரிக்குப் பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும். அல்லது மேற்படி முகவரியிலுள்ள ஆவணத்தில் குறிப்பிட்டு பெறுகைப் பெட்டியிற் சேர்க்கலாம்.

2022 ஏப்ரில் 20 அன்று மு.ப. 10.30 இற்கு விலைமனுக்கள் மூடப்பட்டு உடனடியாக அவை திறக்கப்படும். அவ்வேளையில் விலைமனுதாரர்கள் அல்லது அவர்களின் எழுத்துருவ அதிகாரம் பெற்ற பிரதிநிதியொருவர் சமுகமளித்திருக்கலாம். தாமதமாகக் கிடைக்கப் பெறும் விலைமனுக்கள் நிராகரிக்கப்படும்.

அனைத்து விலைமனுக்களுடனும் இலங்கை மத்திய வங்கியினால் அங்கீகரிக்கப்பட்ட வணிக வங்கியொன்றிலிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட ரூபா 89,000.00 (எண்பத்தொன்பது ஆயிரம்) இற்கான வங்கி வரைவு ஒன்று விவசாயப் பணிப்பாளர் நாயகத்தின் பெயருக்குச் சமர்ப்பித்தல் வேண்டும். காசாகச் லெுத்துவதானால், பிணையம் ரூபா 44,500.00 (நாற்பத்தி நான்காயிரத்தி ஐநூறு) ஆகும் வங்கிப் பிணையத்தின் செல்லுபடிக் காலம் 2022.08.01 வரை ஆகுதல் வேண்டும்.

ஏதேனும் கொள்வனவு ஒன்றை அல்லது நிராகரிக்கும் உரிமை அல்லது அனைத்து விலைமனுக்களையும் நிராகரிக்கும் உரிமை பூங்காப் பயிர் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நிலையத்தின் பெறுகைக்குழுவிற்கு உரித்தாகும்.

**தலைவர்,**
**பிராந்தியப் பெறுகைக்குழு,**
**பூங்காப் பயிர் ஆராய்ச்சி மற்றும்,**
**அபிவிருத்தி நிலையம்,**
**கண்ணொருவ - பேராதெனிய.**
**2022.03.26**
**தொ.பே.இல: 081-2388011/12**

# விலைமனுக்களுக்கான அழைப்பு

## காத்தான்குடி நகர சபை

**காத்தான்குடி, திண்மக் கழிவு முகாமைத்துவ நிலையத்திற்கு உரத்தை சலிக்கும் இயந்திரத்தை (Compost Sieving Machine) வழங்குதல் மற்றும் பொருத்துதல்**

**ஒப்பந்த இலக்கம்: KUC/PL/CF/01/2022**

காத்தான்குடி, திண்மக் கழிவு முகாமைத்துவ நிலையத்திற்கு மீள்புதுப்பிக்கத்தக்க சக்தி வளங்கள் ஊடாக மின்சாரத்தை உற்பத்தி செய்தல் மற்றும் சூரிய சக்தி பெனல்களை அமைத்தல்
**ஒப்பந்த இலக்கம்: LDSP/EP/BT/KUC/PT II /2022/01**

தெரிவு செய்யப்பட்ட நகரங்களை அழகுபடுத்தும் முயற்சிகளை செயற்படுத்துதல் மற்றும் பசுமைப் பிரதேசங்களை அதிகரிக்க நகர்புர காடுகளை அபிவிருத்தி செய்தல்
**ஒப்பந்த இலக்கம்: LDSP/EP/BT/KUC/PT II /2022/02**

1. பின்வரும் அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள வேலைகளுக்காக தகுதி மற்றும் தகைமை வாய்ந்த விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்களை காத்தான்குடி நகர சபையின் சார்பில் உள்@ராட்சி பெறுகைக் குழுத் தலைவர் கோருகின்றார்.
2. விலைக்கோரல்கள் தேசிய போட்டி ரீதியிலான விலைக்கோரலின் (NCB) ஊடாக இடம்பெறும்.
3. ஒப்பந்தத்தை கையளிக்கப் பெறுவதற்கான தகுதியைப் பெறுவதற்கு, சித்திகரமான விலைமனுதாரர்கள் அபகீர்த்தியாளர் பட்டியலில் உள்ளாகியிருத்தல் கூடாது என்பதுடன் நிர்மாண கைத்தொழில் அபிவிருத்தி அதிகார சபையில் (CIDA) பின்வரும் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள தரத்திற்கான பதிவைப் பெற்றிருத்தல் வேண்டும்.
4. தகைமைத் தேவைப்பாடுகள் விலைமனு ஆவணத்தின் 4ஆம் பிரிவில் தரப்பட்டுள்ளன. மேலதிக விபரங்கள் விலைமனு ஆவணத்தின் அட்டவணையில் வழங்கப்பட்டுள்ளன. (03ஆம் இலக்க விடயத்திற்கு மட்டும் தகுதியானது)
5. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் மேலதிக தகவல்களை காத்தான்குடி நகர சபை செயலாளரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம் (தொ. பே. 0652245925) என்பதுடன் இதே இடத்தில் எந்தவொரு வேலை நாளிலும் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரை விலைமனு ஆவணங்களை இலவசமாகப் பரீட்சித்துப் பார்க்கலாம்.
6. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் மீளளிக்கப்படாத 2500.00 ரூபாவை நகர சபை காசாளர் கருமபீடத்திற்குச் செலுத்தி 2022-03-26ஆம் திகதி முதல் 2022-04-18ஆம் திகதி வரை மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரைக்கிடையில் காத்தான்குடி நகர சபை தலைவருக்கு எழுத்து மூலமான வேண்டுகோள் ஒன்றைச் செய்வதன் பேரில் ஆங்கில மொழியிலான விலைமனு ஆவணத் தொகுதியொன்றைக் கொள்வனவு செய்யலாம்.
7. விலைமனுக்களை 2022-04-18ஆம் திகதி பி.ப. 3.00 மணிக்கு முன்னர் கிடைக்கச் செய்தல் வேண்டும். பிந்திய விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். விலைக்கோரலில் கலந்துகொள்வதற்கு விலைமனுதாரர்களினால் தெரிவு செய்யப்பட்டுள்ள சமுகம் தந்துள்ள பிரதிநிதிகளின் முன்னிலையில் விலைமனுக்கள் முடிவுறுத்தப்பட்டு உடன் திறக்கப்படும்.
8 விலைமனுக்கள் சமர்ப்பிக்கப்பட்ட இறுதி நாள் முதல் 77 (எழுபத்தேழு) நாட்களுக்கு விலைமனுக்கள் செல்லுபடியாதல் வேண்டும்.
9. அட்டவணையில் வழங்கப்பட்டுள்ள தகவல்களின் பிரகாரம் விலைமனுப் பிணையொன்று விலைமனுக்களுடன் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.
10. விலைக்கோரல் முன்னோடிக் கூட்டம் 2022-04-12ஆம் திகதி மு.ப. 10.30 மணிக்கு காத்தான்குடி நகர சபையில் இடம்பெறும். ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் தங்களது சொந்த செலவில் இந்தக் கூட்டத்தில் கலந்துகொள்ளலாம்.

| உருப்படி இல. | விலைக்கோரல் இலக்கம் | வேலைகளின் விபரம் | ஒப்பந்தக் காலம் | தேவையான தரம் அல்லது வழங்குநர் | தேவையான விலைமனுப் பிணை முறி | |
|---|---|---|---|---|---|---|
| | | | | | பிணை முறித் தொகை | செல்லுபடிக் காலம் |
| 01 | KUC/PL/A/CF/01/2022 | காத்தான்குடியிலுள்ள திண்மக் கழிவுப்பொருள் முகாமைத்துவ நிலையத்திற்கு உரத்தை சலிக்கும் இயந்திரத்தை வழங்குதல் மற்றும் பொருத்துதல் (4-6 மணி நேர செயற்பாட்டில் 20-25 தொன் உரத்தை சலித்தல்) | 3 மாதங்கள் | | 100,000.00 | 105 நாட்கள் |
| 02 | LDSP/EP/BT/KUC/PT II /2022/01 | காத்தான்குடி, திண்மக் கழிவு முகாமைத்துவ நிலையத்திற்கு மீள்புதுப்பிக்கத்தக்க சக்தி வளங்கள் ஊடாக மின்சாரத்தை உற்பத்தி செய்தல் மற்றும் சூரிய சக்தி பெனல்களை அமைத்தல் (குறைந்தபட்சம் 40kw) | 3 மாதங்கள் | | 60,000.00 | 105 நாட்கள் |
| 03 | LDSP/EP/BT/KUC/PT II /2022/02 | தெரிவு செய்யப்பட்ட நகரங்களை அழகுபடுத்தும் முயற்சிகளை செயற்படுத்துதல் மற்றும் பசுமைப் பிரதேசங்களை அதிகரிக்க நகர்புர காடுகளை அபிவிருத்தி செய்தல் (தடாகப் பூங்காவை அழகுபடுத்துதல்) | 3 மாதங்கள் | C8 மற்றும் C7 | 24,620.00 | 105 நாட்கள் |

**S.H.M. அஸ்பர் JP UM**
**தலைவர்,**
**பெறுகைக் குழு,**
**நகர சபை, காத்தான்குடி.**
2022-03-26

# 36 நாள் பயணமாக அவுஸ்திரேலிய அணி ஜூன் மாதம் இலங்கைக்கு விஜயம்



இலங்கைக்கு எதிரான 2 போட்டிகள் கொண்ட டெஸ்ட், ஒருநாள் மற்றும் ரி 20 தொடரில் விளையாடுவதற்காக அவுஸ்திரேலிய கிரிக்கெட் அணி வரும் ஜூன் மாதம் இலங்கை வரவுள்ளது. இந்த சுற்றுப் பயணத்தில் மூன்று ரி 20 போட்டிகள், ஐந்து ஒருநாள் போட்டிகள் மற்றும் இரண்டு டெஸ்ட் போட்டிகள் உள்ளன.

ஜூன் மாதம் 7ஆம் திகதி கொழும்பில் ரி 20 தொடர் பிரேமதாச மைதானத்தில் இடம் பெறவுள்ளதுடன் ஜூலை 8 முதல் 12 வரை காலி சர்வதேச கிரிக்கெட் மைதானத்தில் டெஸ்ட் போட்டிகள் நடைபெறவுள்ளது.

2016ஆம் ஆண்டு இலங்கைக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டதன் பின்னர் முதன்முறையாக இலங்கைக்கு விஜயம் செய்யும் அவுஸ்திரேலிய அணி 36 நாட்கள் இலங்கையில் விளையாடவுள்ளது. அதைத் தொடர்ந்து 3 போட்டிகள் கொண்ட ரி 20 தொடர், 5 போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடர் மற்றும் 2 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடர் என தொடரும்.

இரண்டு டெஸ்ட் போட்டிகளும் காலி சர்வதேச மைதானத்தில் நடைபெறவுள்ளது. கொழும்பு ஆர்.பிரேமதாச மற்றும் பல்லேகல சர்வதேச கிரிக்கெட் மைதானத்தில் இடம்பெறவுள்ளது.

| திகதி | போட்டி | இடம் |
|---|---|---|
| 7 ஜுன் 2022 | 01வது ரி 20 | ஆர். பிரேமதாச மைதானம், கொழும்பு |
| 8 ஜுன் 2022 | 02வது ரி 20 | ஆர். பிரேமதாச மைதானம், கொழும்பு |
| 11 ஜுன் 2022 | 03வது ரி 20 | படங்கள், கண்டி |
| 14 ஜுன் 2022 | 01வது ஒரு நாள் போட்டி | கண்டி |
| 16 ஜுன் 2022 | 02வது ஒரு நாள் போட்டி | கண்டி |
| 19 ஜுன் 2022 | 03வது ஒரு நாள் | ஆர். பிரேமதாச மைதானம், கொழும்பு |
| 21 ஜுன் 2022 | 04வது ஒரு நாள் | ஆர். பிரேமதாச மைதானம், கொழும்பு |
| 24 ஜுன் 2022 | 05வது ஒரு நாள் | ஆர். பிரேமதாச மைதானம், கொழும்பு |
| ஜுன் 29 முதல் ஜுலை | 01வது டெஸ்ட் 3, 2022 வரை | காலி சர்வதேச கிரிக்கெட் மைதானம் |
| 2022 ஜுலை | 02வது டெஸ்ட் | காலி சர்வதேச கிரிக்கெட் மைதானம் |
| | 08 முதல் 12 வரை | |

# வடக்கு மாசிடோனியாவின் அதிர்ச்சித் தோல்விக்கு பின்னர் இத்தாலி உலகக் கிண்ணத்தில் தகுதி பெற தவறியது



ராபர்டோ மான்சினியின் இத்தாலி அணி இந்த போட்டியில் கோல் அடிக்க 32 முயற்சிகளை மேற்கொண்டது, ஆனால் எப்படியோ தோல்வியடைந்தது, வடக்கு மாசிடோனியா அடுத்த வாரம் பிளே ஓஃப் இறுதிப் போட்டியில் போர்த்துக்கலுடன் மோதவுள்ளது.

காயம் காரணமாக சிரோ இம்மொபைல் ஒரு நல்ல நிலையில் இருந்து பட்டியில் மீது எரியும் போது இத்தாலிக்கு ஒரு புகழ் பெற்ற முதல் பாதி வாய்ப்பை வீணடித்தார்.

இடைவேளைக்குப் பிறகு பெரார்டி மீண்டும் மோசமான குற்றத்திற்காக குற்றம் சாட்டப்பட்டார், அவர் எப்போது இலக்கைத் தாக்கியிருக்க வேண்டும் என்பதைச் சுட்டார்.

போட்டி தொடர்ந்தபோது, இத்தாலியின் நரம்புகள் உதைத்தன, அவற்றின் முடிவு இன்னும் ஒழுங்கற்றதாக மாறியது. மான்சினி தனது பேக்கைக் கலக்கினார், காக்லியாரி ஸ்ட்ரைக்கர் ஜோவா பெட்ரோவுக்கு தனது அறிமுகத்தை வழங்கினார், ஆனால் போட்டியின் ஒரே அர்த்தமுள்ள தாக்குதலால், வடக்கு மாசிடோனியா அவர்களின் வாய்ப்பைப் பயன்படுத்திக் கொண்டார்.



அலெக்ஸாண்டர் டிராஜ்கோவ்ஸ்கியின் கடைசி அபார ஆட்டத்தால் பார்வையாளர்களுக்கு ஒரு பிரபலமான வெற்றியைப் பெற்றுத்தந்ததால், வியாழக்கிழமை நடைபெற்ற பிளேஓஃப் அரையிறுதியில் வடக்கு மாசிடோனியாவிடம் 10 என்ற கோல் கணக்கில் தோல்வியுற்ற பின்னர் இத்தாலி மீண்டும் உலகக் கிண்ண போட்டியைத் தவறவிட்டது.

ஐரோப்பிய சம்பியன் இத்தாலி நான்கு ஆண்டுகளுக்கு முன்பு உலகக் கிண்ணத்தில் தகுதி பெறவில்லை, 1958 முதல் கால்பந்தின் உலகளாவிய ஷோபீஸ் போட்டியை அடைய அவர்களின் முதல் தோல்வி, ஆனால் அவர்கள் பலேர்மோவில் ஓஃப் இருந்து ஆதிக்கம் செலுத்தி வெற்றிக்கான போக்கைப் பார்த்தனர்.

இடைவேளைக்குப் பிறகு ஒரு வெற்றியாளரைத் தேடுவதில் மிகவும் அவநம்பிக்கையடைந்தனர், ஏனெனில் வாய்ப்புகள் தொடர்ந்து வந்து போவதற்கு முன்பு, நிறுத்த நேரத்தில், ட்ராஜ்கோவ்ஸ்கி காட்டு வடக்கு மாசிடோனிய கொண்டாட்டங்களைத் தூண்டுவதற்கு ஒரு அதிர்ச்சியூட்டும் வெற்றியாளரை அம்புக்குறியிட்டார்.

லியனார்டோ போனுசி மற்றும் ஜியோர்ஜியோ சியெல்லினி ஆகியோருடன் மூத்த ஜோடி இல்லாமல், இத்தாலியின் தற்காலிக தற்காப்பு முதல் பாதியில் சிறிதும் தொந்தரவாக இல்லை, ஏனெனில் அனைத்து நடவடிக்கைகளும் மறுமுனையில் நடந்தன.

வடக்கு மாசிடோனியா கோல் கீப்பர் ஸ்டோல் டிமிட்ரிவ்ஸ்கி ஒரு பாஸை தவறவிட்ட பிறகு டோமினிகோ பெரார்டி பந்தை வழங்கியதில் சிறந்த ஆரம்பத்தை கொண்டிருந்தார், ஆனால் சாசுவோலோ முன்னோக்கிய ஷொட் நிதானமாக இருந்தது, டிமிட்ரிவ்ஸ்கி சேவ் செய்ய திரும்பினார்.

இத்தாலி அதிக ஆபத்தில் இருப்பதாகத் தெரியவில்லை, ஆனால் அல்ஃபயாவுக்காக சவூதி அரேபியாவில் விளையாடும் டிராஜ்கோவ்ஸ்கிக்கு வேறு யோசனைகள் இருந்தன, வடக்கு மாசிடோனியா தனது பெயரை எழுதியது, அவர்களது இரசிகர்களை திகைக்க வைக்கும் ஒரு ஷொட் மூலம் இடுகையின் உள்ளே நுழைந்தது.

# ஏ.எஸ்.பீ னால் பாலமுனையில் சீருடை வழங்கல்



பாலமுனை தினகரன்,பாலமுனை கிழக்கு தினகரன் நிருபர்கள்

பாலமுனை அல் - அறபா விளையாட்டுக்கழகத்தின் கடின பந்துக்கான சீருடை அறிமுகமும், வீரர்கள் கௌரவிப்பும் கழகத்தின் தலைவர் ஏ.ஜீ.அஸ்மின் தலைமையில் நடைபெற்றது.

பாலமுனையில் கழக வீரர்களின் பங்கு பற்றலுடன் இடம் பெற்ற இந் நிகழ்வில் பிரதம அதிதியாக உதவி பொலிஸ் அத்தியட்சகர் எம்.கே.இப்னு அஸார் பிரதம அதிதியாகவும் சிரேஷ்ட சட்டத்தரணி எம்.எச். ஹஸ்ஸான் றூஸ்தி கௌரவ அதிதியாகவும் கலந்து கொண்டனர்

பாலமுனை மண்ணில் சிறப்பாக இயங்கி வரும் இக் கழகத்தின் செயற்பாட்டி பாராட்டிய அதிதிகள் எதிர் காலத்தில் கழகத்திற்கு தேவையான சகல ஆலோசனைகளையும் வழங்குவதோடு முடியுமான உதவிகளை செய்து தருவதாகவும் குறிப்பிட்டனர்.

விளையாட்டு உத்தியோகத்தர் எம்.எச்.அஜ்வத்,கிராம உத்தியோகத்தர் எம்.எஸ்.எம்.இப்றாகிம்,அதிபர் கே.எல்.உபைத்துல்லா உட்பட கழக உறுப்பினர்களும் கலந்து கொண்டனர்.

நிகழ்வில் அதிதிகள் கழகத்தினால் பொன்னாடை போத்தி கௌரவிக்கப்பட்டனர்.

# கிழக்கின் முதல் புற்தரை கிரிக்கெட் மைதானம் ஏப்ரல் 3 ம்திகதி திறப்பு



கிழக்கு மாகாண கிரிக்கெட் வீரர்களுக்கு மகிழ்ச்சி தரும் விடயமாக, அம்மாகாணத்தின் முதல் புற்தரை (Turf) கிரிக்கெட் அரங்கு ஏப்ரல் மாதம் 03ஆம் திகதி மட்டக்களப்பில் திறந்து வைக்கப்படவுள்ளது.

இலங்கையில் இருந்து புலம்பெயர்ந்து வாழும் கோட்டைமுனை விளையாட்டுக் கழக அங்கத்துவர்களின் நிதி உதவியோடு, இந்த மைதானம் மட்டக்களப்பு மாவட்டத்தின் மண்முனை வடக்குப் பிரதேச செயலகப் பிரிவில் உள்ள சத்துருக்கொண்டானில், கோட்டைமுனை விளையாட்டுக் கிராமத்தினால் நிர்மாணிக்கப்பட்டிருக்கின்றது.

கோட்டைமுனை விளையாட்டுக் கிராம அமைப்பானது பல்லின மக்கள் வாழ்கின்ற மட்டக்களப்பு மாவட்டத்தின் கிரிக்கெட் விளையாட்டினை மேம்படுத்தும் நோக்குடன் இந்த மைதானத்தினை நிர்மாணம் செய்திருக்கின்றமை குறிப்பிடத்தக்க விடயமாகும்.

கடந்த 2017ஆம் ஆண்டு இலங்கையின் முதல் டெஸ்ட் அணித் தலைவர் பந்துல வர்ணபுரவின் ஆளுகையில் இந்த மைதானத்தின் நிர்மாணப் பணிகள் ஆரம்பம் செய்யப்பட்டிருந்திருந்தன. இந்த மைதானம் முன்னரே கட்டி முடிக்க எதிர்பார்க்கப்பட்டிருந்த போதும் கொவிட்19 வைரஸ் தொற்று அடங்கலாக நாட்டின் சில அசாதாரண சூழ்நிலைகள் அதனை பிற்போட்டிருந்தன.

தற்போது பிரமாண்டமான முறையில் அமைக்கப்பட்டிருக்கும் இந்த மைதானத்தில் 30 கிரிக்கெட் வீரர்கள் ஒரே நேரத்தில் தங்கி பயிற்சிகளை மேற்கொள்ளக்கூடிய வசதிகள் செய்யப்பட்டிருப்பதோடு, மைதானத்தின் நடுவே ஐந்து புற்தரை களங்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன.

அதேநேரம் வீரர்களின் பயிற்சிக்காக இங்கே ஆறு வலைப்பயிற்சி மையங்களும் உருவாக்கப்பட்டிருப்பதோடு, அதிநவீன இலத்திரனியல் ஸ்கோர் பலகை , நகர்த்தக்கூடிய கறுப்பு வெள்ளை பார்வைத்திரை என்பனவும் காணப்படுகின்றன.

அத்துடன் இந்த மைதானத்தில் இருக்கும் புற்களை தொடர்ச்சியாக பராமரிப்புச் செய்வதற்காக விஷேடமாக வெளிநாட்டில் இருந்து தருவிக்கப்பட்ட இயந்திரங்களும், அதிநவீன நீர்க்கருவிகளும் காணப்படுகின்றன.

இந்த மைதானத்தின் எல்லை அளவுகள் சுமார் 80 மீட்டர் வரையில் இருப்பதுடன், இந்த மைதானம் மட்டக்களப்பு மாவட்டத்தில் சுற்றுலாப் பிரயாணிகளின் ஒரு ஈர்ப்பிடமாகவும் இருக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இந்த மைதானத்தின் உருவாக்கியவர்களின் எதிர்பார்ப்பு மட்டு மாவட்டத்தில் இருந்து ஒரு வீரராவது தேசிய கிரிக்கெட் அணியில் விளையாட வேண்டும் என்பதாக உள்ளது என கோட்டைமுனை விளையாட்டுக் கிராம அமைப்பின் உறுப்பினர்களில் ஒருவர் தெரிவித்திருந்தார்.

இந்த மைதானத்தின் ஆரம்ப நிகழ்வின் போது இலங்கை கிரிக்கெட் அணியின் 1996ஆம் ஆண்டு உலகக் கிண்ண நாயகர்கள் மற்றும் மட்டக்களப்பு ஹீரோஸ் பங்குபெறும் கண்காட்சி ரி 20 போட்டி ஒன்றும் ஒழுங்கு செய்யப்பட்டிருக்கின்றது.

இந்தக் கண்காட்சிப் போட்டியில் இலங்கை கிரிக்கெட் அணியின் முன்னாள் வீரர்களான சனத் ஜயசூரிய, அர்ஜூன ரணதுங்க, அரவிந்த டி சில்வா, ரொமேஷ் களுவிதாரன மற்றும் சமிந்த வாஸ் போன்ற முன்னணி வீரர்கள் கலந்து கொள்ளவிருக்கின்றமையும் குறிப்பிடத்தக்கது.

# 73வது மிஸ்டர் ஸ்ரீலங்கா கட்டுடல் ஆணழகன் போட்டி: விமானப்படை வீரருக்கு தங்கப் பதக்கம்



2021 ம் ஆண்டுக்கான மிஸ்டர் ஸ்ரீலங்கா ஆணழகன் போட்டியில் இலங்கை விமானப்படை கட்டுடல் ஆணழக வீரர் தங்கப்பதக்கம் வென்றார்.

இலங்கை உடற்கட்டமைப்பு மற்றும் உடற்தகுதி சம்மேளனத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட 73வது மிஸ்டர் ஸ்ரீலங்கா கட்டுடல் ஆணழகன் போட்டிகள் கடந்த 2022 மார்ச் 19 ம் திகதி வெலிசர நவலோக மைதானத்தில் நடைபெற்றது.

2021 ம் ஆண்டுக்கான மிஸ்டர் ஸ்ரீலங்கா ஆணழகன் போட்டியில் 85கிலோ எடை பிரிவில் விமானப் படை சிரேஷ்ட விமானப்படை வீரர் சமிந்த பீரிஸ் அவர்கள் தங்கப்பதக்கம் வென்றார் அத்துடன் அதே பிரிவில் வெள்ளிப்பதக்கத்தினையும் இலங்கை விமானப்படை வீரர் கோப்ரல் சமரசிங்க அவர்களும் 90 கிலோ பிரிவில் சிரேஷ்ட விமானப்படை வீரர் விஜயசூரிய 06வது இடத்தினை பெற்றார் இந்த போட்டித்தொடரில் முப்படை வீரர்கள் உட்பட 200போட்டியாளர்கள் பங்குபற்றினர்.

# அக்கரைப்பற்று ஹிஜ்ரா அணி சம்பியன்

ஒலுவில் கிழக்கு தினகரன் நிருபர்



அக்கரைப்பற்று சம்பியன்ஸ் லீக் சுற்றுப் போட்டியில் அக்கரைப்பற்று லெஜண்ட்ஸ் அணியினரை வீழ்த்தி அக்கரைப்பற்று ஹிஜ்ரா அணி சம்பியனானது.

பல மாதங்களாக நடைபெற்று வந்த 20 ஓவர்கள் மட்டுப்படுத்தப்பட்ட அணிக்கு 11 பேர் கொண்ட அக்கரைப்பற்று சம்பியன்ஸ் லீக் கடின பந்து கிரிக்கெட் சுற்றுப் போட்டியின் இறுதிப் போட்டியும் பரிசளிப்பு விழாவும் (20.03.2022) அக்கரைப்பற்று பொதுவிளையாட்டு மைதானத்தில் இடம்பெற்றது.

அக்கறைப்பற்றை சேர்ந்த 06 விளையாட்டுக் கழகங்கள் பங்கேற்ற இந்த சுற்றுப் போட்டியின் இறுதிப் போட்டி அக்கரைப்பற்று லெஜண்ட்ஸ் விளையாட்டுக் கழகத்திற்கும் அக்கரைப்பற்று ஹிஜ்ரா விளையாட்டுக் கழகத்திற்கும் இடையில் இடம்பெற்றது.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற அக்கரைப்பற்று லெஜண்ட்ஸ் விளையாட்டு கழகம் முதலில் துடுப்பெடுத்தாடி 20 ஓவர்கள் முடிவில் 09 விக்கட்டுக்களை இழந்து 118 ஓட்டங்களை பெற்றது. இதில் அதிரடியாக துடுப்பெடுத்தாடிய துடுப்பாட்ட வீரர் முஹம்மத் றிஸாம் 59 ஓட்டங்களை பெற்றுக்கொண்டார். பதிலுக்கு 119 ஓட்டங்களை இலக்காக கொண்டு வெற்றி பெற துடுப்பெடுத்தாடிய அக்கரைப்பற்று லெஜண்ட்ஸ் விளையாட்டு கழகம் ஆரம்பம் முதல் அதிரடியாக துடுப்புபெடுத்தாடி வந்த நிலையில் பின்னணி துடுப்பாட்ட வீரர்கள் சுழல்பந்துகளுக்கு முகங்கொடுக்க முடியாமல் திணறி அடுத்தடுத்து விக்கட்டுக்களை இழந்தனர். இருந்தாலும் ஆரம்ப துடுப்பாட்ட வீரர்களின் அதிரடியாட்டம் காரணமாக 16.2 ஓவர்கள் முடிவில் 08 விக்கட்டுக்களை இழந்து 02 விக்கட்டுக்கள் வித்தியாசத்தில் ஹிஜ்ரா அணி சம்பியனானது.

இத்தொடரின் தொடராட்டக்காரர் விருதை 78 ஓட்டங்களையும், 14 விக்கட்டுக்களையும் வீழ்த்திய றோயல் அணி வீரர் அஸார் தனதாக்கி கொண்டார்.

இறுதியாட்ட நாயகனாக 40 பந்துகளுக்கு 56 ஓட்டங்களை பெற்ற அக்கரைப்பற்று ஹிஜ்ரா அணி வீரர் றிசாட் தனதாக்கினார்.

பரிசளிப்பு நிகழ்வில் அக்கரைப்பற்று மாநகர சபை உறுப்பினரும் அக்கரைப்பற்று அனைத்துப்பள்ளிவாசல் சம்மேளன தலைவர் எஸ்.எம். சபீஸ் பிரதம அதிதியாக கலந்து கொண்டு வெற்றிக்கேடயங்களை வழங்கி வைத்தார்.

இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2022 மார்ச் மாதம் 26ம் திகதி சனிக்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.